
# மீட்பளிக்கும் கிறிஸ்து



௨-ம் வகுப்புக்கான

றைக்கல்வித் துணைநூல்

230
யாழ்

கு
கந்
உ
ள
டே
ப
கி
அ
ப
ச
வு
து

வ
ம
நி
வ

# எம்முரை

'மறைக்கல்வி மனிதனை அவனது அன்றாட வாழ்க்கைச் சூழ்நிலையில், அவனுடைய எல்லாத் தேவைகளோடும் ஏக்கங்களோடும் அவனது அன்றாட வாழ்வைப் பாதிக்கின்ற உலகியலைச் சார்ந்த, மறையைச் சார்ந்த, சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார நிகழ்ச்சிகளோடும் கண்ணோக்க வேண்டும். நற்செய்தியின் ஒளியில் இவற்றைப் பற்றி யெல்லாம் சிந்திக்கவேண்டும்' என்று ஆயர் பேரவைக்கான விவாதப் பொருளின் வழிமுறைகள் குறிப்பிடுகின்றன. மறைக் கல்வி நூல்கள் குழந்தையின் வயதின் அடிப்படையிலும், குடும்ப சூழ்நிலை, சமுதாய சூழ்நிலை, பள்ளிச் சூழ்நிலை ஆகியவற்றின் அடிப்படையிலும் திருச்சபை வாழ்வில் பங்கேற்கும் அடிப்படையிலும் சிந்திக்கவும், பாட நூல்களை அமைக்கவும் வழிமுறைகள் பரிந்துரைக்கின்றன.

இப்புதிய பாடநூல் திருச்சபை விரும்பும் விசுவாச வளர்ச்சியையும், கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியையும் மாணவர்களில் ஏற்படுத்தவும், கிறிஸ்துவினுடைய மனநிலைகளைத் தமதாக்கிக் கொண்டவர்களாக, மறு கிறிஸ்துவாக உருவாக்கப்படவும் சிறந்த கருவியாக அமையும்.

– யாழ்-மறைக்கல்விக் குழு.

EVELYN RUTNAM INSTITUTE REFERENCE LIBRARY JAFFNA 165

CENTRE FOR COMMUNAL HARMONY THE MEDIA P.O. BOX 6 01 COLOMBO

## உள்ளே . . . . .


பக்கம்

ஆய்வுப் பொருள் 1. நாம் காணும் உலகு

1. நான் யார்? ... ... 1
2. நான் கடவுளின் பிள்ளை ... ... 4
3. நான் வாழும் உலகு ... ... 6

ஆய்வுப் பொருள் 2.

அடையாளங்கள் வழியாக எம்முடன் பேசும் இறைவன்

4. கடவுள் தம்மை அடையாளங்கள் வழியாக எமக்கு வெளிப்படுத்துகிறார் ... 9
5. படைப்பின் வழியாக இறைவனைக் காண்போம் 12
6. என்னில் கொண்டுள்ள அளவிலா அன்பினால் இறைவன் அனைத்தையும் படைத்தார் ... 15
7. கடவுள் படைப்பின் முதல்வனாக மனிதனைப் படைத்து, படைப்பு எல்லாவற்றையும் அவனிடம் ஒப்படைத்துள்ளார் 17

ஆய்வுப் பொருள் 3.

அடிமைத்தனத்திலிருந்து விடுதலைக்கு இட்டுச்செல்லும் இயேசு

8. அடிமைத்தனமும் விடுதலையும் ... 19
9. மனிதன் இறைவனின் அன்புத்திட்டத்தை ஏற்க மறுத்ததால் ஏற்பட்ட விளைவு I, துன்பம், வேதனை, மரணம் 21
10. இறைவனின் அன்பை மனிதன் புறக்கணித்ததால் ஏற்பட்ட விளைவு II ... ... 23
11. வீழ்ச்சி அடைந்த மனிதனை மீட்கக் கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தார் I மீட்புப்பற்றிய வாக்குறுதி ... 25
12. வீழ்ச்சி அடைந்த மனிதனை மீட்கக் கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தார் II மனித அவதாரம் ... 27
13. மீட்பின் நற்செய்தி I கிறிஸ்துவின் பகிரங்க வாழ்வு 29
14. மீட்பின் நற்செய்தி II கிறிஸ்து இறைமகன் என்று சான்று பகர்கிறார் ... ... 31
15. கிறிஸ்து தந்தையிடம் செல்லும் வழியைக் காட்டுகிறார் I போதனை ... ... 34
16. கிறிஸ்து தந்தையிடம் செல்லும் வழியைக் காட்டுகிறார் II புது வாழ்வு அளிக்கிறார் ... ... 36
17. கிறிஸ்து தந்தையிடம் செல்லும் வழியைக் காட்டுகிறார் III எடுத்துக்காட்டு ... ... 38
18. பாஸ்கா மறைபொருள் வழியாகக் கிறிஸ்து எங்களைத் தந்தையோடு ஒப்புரவாக்குகிறார் I ... 40
19. பாஸ்கா மறைபொருள் வழியாகக் கிறிஸ்து எங்களைத் தந்தையோடு ஒப்புரவாக்குகிறார் II ... 42

EVELYN RUTNAM INSTITUTE REFERENCE LIBRARY JAFFNA

20. உயிர்த்த கிறிஸ்து எமக்குப் புதுவாழ்வு அளிக்கிறார் 45
21. திருமுழுக்கு ... ... 47
22. திவ்விய நற்கருணை ... ... 49
23. பச்சாத்தாபமும் நோயில் பூசுதலும் 51

ஆய்வுப் பொருள் 4
படைப்பு அனைத்தையும் புதுப்பிக்கும் கிறிஸ்து புதுப்பிக்கிறார்
24. எல்லாப் படைப்பும் தொடக்கமும் முடிவும் உள்ளவை 53
25. இறவாப் பெருவாழ்வை அருளுபவர் இறைவன் .. 55
26. படைப்பில் பங்குகொள்ள நாம் அழைக்கப்பட்டுள்ளோம் 57
27. விஞ்ஞான அறிவு படைப்பின் தன்மையை மதிப்பிட உதவுகிறது ... ... 59
28. படைப்பை நிறைவாக்கவும். அதை விருத்திசெய்யவும் விஞ்ஞான வளர்ச்சி உதவுகிறது ... 61
29. படைப்பை புதுப்பிக்கும் பணியில் பங்குகொள்ள நான் பெறும் உதவி I கட்டளை 1, 2, 3 ... 63
30. படைப்பைப் புதுப்பிக்கும் பணியில் பங்குகொள்ள நான் பெறும் உதவி II விசுவாசம் நம்பிக்கை ... 66
31. படைப்பைப் புதுப்பிக்கும் பணியில் பங்குகொள்ள நான் பெறும் உதவி III இறையன்பு ... 69

ஆய்வுப் பொருள் 5 பொறுப்புக்களை ஏற்கும் மனிதன்
32. எனது அழைப்பை ஏற்க நான் தயாரா? ... 71
33. கிறிஸ்து எம்மை புதுவாழ்வுக்கு உயர்த்தினார் – இதனால் புது வாழ்வை அனைத்திற்கும் அளிப்போம் ... 74
34. இறைவன் மட்டிலும், மனிதர் மட்டிலும் பொறுப்பை ஏற்கும்படி கிறிஸ்து என்னை அழைக்கிறார் I நன் முன்மாதிரிகை 76
35. இறைவன் மட்டிலும், மனிதர் மட்டிலும் பொறுப்பை ஏற்கும்படி கிறிஸ்து என்னை அழைக்கிறார் II திருவருட்சாதம் 79
36. எமது கிறிஸ்தவ அழைப்பு நமது பண்பாட்டுடன் இயைந்த ஒழுக்கத்தையும், நேர்மையான வாழ்வையும் மேற்கொள்ளப் பயிற்சி அளிக்கிறது ... ... 81
37. எனது கிறிஸ்தவ அழைத்தலுக்கு விடை அளிக்க பரி. ஆவி என்னில் செயற்பட்டு திடமும் அளிக்கிறார் – உறுதிப்பூசுதல் 84
38. இறைவனுடன் ஒன்றிணைந்த வாழ்வு வாழ நான் அழைக்கப்பட்டுள்ளேன் .. ... 86

ஆய்வுப் பொருள் 6

உடன்படிக்கை அடிப்படையில் உருவாக்கவேண்டிய புதிய சமுதாயம்


39. சமுதாய வாழ்வுக்கு அழைக்கப்பட்ட மனிதன் தன்னலம் நாடுதல் ஏன்? ... ... 88

40. சமுதாயமும் வாழும் முறையும் I கட்டளைகள் ... 90

41. சமுதாயமும் வாழும் முறையும் II 4ஆம் கட்டளை ... 92

42. சமுதாயமும் வாழும் முறையும் III 5ஆம் கட்டளை 94

43. சமுதாயமும் வாழும் முறையும் IV 6ஆம், 9ஆம் கட்டளைகள் 96

44. சமுதாயமும் வாழும் முறையும் V 7ஆம், 10ஆம் கட்டளைகள் 98

45. சமுதாயமும் வாழும் முறையும் VI 8ஆம் கட்டளை 101

46. சமுதாயமும் வாழும் முறையும் VII கட்டளைகளும்பேறுகளும் 103

47. திவ்விய பூசைப்பலி இறைமக்களை ஒன்றுக இணைக்கிறது I 106

48. திவ்விய பூசைப்பலி இறைமக்களை ஒன்றுக இணைக்கிறது II 108

49. திவ்விய பூசைப்பலி இறைமக்களை ஒன்றுக இணைக்கிறது III 110

50. திவ்விய பூசைப்பலி இறைமக்களை ஒன்றுக இணைக்கிறது IV 112

51. திருமணம் சகோதரத்துவம் நிலவும் உடன்படிக்கைச் சமுதாயத்தை வளர்க்கிறது ... ... 114

52. குருத்துவம் சகோதரத்துவம் நிலவும் உடன்படிக்கைச் சமுதாயத்தை வளர்க்கிறது ... ... 116

53. துறவற வாழ்வும் பொதுநிலை வாழ்வும் சகோதரத்துவம் நிலவும் உடன்படிக்கைச் சமுதாயத்தை வளர்க்கிறது 118


ஆய்வுப் பொருள் 7 சகோதரத்துவத்தின் மறுமலர்ச்சி


54. சமுதாய ஒருமைப்பாடு ... ... 120

55. இறையரசில் என் தாய்நாட்டின் இடம் ... 122

56. நாட்டுப் பணியில் கிறிஸ்தவனின் பொறுப்பு ... 124


பின் இணைப்பு, எம் நாட்டுப் பிறமறைகள்


57. புத்தர் பெருமான் ... ... 127

58. முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) ... 131

59. இந்து சமயம் .. ... 137

பாடம் 1

# நான் யார்?

அடுத்த பக்கத்தில் உள்ளவை விரல் அடையாளங்களின் பதிவுகள். ஒரேமாதிரியான இரண்டு விரல் அடையாளப் பதிவுகளைக் காட்ட முடியுமா? ஒரு தாளில் உமது விரல் அடையாளத்தைப் பதித்து, அதே போன்ற வேறு ஒன்றை இந்தப் படத்தில் காண முயற்சி செய்க.


விரல் அடையாளங்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருப்பதை இதுவரை கண்டிருப்பீர்கள். இதை நீங்கள் நன்கு விளங்குதல் அவசியம். படத்தில் உள்ளவை அனைத்தும் விரல் அடையாளங்களே: ஆனால், எந்த இருவிரல் அடையாளமும் ஒரே மாதிரியாக இல்லை. இருந்தும், விரல் அடையாளங்கள் என்ற முறையில் ஒன்றுக்கொன்று தொடர்பு இருக்கிறது. மனிதர் என்ற முறையில் எமக்கிடையில் ஒருமைப்பாடு இருக்கிறது; ஆனால் பழக்கம் பண்பு என்பவற்றில் நாம் வேறுபடுகிறோம்.

என் விரலில் உள்ளது எனக்கே மட்டும் உரிய விரல் அடையாளம். சிறப்பான, தனித் தன்மையுள்ள, என்னைப்போன்ற ஒருவன் நான்தானே. என்னைப் போன்ற எவரும் எங்கும் இல்லை. என் போன்ற இன்னொரு ஆள் முற்காலத்தில் வாழவில்லை: இனிப் பிறக்கப்போவதும் இல்லை. ஒவ்வொரு தனி ஆளின் பழக்கங்களும், போக்கும் அவனுக்கு மட்டும் உரியவை. இந்தப் போக்குகளையும், பழக்கங்களையும் தனித்துவம் என்ற சொல்லால் விளக்கலாம்.

தனித்துவம் மனிதனுக்கு மட்டும் உரிய பண்பு. ஒருவனுக்கு மட்டும் உரித்தான திறமைகளைத் தனித்துவம் குறிக்கிறது. தானே மட்டும் புரியக்கூடிய ஆற்றல்கள் இவை. எனவே மனிதன் சிறப்பான முக்கியமான தனி ஆள்: நானும் மனிதன்; ஆகவே நானும், சிறப்பான முக்கியமான தனி ஆள்.

மனிதர் என்ற மட்டில் எமக்கிடையில் ஒருமைப்பாட்டைக் காண்கிறோம். ஆனால் தனி ஆள் என்னும்போது ஒவ்வொருவரும் முற்றாக வேறுபாடுடையவர். இந்த இரண்டு உண்மைகளையும் ஒப்பு நோக்கினால் மனிதன் ஈடும் இணையும் இல்லாத தனி ஆள் எனக் கூறலாம்.

" இந்தப் பிள்ளையை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லையே " என்று பலரும் கூறக் கேட்டிருக்கிறீர்கள். ஏன்? என்னையே நான்



விளங்கிக்கொள்ள முடியாத சந்தர்ப்பங்கள் பல ஏற்பட்டிருக்கலாம்; இதில் வியப்பு ஒன்றும் இல்லே. எனது தனித்துவத்தின் காரணத்தை விளங்குவது சிரமம் ஆனது. இது எனக்கும் மற்றவர்களுக்கும் விளங்கமுடியாத இரகசியம் ஆக இருக்கிறது. இதனுல் என்னே அளவிடுவது, விளங்குவது, சிரமமான காரியம். நான் விளங்க முடியாத தனி ஆள்.

நானும் உலகில் வாழும் மனிதர்களில் ஒருவன்; இதனுல் சிறப்பான, முக்கியமான தனிஆள், ஈடு இணேயற்ற, விளங்க முடியாத தனி ஆள்.

கடவுள் திருமொழி:

*கடவுள் மண்ணுல் மனிதனே உண்டாக்கினுர்*
*நாட்களின் தொகையையும் காலத்தையும் குறித்தார்.*
*நிலத்தில் உள்ளவைகள்மீது அவனுக்கு அதிகாரம் கொடுத்தார்*
*தமது சாயலாக அவனேப் படைத்தார்.*
*அவனுக்குத் தக்க வலிமையைக் கொடுத்தார்*
*அறிவையும், நாவையும், கண்களேயும், காதுகளேயும் கொடுத்தார்*
*நினேப்பதற்கு மனத்தையும் அவனுக்குக் கொடுத்தார்*
*அறிவின் ஒளியால் அவனே நிரப்பினுர்*
*ஞான அறிவையும் அவனுக்குத் தந்தார்*
*நன்மையையும் தீமையையும் அவனுக்குக் காண்பித்தார்*
*தம் செய்கைகளின் மாட்சியை அவர்களுக்குக் காண்பிக்க,*
*அவர்கள் இதயங்கள்மேல் தமது கண்வைத்தார்*
*(சீருக். 17:1 - 10)*

செயல் திட்டம்

1. நீர் உண்ணும் உணவுக்காக உழைப்பவர்களின் பட்டியல் ஒன்று எழுதுக.
2. உமது குடும்பத்தில் உள்ளவர்களின் விரல் அடையாளங்களேப் பதித்து, அவர்களின் பெயர்களேப் பக்கத்தில் எழுதுக; அவர்களின் சிறப்பான பழக்கங்களே எழுதுக.

வாழ்க்கைக்கு:

*நான் சிறப்பான திறமைகளுடனும் ஆற்றல்களுடனும் பிறந்தவன்; இவற்றை அறிந்து, அதற்கேற்றபடி என்னேப் பயிற்றுவது எனது கடமை.*

விடை தருக:

1. *தனித்துவம் என்றுல் என்ன?*
2. *ஈடிணேயற்ற தனி ஆள் என்றுல் கருத்தென்ன?*

---

## பாடம் 2

# நான் கடவுளின் பிள்ளை

ஒருநாள் கிருபாவை அவன் தாய் கூட்டிக்கொண்டு மூக்குக் கண்ணாடிக் கடைக்குச் சென்றாள். நேரம் சென்றும் கண்ணாடி வாங்காததைக் கண்டு, ''அம்மா பெட்டியுள் இருக்கும் ஒரு கண்ணாடியை வாங்கிக்கொண்டு விரைவில் வீட்டுக்குப் போவோம்'' என்கிறான் கிருபா.

இதைக் கேட்டதும் அங்கு நின்றவர்கள் 'கொல்' என்று சிரிக்கின்றனர். கிருபா தாயைப் பார்க்கிறான். தாய் விளக்கம் கூறுகிறாள்.

''மகனே எல்லாருக்கும் இக் கண்ணாடிகள் பொருத்தமானவை அல்ல. அவரவர் கண்களுக்கேற்ற கண்ணாடியை அணிந்தாற்றான் கண் தெரியும். ஒவ்வொருவரின் கண்ணுக்கேற்றதாகக் கண்ணாடி ஆக்கவேண்டும்.''

தனி ஆளுக்குப் பொருத்தமான கண்ணாடி செய்யப்படவேண்டும் என்பதைக் கிருபா விளங்கிக்கொள்கிறான்.

நான் சிறப்பான படைப்பு: ஒவ்வொரு மனிதனும் சிறப்பான படைப்பு ஆக இருக்கிறான். இறைவன் மனிதனைச் சிறப்பான முறையில், தனி வேறுபாடுகளுடன் படைத்திருக்கிறார். மனிதன் ஈடு இணையற்ற, விளங்கமுடியாத தனி ஆளாக இருப்பதற்கு இறைவன் அவனைச் சிறப்பான முறையில் படைத்ததே காரணம். எனது தனித்துவத்தை நானோ பிறரோ விளங்குவது சிரமம். ஆனாலும் இது எனது சிறப்பான கொடையாகும். படைப்பின் சிறப்பு அம்சமான இதை நான் பெற்றிருக்கிறேன். கண்களுக்கு ஏற்ற கண்ணாடி அணிந்தால் மட்டுமே கண்பார்வை நன்கு தெரியும்.

கடவுள் தம் சாயலாகவே மனிதனைப் படைத்தார். தமது சொந்த வாழ்வை அவனுக்கு அளித்தார். இன்னும் இறைவனுக்கே உரித்தான அறிவு, சுயாதீனம், முடிவில்லா வாழ்வு போன்ற வல்லமைகளையும் மனிதனுக்குக் கொடுத்தார். இதனால், மனிதன் கடவுளின் பிள்ளை. நானும் மனிதன்; ஆகையால் நானும் கடவுளின் பிள்ளை.

எனக்கு மட்டும் உரித்தான போக்கையும், பழக்கங்களையும் கொண்டுள்ளவனாக இறைவன் என்னைப் படைத்தார். அவர் என்னை ஈடிணையற்ற, விளங்கமுடியாத தனியாள் ஆகப் படைத்தார். இறைவனுக்குள்ள சொந்த வல்லமைகளையே நான் பெறும் வகையில் என்னைத் தனது பிள்ளையாக்கினார்.

என் போக்கு எனக்கு மட்டும்தான் உரித்தானது. என் விருப்பங்கள் எனக்கே உரியவை. சிலசெயல்கள் நான் மாத்திரம் செய்யக்கூடியன. இவை எனக்குத் தரப்பட்ட சிறந்த கொடைகள். நான் இறைவனின் பிள்ளை என்பதையும், தெய்வீக வாழ்வு உள்ளவன் என்பதையும், சிறப்பான முறையில் காட்டுவதற்காக இக்கொடைகளைப் பெற்றுள்ளேன்.

**கடவுள் திருமொழி :**

''பின்னர் கடவுள் நமது சாயலாகவும் பாவனையாகவும் மனிதனைப் படைப்போமாக என்றார். இவ்வாறு கடவுள் மனிதனைத் தமது சாயலாகப் படைத்தார். தெய்வச் சாயலாகவே அவனைப் படைத்தார்''

(ஆதியாகமம் 1 : 26 - 27).

''ஆண்டவராகிய கடவுள் களிமண்ணால் மனிதனை உருவாக்கி அவன் முகத்தில் உயிர் மூச்சை ஊதவே மனிதன் உயிர் உள்ளவன் ஆனான்''

(ஆதியாகமம் 2 : 7).

**செயல் திட்டம் :**

1. உமது சகமாணவர்போல நீரும் இறைவனின் பிள்ளை. நீர் இறைவனின் பிள்ளை என்பதைக் காட்டக்கூடிய மூன்று குணங்களை எழுதுக.
2. இறைவனின் பிள்ளை என்பதைக் காட்டத்தக்கதாக நீர் செய்யக்கூடிய நாலு செயல்கள் எழுதுக.

**வாழ்க்கைக்கு :**


நான் இறைவனின் பிள்ளையாதலால் எனது நாளைச் செபத்துடன் தொடங்குதல் எனது கடமை. ''பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே ஆமென்.''

**விடை தருக :**

1. ஈடிணையற்ற, விளங்கமுடியாத தனி ஆள் ஆக மனிதன் இருப்பதற்குக் காரணம் என்ன?
2. 'நீர் இறைவனின் பிள்ளை' யெனக் காட்டுவதற்குப் பெற்றுக்கொண்ட கொடைகள் எவை?

பாடம் 3

# நாம் வாழும் உலகு



வெள்ளி நிறமான கடற்கரை. அங்கு நீண்ட, நீலநிற, வண்ண ஆடைபோன்ற அலைகள் அடிக்கின்றன. தென்றல் வீசுகிறது. பசும் நெற் பயிர்கள் தென்றலின் தாளத்திற்கேற்ப ஆடி அசைகின்றன. நறுந்தேன் உண்ணும் வண்டுகள் நிறைந்த முல்லைவனம். மலைத் தொடர்கள் வான் அளாவ உயர்ந்து நிற்கின்றன, சிறியதுதான் ; ஆனால் சுத்தமான, அழகான வீடு.

உலகம் எவ்வளவு அழகானது!

உலகம் மகிழ்ச்சியானது. இயற்கை அழகு நிறைந்த இந்த இனிய உலகை இறைவன் படைத்தார். என் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் அவர் எனக்குத் தந்துள்ளார். எனக்கு வேண்டிய எல்லாவற்றையும் கொண்டுள்ள அழகான சூழலை இறைவன் அளித் துள்ளார்.

அன்பு செய்து வளர்க்க ஓர் அன்னை,
உணவு உடை ஆதியன அளிக்க அருமையான அப்பா!
என்னுடன் விளையாட அன்புச் சகோதரர் — இருக்கிறார்கள்.

இவர்களை எல்லாம் எனக்குத் தந்தவர் இறைவன். இவர்கள் மட்டுமா? அன்புத் தோழர்கள், என்னைச் சூழ இன்னும் பலர் இருக் கிறார்கள் எனக்கு.

உலகம் என்னும் அந்த இன்பப் பூங்கா எனக்காகமட்டும் படைக்கப்படவில்லை, கடவுள் இதை மற்றவர்களுக்காகவும் படைத்தார்; அளப்பரிய அன்பினால் இறைவன் இதைப் படைத்து, எம்மை உரிமையாளர் ஆகவும் ஆக்கியுள்ளார். இதனால் இந்த உலகத்தைப் பாதுகாத்து விருத்திசெய்தல் எனது கடமை.

என்னைச் சூழ உள்ள அழகிய சூழல் அனைவர்க்கும் உரியது, இதை நான்மட்டும் அனுபவிக்கவேண்டும் என்ற சுயநலம் சரியானதா? இதன் நன்மைகளை நாம் அனைவரும் பகிர்ந்து அனுபவித்தல் நல்லது அல்லவா?

மற்றவர்களுடைய ஒத்துழைப்புடன் நான் வாழும் உலகை விருத்திசெய்வேன்.

என் உடன் மாணவர்கள், நான் கூடி விளையாடும் நண்பர்கள் எல்லாரும் இறைவனின் மக்கள், ஏன்? நான் காணும் அனைவருமே கடவுளின் பிள்ளைகள். எல்லாருக்கும் அளவில்லாத விதமாக அன்பு செய்பவர் கடவுள். கடவுள் என்னையும் அளவில்லாத விதமாக நேசிக்கிறார். எனவே நான் மற்றவர்களுக்கு உரிய மரியாதை செய்யாது வாழலாமா? என்னைச் சூழ உள்ள எல்லாம் எனக்கு மட்டும் உரியவை என்று உரிமை கோரலாமா? இவ்வினாக்களுக்கு எனது நேர்மையான விடை என்ன...?

கடவுள் திருமொழி :

ஆண்டவராகிய கடவுள் ஆதியிலே ஓர் இன்ப வனத்தை நட்டிருந்தார்.

தாம் உருவாக்கிய மனிதனை அதிலே வைத்தார்.

அவ்வனத்திலே பார்வைக்கு அழகிய, நாவிற்கு இனிய கனிகள் கொண்டுள்ள பலவித மரங்களையும் மண்ணில் நின்று தோன்றச் செய்தார்.

மேலும் அந்த இன்ப வனத்தின் நடுவிலே வாழ்வளிக்கும் மரத்தையும் நன்மை தீமை அறியும் மரத்தையும் வளரச்செய்தார்.
(ஆதியாகமம் 2:8—9).

செயல் திட்டம்:

1. உமது வகுப்பறையையும், பள்ளிக்கூடச் சூழலையும் சுத்தமாக வைத்திருக்கக்கூடியதாக ஒன்றுசேர்ந்து ஒரு திட்டம் ஆக்கி அதன்படி செயல்படுக.

2. பொதுச் சொத்துக்களை அழிப்பவர்களை நீர் கண்டிருக்கலாம். கல்லூரிச் சுவர்களை உடைத்தல், அவற்றில் எழுதுதல், தளபாடங்களை உடைத்தல், மோட்டார் வாகனங்களிலும் புகை வண்டியிலும் உள்ள மெத்தை பதித்த இருக்கைகளை வெட்டுதல் போன்ற செயல்கள் ....ஏன் இப்படிச் செய்கின்றனர்?

**வாழ்க்கைக்கு:**

இறைவனுக்கு நன்றி செலுத்துவோம். "பிதா, சுதன், பரிசுத்த ஆவிக்கு மகிமை உண்டாவதாக. ஆதியில் இருந்தது போல் இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக ஆமென்."

**விடை தருக:**

1. இந்த உலகில் நாம் வாழ்வதற்குத் தேவையான சகலத்தையும் தந்தது யார்?
2. இந்த உலகின்மட்டில் நீர் செய்யவேண்டிய அடிப்படைக் கடமை என்ன?




ஆய்வுப் பொருள் 2

பாடம் 4

# கடவுள் தம்மை அடையாளங்கள் வழியாக எமக்கு வெளிப்படுத்துகிறார்

அடையாளம்




எமக்குத் தெரிந்த அளவில் அடையாளங்களை ஆக்கி எமது திறமைக்கு ஏற்ப விளங்குகின்றோம்

“நெருப்பு இல்லாமல் புகை இல்லை” என்பது பலரும் அறிந்த பழமொழி. நெருப்புக் குறியீடாக அதாவது அடையாளமாக இருப்பது புகை. நோவு ஏற்படும்போது ‘ஊ... ஊ ஐயோ’ என்று சத்தம் இடுகிறோம். இச் சத்தம் நோவுக்கு அடையாளம். தாய் தன் பிள்ளைக்கு முத்தம் கொடுக்கிறாள். அன்புக்கு அடையாளமாக இருப்பது முத்தம். கணித பாடத்தில் வரும் குறியீடுகளைக் கூற முடியுமா? வீதியிற் செல்லும்போது பல வீதி அடையாளங்களை நீங்கள் கண்டிருக்கலாம். வெள்ளைக்கொடி, சிவப்பு வெளிச்சம், பச்சை விளக்கு இவை ஒவ்வொன்றும் குறிப்பது என்ன?

ஒவ்வொரு அடையாளமும் ஏதோ ஒன்றுடன் தொடர்புடையது. அடையாளத்தையும், ( குறியீட்டையும் ) அது குறிப்பதையும் ஒரேநேரத்தில் நாம் அறியாதிருக்கக்கூடும். அன்பு, கோபம், வெறுப்பு போன்ற கண்ணுற் காணமுடியாத குணங்களும் ( கருத்துப் பொருள் களும் ) அடையாளங்களால் காட்டப்படுகின்றன. அடையாளங்கள் நாம் சாதாரணமாகப் பார்ப்பவை, கேட்பவை, முகர்பவை, சுவைப் பவை, தொட்டு உணரக்கூடியவை. இதனுல் அடையாளங்கள் புலன்களால் அறியக்கூடியன என்பது விளங்கும்.

அடையாளங்கள் இன்றி நாம் வாழமுடியாது. ஒருவர் ஒருவரு டன் தொடர்பு கொள்வதற்கு இவை இன்றியமையாதவை ஊமை ஒருவன் அடையாளங்கள் வழியாகத் தன் மனக்கருத்தை வெளிப் படுத்துகிறுன். தூரத்தில் வாழ்பவர்களுடன் கடிதம் என்னும் அடை யாளம் வழியாகத் தொடர்பு கொள்கிறோம். குருடன் தொட்டுப் பார்ப்பதால் சில விளக்கங்களைப் பெறுகிறுன். இங்ஙனம் மனிதனை மனிதன் விளங்குவதற்கு அடையாளங்கள் தேவைப்படுகின்றன. மனிதர்க்கிடையில் தொடர்பு உண்டாக்க அடையாளங்கள் உதவு கின்றன.

எமக்குத் தெரிந்த அளவில் அடையாளங்களை ஆக்குகின்றோம். எமது திறமைக்கு ஏற்ப அவற்றை விளக்குகிறோம். நாட்டின் தேசியக் கொடி அந்நாட்டின் ஒருமைப்பாட்டைக் குறிக்கும் ஓர் அடையாள மாகும். உங்கள் பள்ளிக்கூடத்திற்கென்று ஒரு கொடி இருக்கிறதா? அது ஏற்றப்படும்போது இந்தப் பள்ளிக்கூடத்தைச் சேர்ந்தவன் நான், அதற்காக உழைத்தல் எனது கடமை என்ற உணர்ச்சி ஏற்படு கின்றதா?

நான் இறைவனின் பிள்ளை. நான் இறைவனின் உயிருள்ள அடை யாளமாக இருக்கிறேன். கடவுளின் அன்புக்கு அடையாளமாக இருப் பவன் நான். என்னைச் சூழவுள்ள அழகிய உலகும், இயேசு நிறுவிய திருச்சபையும் ஆண்டவனின் அடையாளம். இன்றில் இருந்து இந்த உண்மையை விளங்கிக் கொள்ள முயற்சி எடுப்பேன்.

**கடவுள் திருமொழி:**

அவர்களுக்கு (இஸ்ராயேல் மக்களுக்கு) வழி காண்பிக்கத் தக்கதாக ஆண்டவர் பகலில் மேகத்தூண் ஆகவும், இரவில் நெருப்புத் தூணுகவும் அவர்களுக்குமுன் சென்று இரவும், பக லும் அவர்களுக்கு வழித்துணையாக இருந்தார்.

(யாத்திராகமம் 13:21).

**செயல் திட்டம்:**

1. நீர் கண்ட அடையாளங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக. முடியு மாயின் அவற்றைக் கீறவும். அவை ஒவ்வொன்றும் குறிப்பது என்ன?

2. உமது பள்ளிக்கூடத்தின் பெயரை எழுதுக. நீர் இந்தப் பள்ளிக் கூடத்தின் மாணவன்/மாணவி என்பதைக் காட்டும் சில அடை யாளங்களை எழுதுக. நீர் இறைவனின் பிள்ளை என்று காட்டும் சில அடையாளங்களை எழுதுக,

**வாழ்க்கைக்கு:**

ஒழுங்குமுறையில் இயங்குகிறதும், பலன் உள்ளதும், மகிழ்ச்சி யுள்ள சூழலை உடையதுமான இந்த உலகை நான் காணும்போது கடவுளை அறிய முயற்சி செய்வேன். இந்தக் கருத்துடைய செபம் ஆக்கிச் செபிப்பேன்.

**விடை தருக:**

1. நீர் யாருடைய உயிருள்ள அடையாளமாக இருக்கிறீர்?
2. அடையாளங்கள் ஏன் அவசியம்?



ஆய்வுப் பொருள் 2

## பாடம் 5

# படைப்பின் வழியாக இறைவனைக் காண்போம்

**படைப்புகள் எல்லாம் இறைவன் என்மீது கொண்டுள்ள அன்பிற்கு அடையாளம்**

*''ரவி, வழியில் உண்பதற்கு எமக்கு என்ன கொண்டுவந்திருக் கிறீர்?''*

*''மாம்பழம், பலாச்சுளைகள் கொண்டு வந்தேன். நீர் என்ன வைத்திருக்கிறீர் ரஞ்சன்?''*

*''நாஞ? இங்கேபார் கசுப்பழம், கொய்யாப்பழம், நாவற்பழம் எல்லாம் இருக்கின்றன.''*

*''நிச்சயமாக, ரஞ்சன் அதிகாலையில் எங்கெல்லாமோ திரிந்து, மரத்தில் ஏறி இவற்றைப் பறித்திருக்கிறன்'' என்று உரையாடலில் பங்கு பற்றினன் ராஜன்.*

*''வழியில் பாலைப்பழம், வீரைப்பழம் எல்லாம் இருக்குமாமே, ஏறிப் பறிப்பதற்கு நான் இருக்கிறேன்'' என்றுன் ரஞ்சன்,*

*''சரி. நேரம் ஆகிறது. எல்லாரும் பஸ்வண்டியில் ஏறுங்கள் கெதியாக'', ஆசிரியர் இங்ஙனம் கட்டளையிட்டார்.*

*பஸ் புறப்பட்டது. ஆரும் வகுப்பு மாணவர் பஸ்ஸில் இருந்த னர். பலருக்கு இதுதான் கல்வி சம்பந்தமான முதற் சுற்றுலா.*

*''எமது வாழ்க்கைக்குத் தேவையான உணவு முதலியவற்றை, எப்படிப் பெறுகிறேம் என்பது உங்களுக்குத் தெரியுமா?'' ஆசிரியர் கேட்ட கேள்வி இது. வழியில் இருபக்கங்களிலும் இருந்த பசுமை யான நெல் வயல்களையும், பெரிய தென்னந் தோட்டங்களையும் பிள்ளை கள் கண்டனர். ஆசிரியர் கேட்ட வினவுக்கு விடை அவர்களுக்குத் தெரிந்துவிட்டது.*

*''அதோ! பாதை அருகில் பெரிய கோபுரம் போலத் தெரி கிறதே. அது என்ன?'' என்று நிர்மலன் கேட்டான்.*

''ஓட்டுத் தொழிற்சாலையின் புகைபோக்கி அது. இங்கு காணப் படும் மண் கமம்செய்யச் சிறந்தது அன்று. ஆனால் இதைப் பயன் அற்ற மண் என்று தள்ளிவிட முடியாது. இந்த மண்ணில் இருந்து ஓடு, செங்கல் என்பவற்றை ஆக்குகின்றனர்'' என்று ஆசிரியர் விளக்கம் அளித்தார்.

மோட்டார் வண்டி ஓடிக்கொண்டே இருக்கிறது. வீதியின் கரையோரங்களில் தண்ணீர் நிறைந்த குளங்களைக் காண்கின்றனர். செந்தாமரையும், வெண்டாமரையும் மலர்ந்து குளங்கள் அழகாகக் காட்சி அளிக்கின்றன. கண்ணுக்கினிய விருந்து!

''அதோ பார், என்ன அழகு! என்ன அழகு!'' மனோகரன் இயற்கை அழகைக் கண்டு வியக்கிறான். எல்லாரும் வெளியிற் பார்க்கின்றனர். ரஞ்சன் பெரிய கற்பாறை ஒன்றை அதிசயத்துடன் சுட்டிக் காட்டுகிறான். பாறையை உடைத்துச் சிறு சல்லிக் கற்கள் ஆக்குவதை மாணவர் வியப்புடன் பார்க்கின்றனர்.

ஆசிரியர் பேச ஆரம்பிக்கிறார்.

''பிள்ளைகளே! வழியில் வரும்போது நீங்கள் பறித்த பழங்கள், வீதியின் இருபக்கத்திலும் கண்ட நன் செய்நிலங்கள், குளங்களை மூடி மலர்ந்திருந்த வண்ண மலர்கள், ஓட்டுத் தொழிற்சாலைப் பக்கம் இருக்கும் செழிப்பற்ற மண், இப்பெரும்பாறை ... இவை எல்லாம் இறைவனாற் படைக்கப்பட்டவை. மனிதனின் உபயோகத்திற்காகவே இவை படைக்கப்பட்டன. இவை மட்டுமா? பாய்ந்து செல்லும் அருவிகள், அழகே உருவான நீர்வீழ்ச்சி, இரத்தினக் கற்கள், ஏன்? அனைத்துமே கடவுளின் படைப்பு.

இவை இறைவனை நாம் அறிந்துகொள்ள உதவுகின்றன. கடவுளின் இயல்பை விளக்கும் அடையாளங்கள் இவை; படைக்கப்பட்ட பொருள்களில் இருந்து படைத்தவனின் பண்பை அறியலாம். மனிதனுக்கு வேண்டிய உணவு, அவன் பருகுவதற்கு நீர்...... இங்ஙனம் பலவற்றை இறைவன் படைத்துள்ளார்.

மனித இனத்தின் நன்மைக்காக எல்லோரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும் என்பதைக் காட்டும் வகையில் பொருள்களை இறைவன் படைத்திருக்கிறார். சுருங்கக்கூறின் இறைவன் எம்மில் கொண்டுள்ள அன்பின் அடையாளங்களாகப் படைப்புகள் விளங்குகின்றன.

**கடவுள் திருமொழி:**

வானங்கள் கடவுளின் மாட்சிமையைச் சாற்றும்
வானமண்டலம் அவரது கைத்திறனை எடுத்து உரைக்கும்
பகல் தோறும் பகல் அதைத் தெரிவிக்கிறது
இரவு தோறும் இரவு அதை அறிவிக்கிறது.

அவற்றுக்குச் சொல்லும் இல்லை, பேச்சும் இல்லை
அவற்றின் குரல் செவியிற் படுவதும் இல்லை
எனினும் அவற்றின் குரல் உலகெலாம் கேட்கிறது
அவை விடுக்கும் செய்தி உலகின் எல்லைவரை எட்டுகிறது

(சங்கீதம் 18:1–4).

செயல் திட்டம்:

1. உமது நண்பர்களின் சொல், செயல் வழியாக அவர்களின் குணத்தை அறியலாம். உமது பேச்சையும், செய்கையையும் அவதானித்து உம்மை மற்றவர் அறிகின்றனர். இதேபோலக் கடவுளின் இயல்பை, உம்மைச் சூழ உள்ள இயற்கையைக் கொண்டு அறிந்து எழுதுக.

2. இயற்கை இறைவனின் அன்பைக் காட்டும் வழியாகும். இறைவனுக்கு நன்றி தெரிவித்துச் சிறு செபம் ஆக்குக.

வாழ்க்கைக்கு:

நான் பெற்ற அருள் உதவிகளில் மேலானது படைத்த இறைவனுக்கு நன்றி செலுத்தும் திறமை, தானியேலின் மூவிளைஞரின் சங்கீதத்தைச் சேர்ந்து பாடுவோம்.

எதற்கும் மேலாம் ஆண்டவரை என்றும் புகழ்ந்து போற்றுங்கள்.

1. விண்ணே முகிலே மழையே—சுடர்வீசும் கதிரே நிலவே
2. மண்ணே செடியே கொடியே – உயர் மரமே மலரே மணமே
3. பொன்னே மணியே மலையே – அலை பொங்கும் கடலே புயலே
4. கனியே புனலே நதியே—எரி கனலே காற்றே சுனையே
5. தூய்மை மேவும் மனமே – திருத்துதி செய் வானோர் குழுவே.

விடை தருக:

1. இறைவனை அறிய நமக்கு உதவுவது என்ன?
2. விண்வெளி வீரர் ஒருவர் கூறினர் "நான் இறைவனை அங்கே காணவில்லை", இன்னொரு வீரர் கூறினர்; "நானும் இறைவனை அங்கு காணவில்லை, ஆனால் அவர் படைத்த பல அதிசயங்களைக் கண்டேன்" — எது புத்திசாலித்தனமான விடை என்று கருதுகிறீர்?

ஆய்வுப் பொருள் 2

பாடம் 6

# என்னில் கொண்டுள்ள அளவிலா அன்பினுல் இறைவன் அனைத்தையும் படைத்தார்

**இறைவன் என் அன்புத் தந்தை**

பெற்ருேர் தமது அன்பை எமக்கு வெளிக்காட்டும் அடையாளங் களைப்பற்றி நினைப்போம். எனக்கு அவர்கள் என்ன தந்தார்கள்? நான் கேட்காமலே என் வாழ்க்கைக்குத் தேவையானவற்றைத் தாய் தந்தையர் தருகின்றனர். பெற்ருேர் எனக்குக் காட்டும் அன்பின் பெரும் அடையாளம் இது அல்லவா?

இன்னும் சிந்திப்போம்,

உங்கள் பெற்ருேரை உங்களுக்குத் தந்தது யார்? உங்களுக்குத் தேவையானவற்றைக் கொடுப்பதற்குப் பெற்ருேருக்கு வாய்ப்பளித் தது யார்? உங்கள் வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்விப்பவர் யார்?...... அவரே கடவுள்.

தொடர்ந்து சிந்திப்போம். பயன்தரும் இந்த உலகை நான் கேட்காமலே எனக்கு அளித்தவர் இறைவன். அவர் என் வாழ்க் கைக்குத் தேவையான அனைத்தையும் கொண்டு உலகை நிரப்பினர். இயற்கை வளங்களால் உலகை இறைவன் நிறைத்தார். இந்த இயற்கை வளங்கள் பாதுகாக்கப்பட்டு விருத்தி செய்யப்பட வேண் டும் என்பது கடவுளின் விருப்பம்.

அன்புச் சகோதரர்களை இறைவன் எனக்குத் தந்துள்ளார். நண் பர்களைத் தந்தவரும் அவரே, வாழ்க்கைக்குவேண்டிய நல்ல பொருள் கள் நிரம்பிய இந்த உலகை இறைவன் ஏன் படைத்தார் என்பதை நான் இப்போது விளங்குகிறேன்.

இந்தக் கொடைகளை இறைவன் எனக்கு அளித்ததன் ஒரே நோக் கம் அவர் என்மேற் கொண்ட அளவில்லா அன்பே ஆகும்.

கடவுள் தம் சாயலாக என்னைப் படைத்தார். கடவுளின் சொத் துக்களுக்கு என்னை வழிவழி வந்த உரிமையாளன் ஆக்கினுர். எனது வாழ்க்கைக்குத் தேவையான எல்லாம் கொண்டுள்ள உலகை இறை வன் படைத்து, அதை என்னிடம் ஒப்படைத்துள்ளார். கடவுள்

படைத்த உலகத்துக்கு நான் பொறுப்பாளன். இறைவன் எனது அன்புத் தந்தை என்பதாலேயே எனக்கு இவ்வளவு பெரிய நன்மைகளைச் செய்கிறார். தமது அன்பை வெளிக்காட்டும் அடையாளமாகக் கடவுள் உலகைப் படைத்தார்.

ஆனால் ... ... கடவுளின் பிள்ளை நான் ஒருவன் மட்டுந்தானா? இல்லை. உலகில் வாழும் அனைவருமே இறைவனின் பிள்ளைகள். எனது வகுப்பில் நாம் புறக்கணித்து நடக்கும் பிள்ளைகளும் இறைவனின் பிள்ளைகளே. எனவே பாகுபாடு காட்டி நடத்தல் பிழை என்பதை விளங்குகிறேன். எல்லாருக்கும் பொதுவான தந்தை இறைவன். இந்த அழகிய பயன் தரும் உலகம் எம் அனைவர்க்காகவும் படைக்கப் பட்டது.

**கடவுள் திருமொழி:**

வானகத்தில் உள்ள எங்கள் தந்தாய்!
உமது பெயர் பரிசுத்தம் எனப் போற்றப்படுக.

(மத்தேயு 6:9).

கடவுளின் பிள்ளை ஆக்கும் தேவ ஆவியையே பெற்றுக்கொண்டீர்கள்.
அந்த ஆவியினால் நாம் 'அப்பா'... 'தந்தாய்' எனக் கூப்பிடுகிறோம்.
நாம் இவ்வாறு கூப்பிடும்போது தேவ ஆவியானவரே நாம் கடவுளின் பிள்ளை என்று சான்று பகர்கிறார்.

(உரோமர் 8:15).

**செயல் திட்டம்:**

1. கடவுள் உமக்கும், மற்றைய பிள்ளைகளுக்கும் செய்துவரும் மூன்று செயல்களை எழுதுக. உமது வகுப்பிற் படிக்கும் மாணவர்களுக்கு நீர் செய்யக்கூடிய ஐந்து உதவிகள் எழுதுக.

2. கடவுள் உம் தந்தை என்பதை எவ்வாறு கூறமுடியும்?

**வாழ்க்கைக்கு:**

'கடவுள் என் தந்தை' என்று கூறக்கூடிய முறையில் இனி நான் வாழ்வேன்.

**விடை தருக:**

1. வாழ்க்கைக்குத் தேவையான எல்லாம் நிறைந்த இடமாகக் கடவுள் ஏன் உலகைப் படைத்தார்?
2. யார் சாயலாகவும், மாதிரியாகவும் கடவுள் உம்மைப் படைத்தார்?

## பாடம் 7

# கடவுள் படைப்பின் முதல்வனாக மனிதனைப் படைத்து, படைப்பு எல்லாவற்றையும் அவனிடம் ஒப்படைத்துள்ளார்

பெற்றோரின் பொருள் பண்டங்களுக்குப் பிள்ளைகள் மரபு உரிமையாளர் ஆகின்றனர். தாய், தந்தையர் பயிரிட்ட நிலங்கள் அவர்களின் பிள்ளைகளுக்குக் கிடைக்கின்றன. வாழும்போதே தமது சொத்து உரிமையைப் பிள்ளைகளுக்கும் கொடுப்பது சில பெற்றோரின் வழக்கம். இங்ஙனம் பெற்றோரின் பொருள் பண்டங்களுக்குப் பிள்ளைகள் சொந்தக்காரர் ஆகின்றனர். தமக்குக் கிடைத்த சொத்துக்களைக் கவனமாகப் பராமரித்து அவற்றை அபிவிருத்தி செய்யவேண்டியது பிள்ளைகளின் கடமையாகும். இதற்காக அவர்கள் கடுமையாக உழைக்க வேண்டும். அந்தச் சொத்துக்களைப் பராமரிப்பதற்கும், விருத்திசெய்வதற்கும் அயலவரின் உதவியை அவர்கள் நாட வேண்டும்.

இறைவனும் உலகைப் படைத்து இதுபோலவே செயற்பட்டார், மகிழ்ச்சி பொங்கியதும், பயன் நிறைந்ததுமான இந்த உலகை அவர் படைத்தார். இயற்கை வளங்கள் நிரம்பியது இந்த அழகிய உலகு. தமக்காக மட்டும் இவ்வுலகை அவர் படைக்கவில்லை. தமது வல்லமையைக் காட்டவேண்டும் என்பதும் அவர் நோக்கம் அல்ல. நான் உட்பட மனித இனம் முழுவதற்கும் நன்கொடையாக இந்த உலகு இருக்கவேண்டும் என்பது இறைவனின் திருச்சித்தம், படைப்பின் காப்பாளன் ஆக இருந்து படைப்புகளைப் பாதுகாத்து அதை அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதற்காகவே கடவுள் மனிதனைப் படைத்தார். இதன் பொருள் உலகம் முன்னேற்றப்பட வேண்டிய ஓர் இடம். உழைப்பு இல்லாமல் உலகை முன்னேற்ற முடியாது. மனிதன் உழைப்பதற்காகப் படைக்கப்பட்டவன். ஆதியில் இன்ப வனத்தில் வாழ்ந்த மனிதன் உழைப்பில் இன்பம் கண்டான்.

கடவுள் மனிதனை உயர்ந்த நிலையில் படைத்தார். தமது சாயல் ஆகவே மனிதனைப் படைத்தார். படைப்புக்கள் எல்லாவற்றிலும் மேலானவன் அவனே. அவன் படைப்புகளுக்குத் தலைவன். இந்த உலகை முன்னேற்றவும், சரியான வழியில் பயன்படுத்தவும் கூடிய திறமை மனிதனுக்கே உண்டு.

மனிதன் கடவுளின் பிள்ளை. கடவுள் மனிதனின் தந்தை, தந்தைக்கும் பிள்ளைக்கும் உள்ள இந்த உறவு முறைக்கு அடையாளமாக இறைவன் தான் படைத்த அழகிய உலகின் உரிமை உள்ள சொந்தக்காரனாக மனிதனை ஆக்கினார்.

நானும் கடவுளின் பிள்ளை, இறைவன் என் அப்பா. இந்த உலகின் சொந்தக்காரன் என்ற உரிமையை இறைவன் எனக்குத் தந்துள்ளார். படைப்புகளில் முதல்வன் நான். எனவே கடவுளின் பிள்ளை என்ற மட்டில் நான் செய்யவேண்டிய கடமைகள் பல உள. நான் வகிக்கவேண்டிய பொறுப்புக்கள் பல உள.

கடவுள் திருமொழி:

கடவுள் ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். கடவுள் அவர்களை ஆசீர்வதித்து:
"......கடல் மீன்களையும் வானத்துப் பறவைகளையும், பூமியின் மீது அசைந்து உலாவும் உயிரினங்கள் அனைத்தையும் ஆண்டு கொள்ளுங்கள்" என்றார்.

(ஆதியாகமம் 1:28)

மனிதன் யார்? நீர் அவனை நினைவுகூர!
மனுமகன் யார்? நீர் அவனைத் தேடிவர.
நீர் அவனைச் சிறிதுகாலத்துக்கு வானதூதர்களை விடத் தாழ்ந்தவன் ஆக்கினீர்;
மகிமையும் மாட்சியும் அவனுக்கு முடியெனச் சூட்டினர்.
அனைத்தும் அவனுக்கு அடிபணியச் செய்தீர்.

(எபிரேயர் 2:7).

செயல் திட்டம்:

1. 'உலகில் உள்ள பொருள்கள் கடவுளின் கொடைகள்' — எனவே இவற்றை நான் மட்டும் அனுபவித்தல் தவறு ஆகும். உமது கண்காணிப்பில் உள்ள இயற்கை வளங்களைச் சரியான வழியில் பயன்படுத்துவது எங்ஙனம் என்று காட்டுக.
2. 'கடினமாக உழைத்தல் ஒவ்வொருவரதும் கடமையாகும்'— இதற்குரிய காரணங்களைக் கூறுக.

வாழ்க்கைக்கு:

நிறைவை நோக்கிச் செல்லவேண்டும் என்ற நோக்கத்துடன் கடவுள் இவ்வுலகைப் படைத்து மனிதனிடம் ஒப்படைத்துள்ளார். இந்தப் பொறுப்பு உணர்ச்சியில் எனக்கும் பங்கு உண்டு. இதை நான் ஏற்கவேண்டும்.

விடை தருக:

1. கடவுள் மனிதனை ஏன் படைத்தார்?
2. கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் உள்ள 'தந்தை — மகன்' உறவுக்கு அடையாளங்கள் என்ன?

## பாடம் 8

# அடிமைத்தனமும் விடுதலையும்

**நோயும், மரணமும் ஏன் மனிதனைப் பிடிக்கின்றன?**

இன்றைய செய்தித் தாள்களில் நாம் என்ன வாசிக்கிறோம்? நோய், தொற்று வியாதி, கலைப்பொருள்களைச் சிதைத்தல், கொலை, களவு, சண்டை போன்ற பலவித தீய செயல்கள் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன அல்லவா? ஆனால் இறைவன் மனிதனைப் படைத்தது அன்பினால் என நாம் அறிவோம்.

— எங்கே இந்த அன்பு?

— இன்றைய மனிதனின் வாழ்க்கை துன்பக் கடலாக அமைந்திருக்கின்றதே, ஏன்?

— பிள்ளைப் பருவத்தில் இருந்து அளவில்லாச் சிரமங்களின் மத்தியில் நாம் கல்வி பெறுகிறோம்.

— நாம் வளர்ந்தபின் வியர்வை சிந்தி உழைக்கவேண்டி இருக்கிறதே!

— இளையோரையும், முதியோரையும் வியாதி பீடிக்கிறது நோவுக்கும் துன்பத்துக்கும் எல்லாரும் ஆளாகின்றனர். இறுதியில் எல்லோருமே இறக்க நேரிடுகின்றதே!

— படைப்பின் தொடக்கத்தில் மனிதன் அனுபவித்து வந்த இன்பம் எங்கே?

— வியாதியும் வேதனையும் ஏன் எமக்கு?

— ஆதியில் அமைந்திருந்த இன்பநிலை எங்கே?

— நாம் இதை ஏன் இழந்தோம்?

— ஏன் எமக்கு நோய் வருகிறது?

— ஏன் நாம் வேதனைக்கு ஆளாகிறோம்?

— நாம் இறப்பது ஏன்?

— அறியாமை நிறைந்தவர்களாய் நாம் வாழ்வது ஏன்?

**கடவுளை விட்டுப்பிரிந்து சென்றதே இத்துன்பங்களுக்குக் காரணம். நாம் மீளவும் இறைவனிடம் செல்லவேண்டுமென்று இவை சுட்டிக் காட்டுகின்றன.**

உலகைப் படைத்த கடவுள் ஆதாம் என்ற மனிதனையும், ஏவாள் என்ற பெண்ணையும் படைத்தார். இவர்கள் இருவரையும் வளம் கொழிக்கும் இன்ப வனத்தில் வாழவைத்தார். உணவுக்கு வேண்டிய பொருள்கள் யாவும் அங்கிருந்தன. அவை குறைவின்றிக் கிடைத்

தன. மரம், செடி, கொடிகள் என்பன அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தன. பெருக்கெடுத்துப் பாயும் ஆறுகள், நீர்வீழ்ச்சிகள், வானளாவிய மலைகள் அனைத்தும் மனமகிழ்வை உண்டாக்கின. வியாதி அவர்களைப் பீடிக்கவில்லை. பசியின் கொடுமையை அறியா திருந்தனர். மரணத்தைப்பற்றி அவர்கள் கேள்விப்பட்டதே இல்லை: படைப்பைப்பற்றிய தெளிவான விளக்கம் அவர்களுக்கிருந்தது. சுருங்கக்கூறின், ஆதாம் ஏவாளுடைய வாழ்க்கை இன்பகரமாய் இருந்தது. பரிசுத்த வேதாகமம் இதற்குச் சான்று பகர்கிறது.

உமது பெற்றோர் உம்மை அன்புசெய்கின்றனர். எனினும் அன்புள்ள பெற்றோர் சில வேளைகளில் உம்மைத் தண்டிக்கின்றனர் அல்லவா, இது ஏன்?

கடவுள் திருமொழி:

''ஆண்டவரே நீர்சினம்கொண்டு என்னைக் கடிந்துகொள்ளாதேயும்
உம் திருக்கரத்தின் தண்டனையும் என்மேல் விழுந்தது
என் உடலில் நலமே இல்லை
என் பாவத்தால் என் எலும்புகளெல்லாம் நெக்குவிட்டுப்போயின
என் குற்றங்கள் என் தலைமேல் பெருகி எழுந்தன
பெரும் சுமைபோல் என்னை மிகவே நசுக்குகின்றன
என் காயங்கள் அழுகி நாற்றம் எடுக்கின்றன
இதற்கு என் அறியாமையே காரணம்
தலைகுனிந்து மிகத் தளர்வடைந்து நாளெல்லாம் மிகத் துயரத்தில் வாழ்கிறேன்
எனக்குதவி புரிய விரைந்து வாரும்
ஆண்டவரே என் மீட்பரே விரைந்து வாரும்''

(சங்கீதம் 37:1—6; 22).

செயல் திட்டம்:

1. நாளாந்தம் நடக்கும் வீதி விபத்துக்களைச் சிந்தித்து, அவை ஏன் நிகழ்கின்றன என்று கூறுக.
2. நிச்சயமாக உமக்குத் தலைவலி, தடிமல், வயிற்றுவலி வந்திருக்கும். அவை ஏன் உமக்கு வந்தன என்று கூறுவீரா? வியாதி வராமல் தவிர்ப்பதற்கு என்ன செய்யவேண்டும்?

வாழ்க்கைக்கு:

எனது வேதனை, துன்பங்களின் வழியாக இறைவனின் சித்தத்தை விளங்கிக்கொள்ள முயற்சிப்பேன். துன்பம் வரும்போது இறைவனை நோக்கி இங்ஙனம் செபிப்பேன். 'அன்புள்ள ஆண்டவரே!...............'

விடை தருக:

1. வியாதி, துன்பம், சாவு என்பன நமக்கு ஏன் வருகின்றன?
2. இன்ப வனத்தில் ஆதாமும், ஏவாளும் எவ்வாறு வாழ்ந்தனர்?

ஆய்வுப் பொருள் 3

பாடம் 9

# மனிதன் இறைவனின் அன்புத் திட்டத்தை ஏற்க மறுத்ததால் ஏற்பட்ட விளைவு—I துன்பம், வேதனை, மரணம்

நாள் முழுவதும் விடாது மழை பெய்துகொண்டிருந்தது; மாலை நேரம் ஆகியும் மழை விட்டபாடாய் இல்லை. ஒரே அடை மழை. காலை தொடங்கிச் சிறுமி நிர்மலா 'மில்க் டொபி' செய்து தரும்படி தன் தாயை நச்சரித்துக்கொண்டிருந்தாள். இதனால் அவளின் தாய் கட்டிப்பால் ஒன்று வாங்குவதற்காகக் கடைத் தெருவுக்குப் போனாள். ''வெளியில் போகவேண்டாம்'' என்று தாய் நிர்மலாவுக்குக் கூறினாள். அம்மா தெருமுடக்கில் திரும்பினதுதான் தாமதம், நிர்மலா முற்றத்தில் குதித்து மழையில் விளையாடத் தொடங்கினாள். தாய் திரும்பி வந்தபோது நிர்மலா நனைந்து நடுங்கிக்கொண்டிருந்தாள். அன்றிரவு அவள் காய்ச்சலால் பீடிக்கப்பட்டாள். அடுத்த நாள் காலை தாய் அவளை வைத்தியரிடம் கூட்டிச் சென்றாள். நிர்மலாவுக்கு 'டொபி' கிடைக்கவில்லை.

இதற்கு முந்திய பாடத்தில் கேட்கப்பட்ட ஒரு வினா உங்களுக்கு நினைவிருக்கலாம். வியாதி, துன்பம், சாவு என்பன எமக்கு ஏன் வருகின்றன? இதுதான் அந்த வினா.

இப்போது நீங்கள் படித்த கதையில் நிர்மலாவுக்கு ஏன் காய்ச்சல் ஏற்பட்டது?..... அவள் மழையில் நனைந்ததே காய்ச்சலுக்குக் காரணம். ஏன் அவள் நனைந்தாள்?... அவள் தாயின் சொல்லைமீறி மழையில் விளையாடியதால் நனைந்தாள்.

இறைவன் தமது திட்டத்திற்கேற்ப - தெய்வீக திட்டப்படி —உலகைப் படைத்து. அதை மனிதனுக்கு மரபுரிமை ஆக்கினார். மக்கள் அனைவரும் வரவிருக்கும் வாழ்வில், தெய்வீக மகிழ்ச்சியில் பங்குகொள்ளவேண்டும் என்பது இறைவனின் திட்டம். மனிதர் இறைவனுடன் வாழ அழைக்கப்பட்டிருந்தனர். எனவே மனிதனின் கடமை எதுவாக இருந்திருக்க வேண்டும்?

இறைவனின் **அன்புத் திட்டத்தின்** பயனை அடைந்துகொள்ள அவரில் முழு **நம்பிக்கை** கொண்டு — அவரே தஞ்சம் என்று – வாழ்ந்திருக்கவேண்டும். ஆனால் மனிதன் செய்தது என்ன?

அவன் அதற்கு முற்றிலும் மாறாக நடந்தான். மனிதன் இறைவனில் அவநம்பிக்கை கொண்டான். ஆண்டவனின் அன்புத்திட்டத்

தைப் புறக்கணித்தான். இங்ஙனம் மனிதன் தன் சொந்தக் குற்றத்தினால் வாக்களிக்கப்பட்ட உன்னத நிலையை இழக்க நேர்ந்தது. இதன் விளைவாக தந்தை – மகன், தெய்வீக உறவை மனிதன் இழந்தான். தெய்வீக மரபுரிமையையும் அவன் இழந்தான். பேறுடைய நிலையைப் புறக்கணித்தான். இறைவனைத் தன் தந்தை என்று அழைக்க முடியாத அவல நிலைக்கு மனிதன் உள்ளானான்.

**கடவுள் திருமொழி:**

கடவுள் ஆதாமை நோக்கிக் கூறியவை:

''நீ உன் மனைவியின் சொல்லுக்குச் செவிசாய்த்து 'உண்ண வேண்டாம்' என்று நாம் விலக்கி இருந்த மரத்தின் கனியைத் தின்றதினால் உன் பொருட்டுப் பூமி சபிக்கப்பட்டிருக்கும்.

நீ உழைத்துத்தான் உன் வாழ்நாளெல்லாம் அதன் பலனை உண்பாய்.

அது உனக்கு முட்களையும், முட்செடிகளையும் விளைவிக்கும்

பூமியின் புல் பூண்டுகளை நீ உண்பாய்

நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உண்பாய்

இறுதியில் நீ எந்தப் பூமியிலிருந்து எடுக்கப்பட்டாயோ

அந்தப் பூமிக்கே திரும்பிப் போவாய்''

*(ஆதியாகமம் 3 : 1—19).*

**செயல் திட்டம் :**

1. வகுப்பில் ஏன் நேர அட்டவணை இருக்கிறது? நேர அட்டவணைப்படி நடக்கத் தவறினால் ஏற்படக்கூடிய தீய விளைவுகள் எவை?
2. ஆசிரியர்களிலும், பெற்றோரிலும் நீர் கொண்டுள்ள நம்பிக்கையை எப்படி வெளிக்காட்டுவீர்? இந்த நம்பிக்கையை இழப்பதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் எவை?

**வாழ்க்கைக்கு :**

எனக்கு இறைவன் செய்த வியப்புக்குரிய செயல்களுக்காக நன்றி செலுத்துவேன்.

எனக்கு உதவி செய்பவரான அவருக்கு என்றும் புகழ் பாடுவேன்.

*(சங்கீதம் 9 : 1);*

**விடை தருக :**

1. படைப்பிலே இறைவனின் திட்டம் என்ன?

2. கடவுளின் அன்பை மனிதன் புறக்கணிக்கும்போது நிகழ்வது யாது?

## பாடம் 10

# இறைவனின் அன்பை மனிதன் புறக்கணித்ததால் ஏற்பட்ட விளைவு---2.

''மகனே! உனக்கும் காய்ச்சல் மாறியதும் 'சொக்கிலேற்றும்', 'ஐஸ்' பழமும் வாங்கித் தருவேன். சுகம் அடைந்ததும் உன்னை வீட்டுக்கு அழைத்துப் போவேன் கண்ணே! .. அதன்பின் நீ பள்ளிக்குப் போகலாம். நண்பர்களுடன் விளையாடலாம். இப்போது இந்த மருந்தைக் குடி. விரைவாகச் சுகம் அடைய இது உதவிசெய்யும். அதுவரை நீ படுக்கையில் படுத்துக்கொள்.''

பொது மருத்துவ மனையில் சிறுவர் சிகிச்சை விடுதி ஒன்றில் இந்த உரையாடல் நடந்தது. இப்பிள்ளைக்கு விருப்பமான பல காரியங்கள் இருக்கின்றன. ஆனால் அவை எதையும் அவன் இப்போது பெற முடியாது. பதிலாக குளிகை, கலவை மருந்து, 'சூப்' என்பனவே அவனுக்குக் கிடைக்கின்றன. இப்போதைக்கு வீட்டுக்குப் போகவோ, விளையாடவோ முடியாத நிலை. ஏன் இந்த நிலை? அவன் காய்ச்சலாய் இருப்பதே இதற்குக் காரணம். நல்ல சுக நிலையில் அவன் இப்போது இல்லை.

மனிதன் இறைவனின் அன்பைப் புறக்கணித்ததால் இறைவனின் பிள்ளை என்ற உரிமையை இழந்தான். இதன் விளைவாகப் பல தொல்லைகளை அவன் எதிர்நோக்க வேண்டியிருந்தது. இறைவன் தனக்குக் கொடுக்கவில்லை என்று நினைத்ததை அடையவேண்டும் என்று மனிதன் ஆசைப்பட்டான். அதனால் அவன் கடவுளுக்குக் கீழ்ப்படியாது நடந்தான்; இதனால் தனது ஆசைகளுக்கு அடிமையானான். இறைவனின் அன்புத் திட்டத்தை ஏற்க மறுத்தான் மனிதன். தன் ஆசைகளுக்கு அடிமையாகி, இறைவனின் அன்பை வேண்டாம் என்று தள்ளியதால் அவன் வெறுப்புடன் வாழ வேண்டியிருந்தது. இதனால் இறைவனையும், அவரது படைப்புகளையும் வெறுக்கத் தொடங்கினான். இறையடியார்களைக் கூட அவன் பகைத்தான். கடவுளின் திட்டத்தைத் தகர்த்தெறிவதே அவனது ஆவலாக மாறியது. இதன் விளைவாக முடிவில்லாப் பேரின்பத்தை அடையும் வழியையும் இழந்தான். இறை ஒளியில் இருந்து விலகிக் குழப்பம் நிறைந்த இருளை நோக்கி விரைந்தான். தன் வாழ்விற்கு விளக்கம் அளிக்கக்கூடிய இறைவனில் இருந்து அகன்றான். அவனது பெலவீனம்

படிப்படியாக வளர்ந்தது: நன்மை தீமையைப் பகுத்தறியமுடியாத மயக்க நிலையை அடைந்தான். இதன் விளைவாகப் போர், உள்நாட்டுக் குழப்பங்கள், கொடிய குற்றச் செயல்கள் ஏற்படுகின்றன. மனிதன் கடவுளின் அன்பையும், தெய்வீக வாழ்க்கையையும் புறக்கணித்ததன் விளைவாக நோய், சாவு என்பவற்றுக்கு உள்ளாகவேண்டி இருந்தது. இத்தீய விளைவுகள் தனக்குக் கிடைத்த ஒருவகைத் தண்டனை என்பதை மனிதன் புரிந்துகொண்டான். வேதாகமத்தில் குறிக்கப்பட்டுள்ளதுபோல் இன்பவனத்தில் தனக்கிருந்த உரிமையை இழந்து விட்டான்.

**கடவுள் திருமொழி :**

சோதனைக்குள்ளாகும் எவனும் இச்சோதனை கடவுளிடம் இருந்தே வருகிறது எனச் சொல்லக்கூடாது
ஏனெனில் கடவுள் தீமை புரியச் சோதிக்கப்படுபவர் அல்லர்; ஒருவரையும் அவர் சோதிப்பதும் இல்லை.
ஒருவன் சோதனைக்குட்படுவது தன் சொந்த இச்சையாலேதான்
அதுவே அவனைக் கவர்ந்து தன்வயப்படுத்துகின்றது
இச்சையோ கருவுற்றுப் பாவத்தைப் பெற்றெடுக்கிறது
பாவம் முழு வளர்ச்சியடைந்து சாவை ஈன்றெடுக்கிறது.

(*யாகப்பர் 1 : 13—15*).

**செயல் திட்டம்:**

1. அயல் வீட்டுக்காரர் தம்முள் சண்டை, சச்சரவு இடுவதற்குக் காரணம் என்ன?
2. அயலவர்களின் ஒற்றுமையைப் பாதுகாப்பதற்கு உதவியான மூன்று நற்செயல்கள் கூறுக.

**வாழ்க்கைக்கு:**

விசுவாசமுயற்சி

என் சர்வேசுரா சுவாமி! திருச்சபை விசுவசித்துக் கற்பிக்கிற சத்தியங்களை எல்லாம் தேவரீர் தாமே அறிவித்திருப்பதினால் நானும் உறுதியாக விசுவசிக்கிறேன், ஆமென்.

**விடை தருக:**

1. மனிதன் ஏன் நோய், துன்பம், மரணம் என்பவற்றை எதிர் நோக்கவேண்டி இருக்கிறது?
2. உலகில் போர்களும், குற்றச் செயல்களும் நடப்பதற்கு அடிப்படைக் காரணம் என்ன?

## பாடம் 11

# வீழ்ச்சி அடைந்த மனிதனை மீட்க கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தார்

**மீட்புப் பற்றிய வாக்குறுதி:**

*'இதோ, கொழும்பு பொது மருத்துவ மனையில் இருந்து ஒரு வேண்டுகோள்; விபத்தில் சிக்கிய ஒருவருக்கு 'ஓ' தொகுதி இரத்தம் உடனடியாகத் தேவைப்படுகிறது. குறிப்பிட்ட இரத்தத் தொகுதியைச் சேர்ந்த இரத்ததானம் வழங்க முன் வருபவர்கள் தயவுகூர்ந்து மருத்துவ மனைக்கு வரவும்.'*

இலங்கை வானொலியில் இது போன்ற வேண்டுகோளை நீங்களும் கேட்டிருக்கலாம். அந்த நோயாளி மிகப் பெலவீனமாக இருக்கிறன். எதுவுமே செய்ய அவனுக்குச் சக்தி இல்லை. உயிர் வாழ்வதற்குப் போதிய இரத்தம் அவன் உடலில் இப்போது இல்லை. அவனது உயிர் ஊசல் ஆடிக்கொண்டிருக்கிறது, எவராவது அவனுக்கு இரத்ததானம் செய்தால் அவன் உயிர் பிழைக்கலாம். ஆனால் இரத்ததானம் செய்பவர் நோயாளியின் இரத்தத் தொகுதியை உடையவராய் இருத்தல் அவசியம். அப்போதுதான் அவன் சுகம் பெற முடியும். இரத்தம் வழங்குபவர் வரும்வரையில் நோயாளி இரத்தம் பாய்ச்சுவதற்கு ஆயத்தம் செய்யப்பட வேண்டும்.

இறைவனின் பிள்ளை என்ற உறவை இழந்த மனிதனும் உண்மையில் சக்தி குறைந்து, மிகப் பெலவீனம் அடைந்திருந்தான். மனிதன் இறைவனின் அன்புத் திட்டத்தை வேண்டாம் என்று புறக்கணித்திருந்தான். (இதுதான் அவனுக்கேற்பட்ட விபத்து). முடிவில்லா வாழ்வை அவன் இழந்திருந்தான். அவனது புத்தி மழுங்கியது. நன்மை தீமையைப் பகுத்தறியும் சக்தி குன்றியது; தனது சுதந்திரத்தைத் தவறான வழியில் பயன்படுத்தும்படி அவன் தூண்டப்பட்டான்.

மனித இனத்தின் இந்த அவலநிலை கண்டு இறைவன் இரங்கினார். மனிதனின் அன்புத் தந்தை அல்லவா அவர். இறைவன் அளப்பரிய இரக்கத்தின் விளைவாக **மீட்பர்** ஒருவரை வாக்களித்திருந்தார். மீட்பர் தான் மனிதனை மீண்டும் இறைவனிடம் அழைத்து வரவேண்டி இருந்தது. இதுவே **மீட்புத் திட்டம்.**

மனிதன் இறைவனுக்குப் பணிந்து நடக்க மறுத்தான். அவன் தன்னைக் கடவுளுடன் சமமாக்க எண்ணினன்; தானும் இறைவனும் சரிநிகர் ஆகலாம் என்று மனிதன் நினைத்தான். அவன் கடவுள் மீது அவநம்பிக்கை கொண்டான். தெய்வீக வாழ்வை இழந்தான். எனவே

மனிதன் தன் குற்றத்தின் கனுகனத்தை உணர வேண்டும் என்று இறைவன் விரும்பினுர். மனிதன் மீண்டும் தம்முடன் உறவு கொள்ள ஒப்புரவாக அவனை ஆயத்தப்படுத்தத் திருச் சித்தம் கொண்டார்.

மனிதன் கடவுள்மீது அவநம்பிக்கை கொண்டதினுல், அவரிலே மீளவும் விசுவாசம் கொள்ள வேண்டியது அவசியம் ஆயிற்று. தெய்வீக வாழ்வை இழந்த மனிதன் மீட்பரின் வழியாக மீட்புப் பெற முடியும் என்ற நம்பிக்கை கொள்ள வேண்டி இருந்தது. இறைவனைப் புறக் கணித்த மனிதன் அவருக்கு அன்பு செய்யக் கற்றுக் கொள்ள வேண்டியவன் ஆனுன். மீட்புத் திட்டத்துக்கு மனிதனை ஆயத்தம் செய்வதற்கு இம்மூன்று புண்ணியங்களும் அவனுக்குத் தேவையாக இருந்தன. பயனுள்ள முறையில் மனிதனை ஆயத்தம் செய்வதற்காக மீட்பரின் வருகை தாழ்த்தப்பட்டது.

கடவுள் திருமொழி :

ஒரே மனிதனுல் பாவமும், பாவத்தால் சாவும் இந்த உலகத்தில் நுழைந்தது போலவும் ......... இவ்வாறு எல்லாரும் பாவம் செய்தமையால் எல்லா மனிதர்க்குள்ளும் சாவு பரவியது போலவும் ...

(உரோமர் 5 : 12 – 18)

செயல் திட்டம் :

1. உதவி புரிய எவரும் இல்லாது இருக்கும்போது யாரிடம் உதவி கேட்பீர்?

2. 'உடனடியாக மீட்பர் அனுப்பப்படவில்லை' ஏன்?

வாழ்க்கைக்கு :

பல்லவி

கலங்கரைச் சுடரே வாராய்
நலம்பெற வரமே தாராய் (கலங்கரை)

அனுபல்லவி

கவலைகளால் உலகினில் உழன்ரேம்
கதிபெறும் வழியறியோமே; தேவா வாராய்

சரணம்

வனமதில் ஏவை புரி வினையாலே
வானக வாழ்வினை இழந்தோம்
தினமெம் பாவம் தரும் துயராலே
மனதில் அமைதியை இழந்தோம்
கருணைக் கடலே கைவிடலாமோ
கனிந்தெமைத் தேற்றிடவாராய், தேவா வாராய்.

விடை தருக :

1. கீழ்ப்படியாமையால் மனிதன் என்ன செய்தான்?
2. மீட்புத் திட்டம் என்ருல் என்ன?

ஆய்வுப் பொருள் 3

பாடம் 12

# வீழ்ச்சியடைந்த மனிதனை மீட்க கிறிஸ்து இந்த உலகிற்கு வந்தார்

மனித அவதாரம்

இன்பம் பொங்கும் மாலை நேரம். எங்கும் அமைதி. இளம் பெண் ஒருத்தி ஓர் அறையில் செபித்துக் கொண்டிருக்கிறாள். திடீரென ஒளி அறையை நிரப்புகின்றது. ஒளியின் மத்தியில் வானதூதன் தோன்றுகிறான். அவன் அக்கன்னிகையை '' அருள் நிறைந்தவளே வாழ்க '' என்று வாழ்த்துகிறான்.

உலக வரலாற்றிலேயே மிகவும் அழகான நிகழ்ச்சி இங்ஙனம் ஆரம்பமாகின்றது. இது ஒரு கவர்ச்சி மிக்க நிகழ்ச்சி. மனிதன் இறைவனில் கொண்டிருந்த நம்பிக்கைக்கு ஒரு விடை, ஆலய மணிகளின் ஒலியுடன் இணைந்து நாம் 'மூவேளைச் செபம்' செபிக்கும் போது இவ்வரிய உண்மை நிகழ்ச்சியை நினைவு கூருகிறோம்.

தொடக்கத்திலே இருந்த இன்ப நிலையை மனிதன் எவ்வாறு இழந்தான் என்பதையும், மீட்பர் ஒருவரைத் தருவதாக இறைவன் அளித்த வாக்குறுதியையும் பற்றி முன்னைய பாடத்தில் அறிந்திருக்கிறீர்கள். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மக்கள் மீட்பரின் வருகையை நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்தனர். மீட்பரை வரவேற்க இஸ்ராயேலர் என்ற ஒரு தனிப்பட்ட இனத்தை இறைவன் தெரிந்துகொண்டார். தமது மீட்பின் திட்டத்துக்கேற்ப அந்த இனத்தை வழிநடத்தினார். படிப்படியாக அவர்களிடம் விசுவாசம் நிலைபெற்றது. மீட்புப் பெறுவோம் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் வாழ்ந்தனர். நாம் அன்பைப் பெறவும் பிறர்க்கு அன்புசெய்யவும் அவர்கள் பயிற்றப்பட்டனர்.

மனித வரலாற்றின் இக்கால கட்டத்தில் முதல் குறிப்பிட்ட சம்பவம் நிகழ்ந்தது. அக்கன்னிகையை வானதூதன் வாழ்த்தி,

''அருள் நிறைந்தவள் நீரே. கர்த்தர் உம்முடனே, பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே'' என்றார்.

இதைக்கேட்ட அக்கன்னிகை கலங்கினாள். அப்போது வானதூதன் மீட்பின் திட்டத்தை அவள் அறியச் செய்தான். அவளே மீட்பரின் தாயாராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறாள் என்பதையும் வெளிப்படுத்தினான். இறைவனின் சித்தத்துக்கு அவள் பணிந்தாள். அந்த நேரத்திற்றானே இறைமகன் அவளது வயிற்றிலே மனு உரு எடுத்தார். இந்நிகழ்ச்சி கலிலேயாவில் உள்ள நசரேத்து என்னும்

ஊரில் நடந்தது. அக்கன்னிகையின் பெயர் மரியாள். மனு உரு எடுத்த இறைமகன் இயேசுக்கிறிஸ்து. கிறிஸ்து உலகிற் பிறந்த நாளை நத்தார் (கிறிஸ்மஸ்) அன்று நினைவு கூருகிறோம்.

இறைமகன் மனு உரு எடுத்தது **மனித அவதாரம்** என அழைக்கப் படுகிறது. மனித அவதாரம் எடுத்தபோது, இறைமகன் எம்மைப் போல் மனிதன் ஆனார். எமது இன்பதுன்பங்களில் பங்குகொள்பவர் ஆனார். இவ்வுலக வாழ்வில் எம்முடன் இணைந்தார். வீழ்ச்சியடைந்த மனிதனுக்கு இறைவனின் அன்பைக் காட்டுவதற்காக இறைவனாகிய அவரே மனிதன் ஆனார். இறைவனை அன்பு செய்வது எவ்வாறு என்று காட்டினார். மனிதவதாரத்தை இறைவன் எப்படி மனுவுருவாகலாம் என்பதை எமது புத்தியால் விளங்கிக்கொள்வது சிரமம். இதனாற்றான் இது **'மனிதவதாரத்தின் மறைபொருள்'** என அழைக்கப்படுகின்றது.

**கடவுள் திருமொழி :**

ஆதியிலே வார்த்தை இருந்தார்
அவ்வார்த்தை கடவுளோடு இருந்தார் (அருளப்பர் 1 : 1)
வார்த்தை உண்மையான ஒளி
ஒவ்வொருவனையும் ஒளிர்விக்கும் அவ்வொளி
உலகுக்கு வந்து கொண்டிருந்தது
வார்த்தை உலகில் இருந்தார்
அவர் வழியாகத்தான் உலகம் உண்டானது
உலகமோ அவரை அறிந்து கொள்ளவில்லை
தமக்குரிய இடத்துக்கு வந்தார்
அவருக்குரியவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை
(அருளப்பர் 1 : 9 – 11)

**செயல் திட்டம் :**

1. மங்களவார்த்தைச் செபத்தை மனனம் செய்தல்
2. மூவேளைச் செபத்தை மனனம் செய்தல்

**வாழ்க்கைக்கு :**

**சிமியோன் கீதம்**

ஆண்டவரே! இப்போது உம் அடியானை அமைதியாகப் போக [விடும்
ஏனெனில் உமது வாக்கு நிறைவேறிற்று
மக்கள் அனைவரும் காண நீர் ஆயத்தம் செய்துள்ள
உமது மீட்பை என் கண்கள் கண்டு கொண்டன
இதுவே புற இனத்தாருக்கு இருள் அகற்றும் ஒளி
இதுவே உம்மக்கள் இஸ்ராயேலை ஒளிர்விக்கும் மாட்சிமை
(லூக்காஸ் 2 ; 29—32)

**விடை தருக :**

1. மெசியாவை வரவேற்கத் தெரிந்துகொள்ளப்பட்ட குலத்தின் பெயர் என்ன?
2. இறைமகன் மனித அவதாரம் எடுத்த மறைபொருளைச் செபமாலையின் எந்தத் தேவஇரகசியத்தில் தியானிக்கிறோம்?

# பாடம் 13

# மீட்பின் நற்செய்தி I

**கிறிஸ்துவின் பகிரங்க வாழ்வு**

*"சூசை என்ற தச்சனின் மகன் அல்லவா இவர். யாருடைய அதிகாரத்தைக் கொண்டு இவ்வாறு போதிக்கிறார்?"*

நசரேத்து என்னும் சிற்றூரில் இவ்வாறு பலரும் பேசிக்கொண்டனர். அந்த ஊரில் உள்ள செபக்கூடத்தில் ஓய்வுநாள் ஒன்றில் நடந்த ஒரு சம்பவத்தின் பின்பே இச்செய்தி எங்கும் பரவியது. மறைநூலின் ஒரு பகுதிக்கு இளைஞன் ஒருவன் விளக்கம் அளித்ததே இச்செய்தி பரவியதற்குக் காரணமாய் இருந்தது. அவன் நசரேத்து ஊரில் நன்கு அறியப்பட்டிருந்தான். "ஆனால்......அவனோ அந்த ஊர்த் தச்சனின் மகன். அந்தச் சிறுவனைப்பற்றி ஊரார் அறிந்தது இவ்வளவுதான்.

அந்த இளைஞன் இயேசுக்கிறிஸ்துவே அன்றி வேறு எவரும் அல்லர். இதுவரை அவர் தம் வளர்ப்புத் தந்தையாகிய சூசைக்கும், தாய் மரியாளுக்கும் உதவிசெய்து மறைந்த வாழ்க்கை நடாத்தி வந்தார். அவர் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து ஞானத்திலும், வயதிலும், புண்ணியத்திலும் வளர்ந்து வந்தார். ஆனால் அவர் இறைவனின் மகன் என்ற உண்மை வளர்ப்புத் தந்தை சூசைக்கும், தாய் மரியாளுக்கும் மாத்திரம் தெரியும்.

அக்காலத்தில் அருளப்பர் எனப்பட்ட தவசி ஒருவர் வாழ்ந்தார். அந்த முனிவர் மெசியா என்னும் மீட்பரின் வருகைக்காக மக்களை ஆயத்தப்படுத்தினார். பாவங்களுக்காக மனம் வருந்தி, நல்வாழ்வு வாழவேண்டுமென மக்களுக்கு எச்சரிக்கை செய்தார். மனமாற்றத்தின் அடையாளமாக மக்களுக்குத் திருமுழுக்கும் கொடுத்தார். யோர்தான் ஆற்றங்கரையில் இது நடைபெற்றது. ஒருநாள் இயேசுவும் திருமுழுக்குப் பெறுவதற்கு அருளப்பரிடம் வந்தார். திருமுழுக்குப் பெற்றபின் கிறிஸ்து செபம்செய்யத் தொடங்கினார். அப்போது பரிசுத்த ஆவி புறாவடிவாய் அவர்மீது இறங்கினார். வானத்திலிருந்து வந்த ஒரு குரல் அங்கு நிலவிய அமைதியைக் குலைத்தது. ...... "நீரே என் அன்பார்ந்த மகன், உம்மிடம் நான் பூரிப்படைகிறேன்" என்பதே அக்குரல் ஒலி ஆகும்.

திருமுழுக்குப் பெற்றபின் கிறிஸ்து பாலைவனத்திற்குச் சென்று நாற்பது நாட்களாக நோன்பு இருந்தார். நோன்பு என்றால் எதுவும்

உண்ணுமல்இருந்தால் என்பது பொருள். பின்னர் அவர் கலிலேயாவுக்குச் சென்று நற்செய்தியைப் போதிக்கத் தொடங்கினுர்.

''காலம் நிறைவேறிவிட்டது. கடவுளின் அரசு நெருங்கி விட்டது. மனந்திரும்பி இந்நற்செய்தியை நம்புங்கள்'' என்ருர் அவர். இதுவே அவரது பணியின் தொடக்கமாகும். பின்னர் அவர் பன்னிரண்டு சீடர்களைத் தெரிந்தெடுத்தார். சீடர்களையும் அழைத்துக் கொண்டு பலஸ்தீனு எங்கும் மீட்பின் நற்செய்தியைப் போதித்துக் கொண்டு வந்தார்.

**கடவுள் திருமொழி :**

*வார்த்தை மனுவுரு ஆனுர்*
*நம்மிடையே குடிகொண்டார்*
*அவரது மாட்சிமையை நாங்கள் கண்டோம்*
*தந்தையிடம் இருந்து அவர் பெற்ற இம்மாட்சிமை*
*ஒரே பேருன அவருக்கு ஏற்ற மாட்சிமையே*
*ஆகவே அவர் அருளும் உண்மையும் நிறைந்து விளங்கினுர்*

*(அருளப்பர் 1 : 14).*

**செயல் திட்டம் :**

1. இயேசு முப்பது வயதுவரையும் எப்படி வாழ்ந்தார்? இதிலிருந்து நீர் கற்றுக்கொள்வது என்ன?
2. கிறிஸ்து தமது பணிக்கு எவ்வாறு ஆயத்தம் செய்தார்?

**வாழ்க்கைக்கு:**

**பரிசுத்த ஆவியின் செபம்**

பரிசுத்த ஆவியே, தேவரீர் எழுந்தருளி வாரும், உமது விசுவாசிகளின் இருதயங்களை நிரப்பி, உமது நேசத்தின் அக்கினியை அவர்களிடத்தில் பற்றி எரியச் செய்தருளும்.

ஆண்டவரே உமது பரிசுத்தஆவியை எங்களிடத்தில் அனுப்பியருளும்.

அப்போது எங்கள் இருதயங்கள் புதுப்பிக்கப்படும்.
செபிப்போமாக,

பரிசுத்த ஆவியின் பிரகாசத்தினுல் விசுவாசிகளின் இருதயங்களைப் படிப்பித்தருளின சர்வேசுரா, நாங்களும் அதே பரிசுத்த ஆவியின் வரத்தினுல் நல்லவைகளை விரும்பவும், அவருடைய ஆறுதலை எப்போதும் பெற்று அக்களிக்கவும் பண்ணியருளும். இந்த மன்ருட்டை எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துநாதர் மூலமாக ஏற்றுத் தந்தருளும், ஆமென்.

*விடை தருக:*

1. திருமுழுக்கு அருளப்பரின் பணி என்ன?
2. கிறிஸ்துவின் நற்செய்தி என்ன?

ஆய்வுப் பொருள் 3

## பாடம் 14

# மீட்பின் நற்செய்தி II

கிறிஸ்து தாம் இறைமகன் என்று சான்றுபகர்கிறார்

என் மக்கள் என்று அழைக்கும் அளவுக்கு இறைவன் இஸ்ராயேல் மக்களை அன்புசெய்து வந்தார். அவர்கள் வாழ்ந்த நாட்டில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. இதனால் அயலில் உள்ள எகிப்து நாட்டில் குடியேறினர். சிலகாலம் மகிழ்ச்சியாக அங்கு வாழ்ந்தனர். ஆனால் காலப்போக்கில் அந்நாட்டு மன்னன் இஸ்ராயேல் மக்களைக் கொடுமைப்படுத்தினான். அவர்களை அடிமைகள் ஆக்கினான் இஸ்ராயேலரின் சந்ததியை அழிக்கும் நோக்கத்துடன், பிறக்கும் எல்லா ஆண் குழந்தைகளையும் கொன்றுவிடும்படி ஆணையிட்டான். அவர்கள் கடினமான வேலைசெய்து துன்பப்பட்டார்கள். துன்பம் தாங்காத இஸ்ராயேலர் கடவுளை நோக்கிக் கூக்குரல் இட்டு அழுதார்கள். மக்களின் துயரைக் கண்டு இறைவன் இரங்கினார். இஸ்ராயேல் குலத்தைச் சேர்ந்த மோயீசன் என்ற தலைவனை இறைவன் தேர்ந்தெடுத்தார்.

இஸ்ராயேல் மக்களை விடுதலைசெய்யும்படி பார்வோன் அரசனிடம் மோயீசன் கேட்டார். ஆனால் அரசன் அதற்கு இணங்கவில்லை. இருந்தும் வியத்தகுமுறையில் இஸ்ராயேல் மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்தார். அவர்களின் சொந்த இடமாகிய கானான் நாட்டுக்கு அழைத்துச் சென்றார். இஸ்ராயேலரை விடுதலையாக்க மோயீசன் பல ஆண்டுகளாக அயராது உழைத்தார். வல்லமை பொருந்திய பார்வோன் மன்னனை எதிர்த்து இஸ்ராயேலருக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்த விருதலை வீரன் மோயீசன். மோயீசனது வெற்றியும், புகழும் என்றும் நிலைக்கும்.

கிறிஸ்துநாதரும் இதேபோன்றதொரு பணி செய்யவே உலகிற் பிறந்தார்.

பாவத்தினால் அடிமைப்பட்ட மனிதனை விடுதலை ஆக்குதலே, கிறிஸ்துவின் வருகைக்கான காரணம்.

பாவத்தினால் இறைவனை விட்டுப்பிரிந்த மனிதனை மீளவும் இறைவனிடம் வழிநடத்துவதற்காகக் கிறிஸ்து உலகில் மனித அவதாரம் எடுத்தார்.

பாவத்திற்கு அடிமையாகி இருந்த மனிதன் இறைவனில் நம்பிக்கை கொள்ளவில்லை; அவருக்குப் பணிந்து நடக்க மறுத்தான்; பிறரை வெறுத்தான்; தன் உடல் இச்சைகளுக்கு ஆளானன்.

இதனுல் மனிதன் அறியாமைக்கும், மரணத்துக்கும் ஆளானன்.

எகிப்தியர் இஸ்ராயேல் மக்களை அநீதியாக நடாத்தினர். நீதி முறை இல்லாத ஒரு குழுவினர் வேருெரு குழுவினரை நசுக்குதலைச் சமூக அநீதி என்கிருேம். சமூக அநீதியை ஒழிப்பதற்காக மோயீசன் பாடுபட்டார். இதற்காக அவர் தமது அரண்மனை வாழ்வைத் துறக்கவேண்டி ஏற்பட்டது. அடிமைத்தனத்தில் அவதிப்பட்டோரை விடுதலை செய்வதற்காகத் தனது உயிரையே இழப்பதற்கும் அவர் தயாராக இருந்தார். நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் துன்பம் நிறைந்த நீண்ட பயணம் செய்தார்.

பாவத்தினுல் மனிதர் அடிமைப்பட்டிருப்பதை இயேசுக்கிறிஸ்து நாதர் விரும்பவில்லை. இதற்காக மனிதருடன் வாழ்ந்து அவர்களுடன் வேதனைப்படவும் திருவுள்ளம்கொண்டார். பாவமாகிய அடிமைத் தளையை ஒழிப்பதற்குத் துணிந்து முன்வந்தார் கிறிஸ்து. ஆனுல் இவற்றிலும் மேலாகக் கிறிஸ்து தாமே கடவுளின் மகன், இறைவனின் திட்டப்படி இறைவனிடமிருந்து வந்தவர். தாமே எதிர் பார்த்த மீட்பர்...... என்பனவற்றை எண்பித்தல் அவரது முக்கிய பணியாக அமைந்தது. மிகவும் சீரிய முறையில் இவை அனைத்தையும் கிறிஸ்து எண்பித்தார்.

கடவுளால் மட்டும் செய்யக்கூடிய செயல்களைக் கிறிஸ்து தமது சொந்த வல்லமையால் செய்துகாட்டினுர். கண் தெரியாதவர்களுக்குப் பார்வை அளித்தார். ஊமைகளைப் பேச வைத்தார். தீராத நோய்களைக் குணமாக்கினுர். இறந்தோரை உயிர்ப்பித்தார். இன்னும் தாம் கடவுளின் மகன் என்பதை எண்பித்தார்.

கிறிஸ்து கடவுளுக்காக வாழ்ந்தார். தமது பிதாவுடைய திருச்சித்தத்தை நிறைவேற்றினுர். மனித இதயங்களில் அன்பு வளரச் செய்தார். தாம் கடவுளிடமிருந்து வந்தவர் என்பதை எமக்கு காட்டினுர். மெசியாவைப்பற்றி முன் மொழியப்பட்ட இறைவாக்குகள் கிறிஸ்துவின் வாழ்வில் நிறைவேறின. இதுவும் கிறிஸ்துவே மீட்பர் என்பதற்குச் சான்ருகும்.

**கடவுள் திருமொழி:**

ஆண்டவருடைய ஆவி என் மேலே,
ஏனெனில் என்னை அபிஷேகம் செய்துள்ளார்.

எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும்,
சிறைப்பட்டோர் விடுதலையடையவும்,
குருடர் பார்வை பெறுவர் என அறிவிக்கவும்,
ஒடுக்கப்பட்டோர்க்கு உரிமை வாழ்வு வழங்கவும்,
ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவிக்கவும்,
அவர் என்னை அனுப்பினார்

(லூக்காஸ் 4 : 15 – 19).

செயல் திட்டம்:

1. கிறிஸ்து உலகிற்கு ஏன் வந்தார்?
2. மாணவன் ஆன நீர் கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்த நோக்கத்தில் எவ்விதம் பங்குகொள்வீர்?

வாழ்க்கைக்கு:

பாட்டு

1. ஏசு என்னும் திருப்பேரை, என்றும் சொல்லி மகிழ்வேனே
நேசங் கூர்ந்து நமையாள, நிலத்திற் பிறந்த மெசியாதான்
2. நாதன் தந்த பேராகும், நங்கை உவந்த பேராகும்
தூதன் உரைத்த பேராகும், குசை வைத்த பேராகும்
3. நாவால் அப்பேர் சொல்லுங்கால், நறுந் தேன்போலத் தித்திக்கும்
நாவால் செய்த பாவம்போம், நாவின் நலமும் கைகூடும்
4. நெஞ்சால் அப்பேர் நினையுங்கால், நெடிய இன்பம் நிறையுமே
நெஞ்சால் செய்த பாவம் போம், நேயங் கருணை நிறையுமே.

விடை தருக:

1. கிறிஸ்து ஏன் உலகில் வாழ்ந்தார்?
2. தாமே மீட்பர் என்பதை எவ்விதம் எண்பித்தார்?



## பாடம் 15

# கிறிஸ்து தந்தையிடம் செல்லும் வழியைக் காட்டுகிறார் I

போதனை

கிறிஸ்து ஒருநாள் போதித்துக்கொண்டிருந்தார். அவரது போதனைக்குச் செவி சாய்த்துக்கொண்டிருந்த சட்ட வல்லுனன் ஒருவன் அவரை நோக்கி, ''கட்டளைகளுள் எது மிகப் பெரியது?'' என்றான். அதற்கு அவர்,

''உன் கடவுளாகிய ஆண்டவருக்கு உன் முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு வலிமையோடும், முழு மனத்தோடும் அன்பு செய்வாயாக. உன்மீது நீ அன்பு காட்டுவதுபோல் உன் அயலான் மீதும் அன்பு காட்டுவாயாக'' என்றார்.

இந்த இரண்டு கட்டளைகளும் சட்டத்தை முழுமையாக அடக்கியுள்ளன, இந்த விடையானது கிறிஸ்துவின் போதனையின் சுருக்கமாகும். மனிதனை மீண்டும் இறைவனிடம் அழைத்துச் செல்வதற்காக அவர் அன்பின் வழியைக் கடைப்பிடித்தார். இறைவனின் பிள்ளைகளாக இருக்கவேண்டின், எமது பகைவர்களைத்தானும் அன்பு செய்யவேண்டும் என்று படிப்பித்தார். எங்களைத் துன்புறுத்துபவர்களுக்காக வேண்டிக்கொள்ள எங்களுக்கு அறிவுரை கூறினார்; எங்களுக்குத் தீமைசெய்பவர்களையும் மன்னிக்கவேண்டுமென்று எம்மைப் பயிற்றினார். பிழையாகத் தீர்ப்பிடுவது அநீதி என்று காண்பித்தார். அவர் எங்களுக்குப் படிப்பித்த செபத்தில் ''எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் மன்னிப்பதுபோல், எங்கள் பாவங்களையும் மன்னித்தருளும்'' என்று வேண்டுகிறோம்.

பிறர் எமக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறோமோ அதையே மற்றவர்களுக்கும் நாம் செய்யவேண்டுமென இயேசு படிப்பித்தார். இதுமட்டுமன்று, படியின்முன் எமது காணிக்கையை வைத்துவிட்டு, நாம் மனத்தாங்கல் கொண்டிருக்கும் சகோதரருடன் சமாதானம் செய்த பின்னரே காணிக்கையைச் செலுத்தும்படி எமக்கு நன்மதி கூறினார். தந்தையாகிய இறைவனிடம் மக்களை இயேசு இவ்வாறு வழி நடத்துகிறார்.

கடவுள் திருமொழி :

''நான் யாரென்று மக்கள் சொல்லுகிறார்கள்''

(மத்தேயு 16 : 13);

செயல் திட்டம் :

1. அதிமேலான கட்டளை எது? மாணவன் என்ற முறையில் இக் கட்டளையின் இரண்டாம் பகுதியை எவ்வாறு நிறைவேற்றுவீர்?
2. உடன் மாணவர்க்கிடையே நல்லுறவை வளர்ப்பதற்கு நீர் செய்யக்கூடிய ஐந்து செயல்களைக் கூறுக.

வாழ்க்கைக்கு :

அன்பும் நட்பும் எங்குளதோ அங்கே இறைவன் இருக்கின்றார்.

1. கிறிஸ்துவின் அன்பு நம்மையெல்லாம் ஒன்றாய்க் கூட்டிச் சேர்த்ததுவே
அவரில் அக்களித்திடுவோம் யாம் அவரில் மகிழ்ச்சி கொள்வோமே
2. சீவிய தேவனுக் கஞ்சிடுவோம் அவருக் கன்பு செய்திடுவோம்
நேரிய உள்ளத்துடனே யாம் ஒருவரை ஒருவர் நேசிப்போம்.

விடை தருக :

1. மனத்தாங்கல் ஏற்பட்ட நம் சகோதரரோடு ஒப்புரவாகுதலின் முக்கியத்துவத்தைப் பற்றிக் கிறிஸ்து கூறியது என்ன?
2. கிறிஸ்துவின் போதனைப்படி 'நாம் இறைவனின் மக்கள்' என்று காண்பிக்க யாது செய்யவேண்டும்?

## பாடம் 16

# கிறிஸ்து தந்தையிடம் செல்லும் வழியைக் காட்டுகிறார் II

**புதுவாழ்வு அளிக்கிறார்**

மனம் வருந்துதல்மூலம் இறைவனின் அன்பை மீண்டும் எவ்வாறு அடைந்துகொள்ளலாம் என்று, இயேசு நமக்குக் காட்டுவதற்காகக் கூறிய ஒரு கதையை இன்று படிப்போம்.

ஒரு தகப்பனுக்கு மக்கள் இருவர் இருந்தனர். தனக்குரிய சொத்து முழுவதையும் தந்தையிடமிருந்து பெற்றுக்கொண்டு இளைய மகன் தூரதேசத்திற்குச் சென்று, எல்லாவற்றையும் வீணாகச் செலவழித்தான். வாழ வழியில்லாது பன்றிமேய்க்கும் தொழிலில் அமர்ந்தான். அவன் உண்பதற்குப் போதிய உணவில்லை; எனவே பன்றிகளின் உணவை உண்ணவேண்டி ஏற்பட்டது. அதேவேளையில் தன் தந்தையோடு இருந்திருந்தால் எவ்வளவு நலமாயிருக்கும் என்றும் உணர்ந்தான். இறுதியில் தன் தந்தையிடம் திரும்பினான். மன்னிப்புக் கோரினான். தன்னை ஒரு வேலைக்காரனாக எனினும் ஏற்றுக்கொள்ளும்படி கெஞ்சினான். தந்தை தன் மகனை அரவணைத்தார்; முத்தமிட்டார்; அன்போடு மீண்டும் அவனை ஏற்றுக்கொண்டார்.

ஒருநாள் இயேசு எருசலேம் தேவாலயத்திற்கு வந்தார். அப்போது மக்கள் கூட்டம் ஒரு பெண்ணை அவரிடம் இழுத்துவந்தனர். அவள் ஒரு பாவி என்று அவர்கள் கூறினர். சட்டத்தின்படி அவளைக் கல்லால் எறிந்து கொல்லவேண்டும் என்றனர். அப்போது கிறிஸ்து ''உங்களுள் பாவமில்லாதவன் முதலில் அவள்மீது கல்லெறியலாம்'' என்று மொழிந்தார். இதைச் சொன்னபின் இயேசு குனிந்து தரையில் எழுதத் தொடங்கினார். சொற்ப நேரத்தின்பின் இயேசு நிமிர்ந்து பார்த்தபோது அப்பெண் தனிமையாய் நின்றுகொண்டிருந்தாள். எல்லாரும் போய்விட்டனர். அப்பொது கிறிஸ்து அவளை நோக்கி, ''மகளே, வீட்டுக்குப்போ, இனிமேல் பாவம் செய்யாதே'' என்றார்.

இயேசு பாவிகளை ஒதுக்கித் தள்ளவில்லை. தண்டனை கொடுப்பதற்கான வழிவகைகளைக் கையாளவுமில்லை. அவர்கள்மீது இரங்கி அவர்களை மன்னித்தார். பாவத்தை வெற்றி கொள்வதற்கு அவர்களுக்குத் துணைபுரிந்தார். ''உண்மையாக மனம் வருந்துபவர்கள் நிச்சயமாகவே மன்னிக்கப்படுவார்கள்'' என்று கூறினார்.

கடவுள் திருமொழி :

அப்பொழுது தோமையார், ''ஆண்டவரே நீர் செல்லுமிடமே எங்களுக்குத் தெரியாதிருக்க, அங்கே போகும் வழி எப்படித் தெரியும்'' என்றார்.

இயேசுவோ,

''நானே வழியும் உண்மையும் உயிரும் என் வழியாலன்றி
எவனும் பரம தந்தையிடம் வருவதில்லை
நீங்கள் என்னை அறிந்திருந்தால்.
என் தந்தையையும் அறிந்திருப்பீர்கள்,
இதுமுதல், நீங்கள் அவரை அறிந்தவர்களாயிருக்கிறீர்கள்
அவரைக் கண்டும் இருக்கிறீர்கள்'' என்றார்

(அருளப்பர் 14 : 5—7).

செயல் திட்டம் :

1. பாடசாலையில் நீர் பிறருக்கு மன்னிப்பளிக்கக்கூடிய மூன்று சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.
2. நற்செய்தியில் மரியமதலேனாளைப் பற்றிப் படித்தறிக (லூக்கா 7 : 36—50).
3. ஊதாரிப்பிள்ளையின் உவமை — நடித்தல்.

வாழ்க்கைக்கு :

சுருக்கமான மனஸ்தாபச் செபம்

என் ஆண்டவரே! அளவில்லாத நேசத்துக்குப் பாத்திரமாய் இருக்கிற தேவரீருக்குப் பொருந்தாத பாவங்களைச் செய்தபடியினாலே முழுமனதுடனே விசனப்படுகிறேன். இனிமேல் சுவாமி! தேவரீருடைய உதவியினாலே, நான் ஒரு போதும் பாவம் செய்யேன் என்றும், பாவங்களுக்கடுத்த உதவி முகாந்திரங்களை எல்லாம் விட்டுவிடுவேன் என்றும், கெட்டி மனதுடனே பிரதிக்கினை பண்ணுகிறேன். எங்கள் நாயகன் இயேசுக்கிறிஸ்து பாடுபட்டு அடைந்த மட்டில்லாத பெறுபேறுகளைப் பார்த்து, என் பாவங்களை எல்லாம் பொறுத்தருளும் சுவாமி! ஆமென்.

விடை தருக :

1. தண்டனையைவிட மேலானது எது என்று இயேசு கருதினார்?
2. குற்றங்களுக்கு மன்னிப்புப் பெறுவதற்கு என்ன செய்ய வேண்டுமென்று கிறிஸ்துநாதர் கூறினார்?

## பாடம் 17

# கிறிஸ்து தந்தையிடம் செல்லும் வழியைக் காட்டுகிறார் III

எடுத்துக்காட்டு

ஒருநாள் இயேசு தம் சீடர்களுடன் நயீம் பட்டினத்தினூடாகச் சென்றுகொண்டிருந்தார். அப்போது, இறந்தவன் ஒருவனைப் பாடையில் வைத்துத் தூக்கிவந்தனர். பாடை அருகே ஒரு பெண் சென்றுகொண்டிருந்தாள். அவளோ கைம்பெண். இறந்தவன் அவளது ஒரே மகன். கிறிஸ்து அப்பாடையின் அருகே வந்தார். தூக்கிச் சென்றவர்கள் உடனே நின்றார்கள். "இளைஞனே! உனக்குச் சொல்லுகிறேன். எழுந்திரு" என்றார். இறந்தவன் எழுந்து உட்கார்ந்து பேசத்தொடங்கினான். தாயிடம் அவனை ஒப்படைத்துத் தன் வழியே சென்றார்.

வேறொருநாள் தமது போதனைகளுக்குச் செவி மடுப்பதற்காக, உணவின்றித் தம்மைப் பின்தொடரும் மக்கள் கூட்டமொன்றை இயேசு கண்டார். அவர்களது எண்ணிக்கை ஐயாயிரத்துக்கும் அதிகமாக இருந்தது. ஐந்து அப்பமும், இரண்டு மீன்களுமே அங்கு இருந்த உணவு. ஆனால் இயேசு இவைகளைக்கொண்டு அந்த ஐயாயிரம் பேருக்கும் உணவளித்தார்.

கேட்காமலே இயேசு மக்களுக்கு உதவிசெய்தார், வியாதிக்காரரைக் குணமாக்கினார். துன்பப்படுவோருக்கு ஆறுதல் அளித்தார். பலமுறைகளில் பசியாய் இருந்தார். தம் பசியிலும் தாம் ஆற்றும் பணி மேலானது எனக் கருதினார். இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் தம் சீடர்களைப் பார்த்து, 'என்னை அனுப்பினவருடைய விருப்பத்தை நிறைவேற்றுவதே எனது உணவாகும்" என்று கூறினார்.

அக்காலத்தில் பலஸ்தீனாவில் நிலவிய வகுப்பு வாதங்களை ஒழிப்பதற்காக அரும் பாடுபட்டார். சமுதாயத்தால் புறக்கணித்து ஒதுக்கப்பட்ட பாவிகளோடு விருந்துண்டார். அவர்களுடைய வீடுகளிலே தங்கினார்.

இயேசு இறைவனின் சித்தத்துக்கு எப்பொழுதும் பணிந்து நடந்தார். ''ஆண்டவரே, ஆண்டவரே, என்று சொல்பவரெல்லாம் விண்ணரசு சேரமாட்டார். வானகத்திலுள்ள என் தந்தையின் விருப்பப்படி நடப்பவனே விண்ணரசில் சேருவான்'' என்று கூறினார். அன்றியும், ''என் சித்தத்தின்படி நடப்பதற்கல்ல, என்னை அனுப்பினவரின் சித்தத்தை நிறைவேற்றவே வந்தேன்'' என்று கூறினார்.

கிறிஸ்து அன்பும், கீழ்ப்படிதலும் உள்ளவராக வாழ்ந்தார். கிறிஸ்துவின் வழி நடந்தால் நாமும் இறைவன் ஆகிய தந்தையிடம் செல்வோம்.

கடவுள் திருமொழி :

1. ''நான் உங்களுக்கு மாதிரி காட்டினேன், நான் செய்ததுபோல நீங்களும் செய்யுங்கள்.''

(அருளப்பர் 13 : 15)

செயல் திட்டம் :

1. கிறிஸ்து எமக்குக் காண்பித்த மாதிரி யாது?
2. இதைப் பின்பற்றி நீர் வீட்டிலும், பாடசாலையிலும், வழியிலும் செய்யக்கூடிய 5 செயல்களைக் குறிப்பிடுக.

வாழ்க்கைக்கு :

நானும் கிறிஸ்து இயேசுவைப்போல நடந்து இறைவனின் உண்மையான பிள்ளையாயிருக்க முயற்சிப்பேன்.

விடை தருக :

1. கிறிஸ்துநாதர் நயீம் பட்டினத்திற் செய்த வியப்புக்குரிய செயல் யாது?
2. தமது பணியைக் கிறிஸ்து எவ் வார்த்தைகளால் உறுதிப்படுத்தினார்?

## பாடம் 18

# பாஸ்கா மறைபொருள் (பாடு, மரணம், உயிர்ப்பு) வழியாக கிறிஸ்து எங்களைத் தந்தையோடு ஒப்புரவாக்குகிறார் I.

'அன்பில்லார் தமக்கு உரியவர், அன்புடையார் எலும்பும் பிறர்க்கு உரியர்' என்ற கருத்துள்ள திருக்குறள் ஒன்றுண்டு. ஏன்? உயிரையே பிறர்க்காக நீத்தவர் பற்றிய செய்திகளை இடையிடையே கேள்விப்படுகிறோம், இவ்விதமான செய்தி ஒன்று இதோ :

'கடலில் குளிக்கப்போய்க் கரையேற முடியாது தத்தளித்த நண்பனைக் கண்ட நாயகம் நீந்திப்போய் அவனைக் காப்பாற்றினான். ஆனால் நாயகம் அலைகளால் அடித்துச் செல்லப்பட்டு இறந்தான். நாயகத்தின் தியாகத்தை மக்கள் வியந்து போற்றினர்!

''தன் நண்பனுக்காக உயிர் விடுவதிலும் மேலான அன்புவேறு எதுவும் இல்லை'' என்று கிறிஸ்துதாமே கூறினார்.

நண்பனுக்காகத் தனது உயிரைத் தியாகம்செய்தல் உண்மை அன்பின் பெரும் அடையாளம் ஆகும். பாடுகளை அனுபவித்த பின் தொடர்ந்து வரும் உயிர்த்தியாகம் அதனிலும் மேலானது. கிறிஸ்து தமது மனித அவதாரத்தில் தாம் மனிதர் மேற்கொண்ட பேரன்பைக் காட்டினார்.

பாவத்தின் விளைவால் நோவு, வேதனை, துக்கம், மரணம் என்பவற்றுக்கு ஆளாகிறோம். இவை எமக்குக் கிடைக்கும் ஒருவகைத் தண்டனையாகும். இந்த வடிவத்தில் எம் சிலுவைகளை எமக்கு வரும் துன்ப துயரம் முதலியவற்றை – நாம் அனுபவிக்கவேண்டி ஏற்பட்டது. இந்நிலையில் கிறிஸ்துநாதர் எம்மைப்போன்ற மனிதனாகிப் பாடுகளுக்கு உள்ளாகினார். எமது வேதனைகளையும் குற்றங்களையும் தாமே ஏற்றுக்கொண்டார். இவை அனைத்தையும் நிறைவான கீழ்ப்படிதலுடன் அணைத்துக்கொண்டார். தம்மைப் பாடுகளுக்குள்ளாக்கிய அதிகாரிகளையும், வதைத்தவர்களையும் மன்னித்தார். எம்மேற்கொண்ட அளப்பரிய அன்பினாலேயே இவை அனைத்தையும் செய்தார்.

கிறிஸ்துநாதர் தமது பாடுகளின் போதும் மரணத்தின் போதும் தமது விண்ணகதந்தைக்கு அமைந்து நடந்தார். அனைவரையும் அன்பு செய்தவர்; எவரையும் பகைக்காத செம்மல் எம் கிறிஸ்து. இங்ஙனம் எம் எல்லாரையும் இறைவனுடன் ஒப்புரவு ஆக்கினார். இப்படியான நல்லுறவுக்கான அதி சிறந்த வழியைக் காட்டினார்.

எமது துன்பங்களையும், குற்றங்களையும் தாமே ஏற்றுக்கொண்டு மரணம் அடைந்தார் கிறிஸ்து. மனிதன் பாவத்தால் இறைவனுடன் கொண்டிருந்த நல்லுறவை முறித்துக்கொண்டான் அல்லவா? அதை மீளவும் பெற்றுத்தந்தார். அவரின் பாடுகளால் முடிவில்லாப் பேரின்ப வாழ்வுக்கு மீண்டும் உரித்தாளர் ஆகிறோம். கிறிஸ்து எம் மேற் கொண்ட பேரன்பினாலேயே இங்ஙனம் செய்தார். அவரின் அன்பு வழியிலே எம்மைத் தந்தையிடம் நடத்திச் செல்கிறார். எமக்கு வரும் சிலுவைகளை அனுபவிப்பது எப்படி? மற்றோரை அன்பு செய்யும் வழி என்ன? இறைவனின் சித்தத்துக்கு ஏற்ப நடப்பது எங்ஙனம் .... என்று கிறிஸ்து காட்டினார். சொல்லால் மட்டும் அன்றிச் செயலாலும் இதை எமக்குப் படிப்பித்தார்.

**கடவுள் திருமொழி:**

மெய்யாகவே அவர் நம் பிணிகளை ஏற்றுக்கொண்டார்
நம்முடைய நோய்களைச் சுமந்துகொண்டார்
ஆனால் அவர் தண்டனைக்குள்ளானவர் எனவும்,
கடவுளால் ஒதுக்கப்பட்டவர் எனவும்,
வாதிக்கப்பட்டவர் எனவும் நாம் எண்ணினோம்
ஆனால் நம் பாவங்களுக்காகவே அவர் காயப்பட்டார்
நம் அக்கிரமங்களுக்காவே அவர் நொருக்கப்பட்டார்
நம்மை நலமாக்கும் தண்டனை அவர்மேல் விழுந்தது
அவருடைய காயங்களால் நாம் குணம் அடைந்தோம்
ஆடுகளைப்போல நாம் அனைவரும் வழி தவறி அலைந்தோம்.
கால்போன வழியே ஒவ்வொருவரும் போனோம்
நம் அனைவருடைய அக்கிரமங்களையும்
ஆண்டவர் அவர்மேல் சுமத்தினார்.

(இசையாஸ் ஆகமம் 53:4—6)

**செயல் திட்டம்**

1. நண்பனுக்காகத் தன் உயிரைத் தியாகம்செய்தல் அன்பின் அடையாளம். இப்பாடத்தில் வரும் இதுபோன்ற வேறு மூன்று அடையாளங்களைத் தருக.
2. உம்மேற் கொண்ட அன்பினால் பெற்றோர் உமக்குச் செய்யும் ஐந்து கருமங்களை எழுதுக. பெற்றோரின் அன்புக்குப் பதில் அன்பை நீர் காட்டக்கூடிய ஐந்து பணிகள் எழுதுக.

**வாழ்க்கைக்கு:**

''திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் பண்ணுகிறோம், ஏனென்றால், உம்முடைய திருச்சிலுவையால் எம்மை இரட்சித்தீரே சுவாமி.''

**விடை தருக:**

1. கிறிஸ்து சிலுவை மரணத்தை ஏன் தெரிந்தெடுத்தார்?
2. தந்தையிடம் மீளவும் செல்லும் வழியைக் கிறிஸ்து எப்படிக் காட்டினார்?

பாடம் 19

# தமது பாடுகள், மரணம், உயிர்ப்பு வழியாக கிறிஸ்து எங்களைத் தந்தையுடன் ஒப்புரவாக்குகிறார்

உயிர்ப்பு

''பிறரைக் காப்பாற்றிய இவன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியவில்லையே! மெசியாவும், தேர்ந்து எடுக்கப்பட்டவரும், ஆனால் தன்னையே காப்பாற்றிக்கொள்ளட்டும்.''

கிறிஸ்துநாதர் சிலுவையில் தொங்கியபோது அவரை வதைத்த யூதர் இங்ஙனம் கூறினர்.

''உன்னைக் கிறிஸ்து என்று கூறியவன் நீதானே? அங்ஙனம் ஆயின் உன்னையும் எங்களையும் காப்பாற்று.''

கிறிஸ்துவுடன் அறையப்பட்ட கள்வன் இப்படிக் கூறினான்.

இயேசுவை ஏற்றுக்கொள்ளாத மற்றும் பலர் அன்று இருந்தனர். கடவுளின் மகன் கிறிஸ்து என அவர்கள் விசுவசிக்கவில்லை வாக்களிக்கப்பட்ட மீட்பர் அவர் என்பதை அவர்கள் ஏற்க மறுத்தனர். சிலுவையில் கிறிஸ்துவை அறைந்து கொன்றுவிடின் அவரின் வாழ்வு முடிந்துவிடும் என்று அவர்கள் கருதினர். அவர்கள் நினைத்தது நிறைவேறி இருந்தால் எமது நம்பிக்கை அடியோடு மண்ணாகிப் போயிருக்கும்.

— கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு மரித்தார்.
— அவரது உடல் கல்லறை ஒன்றில் அடக்கம் செய்யப்பட்டது.
— ஆனால் மரணத்தின் மூன்றாம் நாள் அவர் மீளவும் உயிர்த்தார்.
— இதுவே உத்தானம் அல்லது உயிர்ப்பு என அழைக்கப்படுகிறது.

கிறிஸ்து கடவுளுடன் கொண்ட தந்தை – மகன் உறவுக்கும், அவர் மீட்பர் என்பதற்கும் சான்றாக அவரது உயிர்ப்பு அமைகிறது. தமது மரணத்தினால் இதை அவர் சாதித்தார்; எமக்கு முடிவில்லா வாழ்வு பெற்றுத் தந்தார். சாவு அழிந்துவிட்டது. என்பதை எண்பித்தார். பாவம் மேற்கொள்ளப்பட்டுவிட்டது. அடிமைத்தளை அகற்றப்பட்

டது என்பதைக் காட்டினார். அவர் எம்மை முடிவில்லாப் பெருவாழ்வுக்கு அழைத்துச் செல்வார்.

எமது வேதனைகளின் வழியாலும், மரணத்தின் வழியாலும், உயிர் பெறலாம் என்பதை உயிர்த்த கிறிஸ்து எமக்குப் படிப்பித்தார். இன்னும் பாவத்தினதும், அடிமைத்தனத்தினதும் விலங்குகளை உடைத்தெறியின் புதுவாழ்வு பெறுவோம். தெய்வீக வாழ்வுக்கு உரிமையாளர் ஆவோம் என்றும் காட்டினார். பாவ வாழ்வையும் அடிமைத்தனத்தையும் விட்டுவிலகி, எமது துன்ப துயரங்கள் வழியாக எம்மைப் புனிதப்படுத்தலாம் என்றும், வாழ்வில் வரும் வேதனைகளை ஏற்று நடக்கவேண்டும் என்றும் அவர் எமக்குக் காண்பித்தார்.

கிறிஸ்து இறைமகன் என்பதற்குச் சிறந்த ஆதாரம் ஆக இருப்பது அவரின் உயிர்ப்பு ஆகும். அவரின் பாடுகளாலும் மரணத்தினாலும் கிறிஸ்து எம்மைக் கடவுளுடன் ஒப்புரவாக்கினார். ஒப்புரவாதல் என்பது உறவுகொள்ளுதல் என்ற பொருள் உடையது. இந்த ஒப்புரவாதலுக்குச் சிறந்த அடையாளமாயிருப்பது இயேசுவின் உத்தானம் ஆகும்.

கிறிஸ்துவின் பாடுகள், மரணம் உயிர்ப்பு என்னும் மூன்றையும் பாஸ்கா மறைபொருள் என்று அழைக்கிறோம். கிறிஸ்து உயிர்த்தெழுந்து! இவ்வுலகைக் கடந்து, தம் அன்புத் தந்தையிடம் சென்றார். அதுபோல் நாமும் பாவத்தை விட்டெழுந்து அருள் வாழ்வுக்குக் கடந்து செல்லவேண்டும். இதுவே கிறிஸ்தவனாகிய எனது பாஸ்கா ஆகும்.

**கடவுள் திருமொழி,**

அவரைக் கழுமரத்தில் ஏற்றிக் கொன்றனர்
ஆனால் கடவுள் அவரை மூன்றாம்நாள் உயிர்ப்பித்தார்
உயிர்த்தவரைக் கடவுள் அனைவருக்கும் வெளிப்படுத்தாமல்,
தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட சாட்சிகளுக்கே வெளிப்படுத்தினார்
இறந்தோரிடமிருந்து அவர் உயிர்த்தபின்,
அவரோடு உண்டும் குடித்தும் வந்த, நாங்களே சாட்சிகள்.
(அப். பணி 10 : 40—41)

**செயல் திட்டம்:**

1. சிலுவைப்பாதையில் பங்குகொள்ளல், ஒவ்வொரு தலத்திலும் தியானித்தவற்றைச் சுருக்கமாக எழுதுக.
2. ''கிறிஸ்து இறைமகன் என்பதற்குச் சிறந்த ஆதாரம் அவரது உயிர்ப்பு'' ஆகும். தமது உயிர்ப்பினால் அவர் எதை நமக்குக் காட்டினார் என்பதை விளக்குக.

வாழ்க்கைக்கு:

விசுவாசப் பிரமாணத்தைக் கருத்துடன் கற்பேன்:

பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த எல்லாம் வல்ல பிதாவாகிய சர்வேசுரனை விசுவசிக்கிறேன்.

அவருடைய ஏகசுதனாகிய நம்முடைய நாயகன் இயேசுக் கிறிஸ்துவையும் விசுவசிக்கிறேன்.

இவர் பரிசுத்த ஆவியினால் கர்ப்பமாய் உற்பவித்து, புனித கன்னிமரியம்மாளிடத்திலிருந்து பிறந்து, போஞ்சியு பிலாத்துவின் கீழ்ப்பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம் செய்யப்பட்டு, பாதாளத்தில் இறங்கி மூன்றும்நாள் மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தருளினார். பரலோகத்துக்கெழுந்தருளிச் சர்வவல்லப பிதாவாகிய சருவேசுரனுடைய வலது பக்கத்தில் வீற்றிருக்கிறார்.

அவ்விடத்திலிருந்து சீவியர்களையும் மரித்தவர்களையும் நடுத்திர்க்க வருவார். பரிசுத்த ஆவியையும் விசுவசிக்கிறேன், பரிசுத்த கத்தோலிக்க திருச்சபையையும் அர்ச்சியசிஷ்டர்களுடைய ஐக்கியப்பிரயோசனத்தையும், பாவப்பொறுத்தலையும், சரீர உத்தானத்தையும், நித்திய சீவியத்தையும் விசுவசிக்கிறேன், ஆமென்.

விடை தருக:

1. உயிர்ப்பு என்றால் என்ன?

2, பாஸ்கா மறைபொருள் எனறால் என்ன?

*ஆய்வுப் பொருள் 3*

பாடம் 20

# உயிர்த்த கிறிஸ்து நமக்குப் புதுவாழ்வு அளிக்கிறார்

விதையில் இருந்து மரம் முளைக்கிறது. இது எப்படி முளைக்கிற தென விஞ்ஞான பாடத்தில் படித்திருப்பீர்கள். விதை மரம் ஆகி மாற்றுவடிவம் பெறுகிறது. விதை மடிந்து புதுவாழ்வு ஒன்று தோன்றுகிறது. இது பலருக்கும் பயன்படுகிறது.

சங்கிலி, அழகான வளையல், கண்ணைக் கவரும் கணையாழி என்பன பொன்னில் இருந்து ஆக்கப்படுகின்றன. நகைகள் ஆவதற்கு பொன்னின் மூலவடிவம் மாற்றம் அடையவேண்டும். ''நட்டவிதை மடிந்தால் ஒழிய புதிய உயிர் (வாழ்வு) அதிலிருந்து தோன்றாது'' என கிறிஸ்து மொழிந்தார்.

உயிர்த்த கிறிஸ்து எமக்குப் புதுவாழ்வு தருவதும் இது போன்றதே. ''வாழ்வும், வழியும், உண்மையும் நானே'' என அவர் கூறினார். நாம் ஒவ்வொருவரும் வாழ விரும்புகிறோம்; அதுவும் நீண்டகாலம் வாழ விரும்புகிறோம். எவ்வித துன்பமும், தொல்லையும் இன்றி வாழ்தலே எமது விருப்பம். இந்த விருப்பம் முடிவில்லா நித்திய வாழ்வை நாம் பெறும்போதே நிறைவேறும். உயிர்த்த கிறிஸ்து இந்த முடிவில்லா வாழ்வை எமக்குப் பெற்றுத் தந்துள்ளார். கடவுளின் பிள்ளை என்ற தகைமையை கிறிஸ்து எமக்கு மீளவும் பெற்றுத் தந்தார்; நித்திய வாழ்வை அளித்து இறைவனுடன் எம்மை மீண்டும் இணைத்தார். கிறிஸ்து எமக்குப் பெற்றுத்தந்த புது வாழ்வு இதுவே.

இந்த முடிவில்லாப் புதுவாழ்வைப் பெறும் வழியை இறைமகன் கிறிஸ்து எமக்குக் காட்டியுள்ளார். அவர் மனிதனாக வாழ்ந்து கடவுளுக்குப் பணிந்து நடந்தார்! மற்றோருக்குப் பணிவிடை புரிந்தார். எமது மீட்புக்காக அவர் வேதனைகள் பல பட்டார். மேலாகத் தமது உயிரையே அர்ப்பணித்தார். புது வாழ்வை நாம் பெற;

— தியாக வாழ்வு வாழவேண்டும்;
— எமது வாழ்வைச் சீர்ப்படுத்த வேண்டும்;
— மற்றோருக்காக வாழவேண்டும்;
— எமது மீட்புக்காக மட்டுமன்றி பிறரின் மீட்புக்காகவும் உழைக்கவேண்டும்;

எனக் கிறிஸ்து எமக்குக் காட்டினார்.

சுருங்கக் கூறின் நாம் கிறிஸ்துவைப்போல் வாழவேண்டும். கிறிஸ்துநாதர் பிறருக்காகவே வாழ்ந்தார். எல்லோரையும் அன்பு செய்தார். அவரின் சீடர்கள் - அதாவது அவரைப் பின்செல்பவர்களாகிய நாம் - தன்னலம் அற்றவர்களாக வாழ்தல் அவசியம்; அடிமைத் தனத்தில் வாழும் மற்றவர்களை நித்திய வாழ்வு என்னும்

விடுதலைக்கு வழி நடத்துதல் எமது கடமை. தன்னலமின்றி மற்றோருக்குச் சேவைசெய்து வாழ்வோம். நாம் கிறிஸ்துவுடன் ஒன்றித்து தியாக வாழ்வை மேற்கொள்வோம்.

**கடவுள் திருமொழி:**

உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்.
எனது வார்த்தையைக் கேட்டு,
என்னை அனுப்பியவரிடத்தில் விசுவாசங் கொள்பவன்,
முடிவில்லா வாழ்வைக் கொண்டுள்ளான்.
அவன் தீர்ப்புக்கு உள்ளாகாமல்,
சாவிலிருந்து வாழ்வுக்குக் கடந்து சென்று விட்டான்.
(அருளப்பர் 5:24)

**செயல் திட்டம்:**

1. கிறிஸ்துவின் முன்மாதிரிகையை நாம் எவற்றில் பின்பற்ற வேண்டும்?
2. 'பிறருக்காக வாழ்தல் தன்னலம் இன்மையைக் குறிக்கிறது' பிறருக்காக நீர் செய்யக்கூடிய ஐந்து செயல்களைக் கூறுக?

**வாழ்க்கைக்கு:**

பாஸ்குகாலத் திரிகாலச் செபத்தை மனனஞ்செய்து, செபிப்போம்.

பரலோகத்துக்கு இராக்கினியே மனங்களிகூரும்
— அல்லேலுயா
அதேதெனில் பாக்கியவதியான உமது திருஉதரத்தில் அவதரித்தவர் — அல்லேலுயா
திருவுளம் பற்றின வாக்கின்படியே உயிர்த்தெழுந்தருளினார்
— அல்லேலுயா

எப்பொழுதும் கன்னிகையான மரியாயே அகமகிழ்ந்து பூரிக்கக் கடவீர் — அல்லேலுயா
அதேதெனில் ஆண்டவர் மெய்யாகவே உத்தானம் ஆயினார்
— அல்லேலுயா

செபிப்போமாக

சர்வேசுரா சுவாமி! உம்முடைய திருக்குமாரனும் எங்கள் ஆண்டவருமாயிருக்கிற, இயேசுக்கிறிஸ்துவின் உத்தானத்தினாலே உலகம் அக்களிக்கச் சித்தமானீரே, கன்னி மரியம்மாளாகிய அவருடைய திருத்தாயாராலே, நித்திய சீவியமாகிய பரலோக வாழ்வை நாங்கள் அடையும்படிக்கு எங்கள் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும், ஆமென்.

**விடை தருக:**

1. உயிர்த்த கிறிஸ்து எமக்குப் பெற்றுத் தந்தவை எவை?
2. கிறிஸ்து காட்டியதுபோல எம்வாழ்வின் குறிக்கோள் என்ன?

*ஆய்வுப் பொருள் 3*

## பாடம் 21

# திருமுழுக்கு

*நிக்கதேமுஸ் என்பவர் யூதப் பெரியார், கிறிஸ்துவின் காலத்தில் வாழ்ந்தவர். அவர் ஒருநாள் இயேசுவிடம் சென்று, ''கடவுளின் அரசுக்குச் செல்வது எப்படி?'' என்று கேட்டார். கிறிஸ்து நாதர் கூறிய விடை அவருக்கு வியப்பை ஊட்டியது. அவர் கூறிய விடை இதுதான்:*

*''கடவுளின் அரசில் நுழைய விரும்பினுல் மீளவும் பிறக்க வேண்டும்.''*

*நிக்கதேமுசுக்கு இயேசு கூறியது புரியவில்லை. கடவுளின் அரசில் நுழைவதாயின் ஒருவன் ''தண்ணீரினுலும் ஆவியினுலும் மீளவும் பிறக்கவேண்டும்'' என இயேசு விளக்கம் கொடுத்தார். மீளவும் பிறக்கும் இந்த மறுபிறப்பின் அடையாளமாக இருப்பதே திருமுழுக்கு.*

*பாஸ்கா மறைபொருள் வழியாகக் கிறிஸ்துநாதர் புதுவாழ்வை அதாவது கடவுளின் அரசுக்குப் போகும் உரிமையைப் பெற்றுத் தந்தார். இந்தப் புதுவாழ்வை மீளவும் பெறும் வழியையும் அவர் எமக்கு அருளிச் சென்றுள்ளார், புதுவாழ்வில் நாம் தொடர்ந்து நிலைத்திருக்கப் பல வழிவகைகளை வகுத்துச் சென்றிருக்கிருர். இவ் வழிவகைகள் திருவருட்சாதனங்கள் என அழைக்கப்படுகின்றன. ஏழு திருவருட்சாதனங்கள் உள. இவை அளிக்கும் அருள் வாழ்வு என்றுமே குறைவுறுதிருப்பதால் திருவருட்சாதனங்கள் எனப்படுகின்றன. கடவுள் இப்படியான வியத்தகு செயல்களைச் செய்ய வல்லவர் என்பனத நீங்கள் அறிவீர்கள்.*

*புதிய வாழ்வு அளிக்கும் திருவருட்சாதனம் திருமுழுக்காகும். இந்தத் திருவருட்சாதனத்தின் வழியாக நாம் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுகிறோம். எமது தன்னல வாழ்வை மறுக்கிறோம். சாத்தானையும் பாவத்தையும் விட்டுவிடுகிறோம். கிறிஸ்துவைத் தெரிந்தெடுக்கும் திருவருட்சாதனமே திருமுழுக்கு.*

*எமது புதுவாம்வின் தொடக்கம் திருமுழுக்காகும். மற்றைய திருவருட்சாதனங்களைப் பெறும் உரிமையையும் இது எமக்குத் தருகிறது.*

கடவுளின் பிள்ளைகளாக வாழும் தகைமையைத் திருமுழுக்கால் பெறுகிறோம்: இறைவனின் கொடையாகிய விசுவாசத்தை இது எமக்குத் தருகிறது. முடிவில்லாத வாழ்வு எமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டாகிறது; மேலாகப் பரம அன்பு எனும் பெருங் கொடையை நாம் பெறுகிறோம்.

**கடவுள் திருமொழி:**

*''உண்மையிலும் உண்மையாக உமக்குச் சொல்லுகிறேன். ஒருவன் நீரினாலும் ஆவியினாலும் பிறந்தாலன்றி, கடவுளுடைய அரசில் நுழைய முடியாது''* (அருளப்பர் 3:5)

**செயல்திட்டம்:**

1. விண்ணக அரசுக்கு நுழையும் உரிமையைப் பெறும் வழிகளை என்ன பெயர் கொண்டு அழைப்பீர்?
2. விண்ணகம் செல்வதற்கு என்ன செய்யவேண்டும் என இயேசு நிக்கதேமுசுக்குக் கூறினார்?

**வாழ்க்கைக்கு:**

1. பின்வரும் நாட்களில் திருமுழுக்கு வாக்குறுதியைப் புதுப்பிப்பேன்.
   1. திருமுழுக்குப் பெற்றநாள்
   2. எனது பாதுகாவலர்தினம்
   3. திருவழிபாடு
   4. தியான ஒடுக்க முடிவில்
   5. பாஸ்குத் திருவிழிப்பு அன்று
2. திருவருட்சாதனங்களில் பக்தியுடன் பங்குகொள்வேன்.
   1. திருமுழுக்கு
   2. உறுதிபூசுதல்
   3. திவ்வியநற்கருணை
   4. பச்சாத்தாபம்
   5. நோயில் பூசுதல்
   6. குருத்துவம்
   8. மெய்விவாகம்

**விடைதருக:**

1. திருமுழுக்கில் யாரைத் தெரிந்தெடுக்கிறோம்?
2. திருமுழுக்கில் நாம் மறுப்பவை எவை?

ஆய்வுப் பொருள் 3

## பாடம் 22

# திவ்விய நற்கருணை

'அம்மா' இது எவ்வளவு இனிமையான சொல்; அம்மாவை நினைக்கும்போதும், அவள் பற்றிப் பேசுந்தோறும் என் இதயம் அன்பால் நிறைகிறது. 'அம்மா' என்ற சொல் 'அன்பு' என்னும் சொல்லுக்கு இணையானது. தாய் தன் பிள்ளையை அவ்வளவாக அன்பு செய்வதே இதற்குக் காரணம். தன் சொந்த இரத்தத்தையே பால் என்ற அரிய உணவாக ஊட்டுகிறாள். இது அவள் தன் பிள்ளையில் கொண்டுள்ள அன்புக்கு மேலான அடையாளமாக இருக்கிறது.

நாம் தாயிடம் இருந்து பிறந்தோம்: அவள் எம்மைப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்தாள். அன்பே இதற்குக் காரணம்.

இயேசு எமக்குப் புதுவாழ்வைப் பெற்றுத் தந்தார்: நாமும் இந்த வாழ்வை திருமுழுக்கு வழியாகப் பெற்றோம். இங்ஙனம் நாம் பெற்ற வாழ்வைப் பாதுகாத்து வளர்க்க கிறிஸ்துநாதர் எமக்கு அரிய உணவைத் தந்துள்ளார். இந்த உணவுதான் அவரது உடலும் இரத்தமும். இயேசு எம்மீது கொண்டுள்ள அன்புக்கு இது மேலான அடையாளமாக இருக்கிறது. சிறுவராகிய நீங்கள்கூட இந்த அன்பை விளங்கிக் கொள்ளலாம். தாயின் இரத்தம் அன்பினால் பாலாக மாறுகிறது. இறைவனாகிய இயேசு தம்மை எமது ஆன்மீக உணவுக்காகத் தருதல் இதுபோன்றதே. இறைவன் ஒருவரே இத்தகைய அரும் பெருஞ் செயலைச் செய்யக் கூடியவர்.

இயேசுவின் திரு உடலையும், திரு இரத்தத்தையும் அப்ப இரச வடிவில் நாம் பெறுகிறோம். அப்ப இரச வடிவில் கிறிஸ்துநாதர் எம்மிடம் ஆன்மீக உணவாக எழுந்தருளி வருகிறார். இதுவே திவ்விய நற்கருணை எனப்படுகிறது. அப்ப வடிவில் திவ்விய நன்மை பெறும்போது கிறிஸ்துவின் திருவுடலையும், திரு இரத்தத்தையும் பெறுகிறோம் என்பதை நாம் அறிதல் வேண்டும்.

''வானினின்று இறங்கிவந்த உணவு நானே'' என்று இயேசு வெளிப்படையாகச் சொன்னார். மேலாக, பெரிய வியாழன் அன்று அவர் அப்பத்தையும் இரசத்தையும் எடுத்து தமது உடலாகவும், இரத்தமாகவும் மாற்றினார்; பின்னர் அவற்றை அப்போஸ்தலர்க்கு அருந்தக் கொடுத்தார். தமது நினைவாக இதைச் செய்யும்படி கட்டளையும் இட்டார்; இதனால் அப்போஸ்தலரும் அவர் வழிவந்த குருக்களும் இங்ஙனம் செயற்படும் அதிகாரத்தைப் பெற்றனர்.

— திவ்விய நற்கருணை மனிதனைக் கிறிஸ்துவுடன் ஒன்றிணையச் செய்கிறது. மனிதர் அனைவரும் கிறிஸ்துவில் இணைக்கப்படுகின்றனர். நாம் பெற்ற புதுவாழ்வைப் பாதுகாத்து வளர்க்கும் சாதகமாகத் திவ்விய நற்கருணை திகழ்கிறது.

— திவ்விய நற்கருணை இறைவனுடன் எம்மை இணைப்பதற்காக கிறிஸ்துவால் அருளப்பட்ட திருவருட் சாதனமாகும்.

— திவ்விய நற்கருணை கிறிஸ்து எம்மில் கொண்டுள்ள அன்பின் நினைவாகும்.

— மனிதரில் உள்ள அன்பினால் கிறிஸ்து தம் தந்தைக்குச் செலுத்திய பலியாகவும் திவ்விய நற்கருணை விளங்குகிறது.

கடவுள் திருமொழி:

நானே வானினின்று இறங்கிவந்த உயிருள்ள உணவு.
இதை யாராவது உண்டால் அவன் என்றுமே வாழ்வான்;
நான் அளிக்கும் உணவு உலகம் உய்வதற்காகப் பலியாகும் என் தசையே.

(அருளப்பர் 6:51)

செயல் திட்டம்:

1. திருவிருந்தை அடிக்கடி நாம் ஏன் அருந்த வேண்டும்?
2. திவ்விய நற்கருணையில் இருக்கும் இயேசுவுக்கு நன்றி தெரிவித்து ஒரு செபம் ஆக்குக.

வாழ்க்கைக்கு:

பாடப் பழகுக

தியாகத் தருவே திரு விருந்தே
தினம் தினம் நாவில் வருவமுதே

சரணம்

1. உண்டு மகிழ்வோர் உயிர் பிழையார்
உன்னை உண்போர் உயிர் பெறுவார்
உள்ளத்தில் கோயில் கொண்டிடவா
உயிருடன் ஒன்றாய்க் கலந்திடவா

2. கனத்த இதயம் கரைந்திடவா
கனிந்த அன்பு ஒழுகிடவா
வாழ்வெல்லாம் அன்பு வழிந்திடவா
வருக அன்பே வரம் பொழிவாய்.

விடை தருக:

1. திவ்விய நற்கருணையில் இயேசுவை என்ன வடிவத்தில் பெறுகின்றோம்?
2. திவ்விய நற்கருணை மனிதனை யாருடன் இணைக்கிறது?

EV LYN RUT INSTITUTE
165
REFERENCE LIBRARY
JAFFNA





## பாடம் 23

# பச்சாத்தாபமும் நோயில் பூசுதலும்

''மனந்திரும்பித் தவம் செய்யுங்கள், ஏனெனில் கடவுளின் அரசு அண்மித்து விட்டது.'' நான் உங்களை அன்புசெய்ததுபோலநீங்களும் ஒருவரை ஒருவர் அன்பு செய்யுங்கள். இதுதான் கிறிஸ்துவின் அன்புக் கட்டளை. நாம் இந்த அன்பைப் பரப்ப வேண்டும் என கிறிஸ்துநாதர் எதிர்பார்க்கிறார். இறைவனின் அன்பை மனிதன் புறக்கணித்து இறைவனையும், உடன் வாழ்வோரையும் வெறுக்கத் தொடங்கினன்; முடிவில்லாப் பேரின்ப வாழ்விலிருந்து தவறினன், என்பனபற்றி நீங்கள் முன்படித்தது நினைவிருக்கலாம்.

மீட்பின் திட்டப்படி, மனித உள்ளத்திலிருந்து இந்த வெறுப்பை நீக்கவேண்டி இருந்தது. மனிதன் கொண்ட அகங்காரத்தை அகற்றி நன்மையை நாடவேண்டியவன் ஆனன்,

'அனைவருக்கும் நன்மை செய்தல்' எமது அன்பைக் காட்டும் வழி இதுவே. புதுவாழ்வைப்பெற கிறிஸ்து எங்ஙனம் உதவி செய்தார் என்று அறிந்திருக்கிறீர்கள். நாம் பெற்ற புதுவாழ்வைப் பாதுகாத்து, வலுப்படுத்த கிறிஸ்து காட்டிய வழிகளும் உங்களுக்குத் தெரியும்.

எமது சுகவாழ்வு நோயினல் பாதிக்கப்படுவதை நீங்கள் அறிவீர்கள். இதேபோல எமது ஆன்மாவின் சுகநிலையும் பாவம் என அழைக்கப்படும் ஒருவகை ஆன்மீக நோயினல் பாதிக்கப்படுகிறது. பாவம் என்றால் என்ன? இறைவனின் திட்டத்தை நிராகரித்தலே பாவம். அதாவது ஏற்றுக்கொள்ள மறுத்தல், உடல் நோயுறும் போது அதை நீக்க வைத்தியரிடம் செல்கிறோம். அவர் தரும் மருந்து வகைகளை அருந்தி அவர் சொல்வதுபோல நடக்கிறோம். ஆன்மீக சுகநிலை அடைதலும் இதுபோன்றதுதான். நோய் உற்ற ஆன்மா மீளவும் சுகநிலை அடையும் வழியாக அமைவது பச்சாத்தாபம். பாவத்தால் இழந்த தெய்வீக வாழ்வை நாம் மீண்டும் பெறுவதற்காக கிறிஸ்துநாதரால் ஏற்படுத்தப்பட்ட திருவருட்சாதனம் பச்சாத்தாபம். கட்டிக்கொண்ட பாவங்களுக்காக உண்மையாக மனம் வருந்துதல், தொடர்ந்தும் அருள் வாழ்வில் வாழ்வேன் என்ற வாக்குறுதி, எல்லாப் பாவங்களையும் குருவானவருக்கு வெளிப்படுத்தல் என்பன பச்சாத்தாபத்துக்கு இன்றியமையாத மூன்று நிபந்தனைகளாகும்.

பாவ சங்கீர்த்தனத்திற்கு முன் எமது மனச்சான்றைப் பரிசோதித்து, நன்கு ஆயத்தம் செய்தல் அவசியம். குருவானவர் விதிக்கிற தவமுயற்சியை பாவசங்கீர்த்தனத்தின் பின் நிறைவேற்றுதலும் வேண்டும்.

புதுஉயிரை வலுப்படுத்துவதற்காக, கிறிஸ்துநாதரால் அருளப்பட்ட இன்னொரு திருவருட்சாதனம் நோயில் பூசுதல் ஆகும். நோயின் விளைவான துன்பத்தைத் தாங்குவதற்கு இத்திருவருட்சாதனம் உதவி செய்கிறது. இதன் வழியாக, பல சந்தர்ப்பங்களில் இழந்த உடல் நலத்தையும் மீளப் பெறுகிறோம்; பச்சாத்தாபம் என்ற திருவருட்சாதனத்தைப் பெற முடியாதபோது நோயில் பூசுதல் வழியாக பாவ மன்னிப்பையும் அடைகிறோம்.

நோயில் பூசுதலை நிறைவேற்றும் குருவானவர் நோயாளியின் கண், காது, மூக்கு, வாய், கை என்பனவற்றில் எண்ணெய் பூசி சிறப்பான செபம் ஒன்றையும் சொல்லுவார்.

கடவுள் திருமொழி:

*பின்பு அவர்கள்மேல் ஊதி,*
*' பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.*
*எவர்களுடைய பாவங்களை மன்னிப்பீர்களோ,*
*அவர்களுக்கு அவை மன்னிக்கப்பெறும்*
*எவருடைய பாவங்களை மன்னியாது விடுவீர்களோ,*
*அவை மன்னிப்பின்றி விடப்படும்.'' என்றார்.*

*(அருளப்பர் 20:22—23)*

செயல் திட்டம்:

1. *கிறிஸ்துவின் நற்செய்தி என்ன?*
2. *இயேசுவின் அன்புக் கட்டளைக்கு ஏற்றதாக நீர் புரியக்கூடிய ஐந்து செயல்கள் எழுதுக?*

வாழ்க்கைக்கு:

*பாவசங்கீர்த்தன மந்திரத்தை மனனம் செய்வேன்.*
*''எல்லாம் வல்ல இறைவனிடமும்,*
*சகோதரரே உங்களிடமும்,*
*நான் பாவி என்று ஏற்றுக்கொள்கிறேன்.*
*ஏனெனில் என் சிந்தனையாலும், சொல்லாலும், செயலாலும்*
*கடமையில் தவறியதாலும்,*
*பாவங்கள் பல செய்தேன்.*
*என் பாவமே, என்பாவமே, என்பெரும் பாவமே,*
*ஆகையால் எப்போதும் கன்னியான பரிசுத்த மரியாயையும்,*
*வானதூதர், புனிதர் அனைவரையும்,*
*சகோதரரே, உங்களையும் நம் தேவனாகிய ஆண்டவரிடமும்,*
*எனக்காக வேண்டிக்கொள்ள மன்றாடுகிறேன்.*

விடை தருக:

1. நல்ல பாவசங்கீர்த்தனத்துக்கு அவசியமான 5 நிபந்தனைகள் எவை?
2. நோயில் பூசுதலால் நாம் பெறும் தேவ அருள்கள் எவை?

## பாடம் 24

# படைப்பு அனைத்தையும் இறைவன் புதுப்பிக்கிறார்

**எல்லாப் படைப்பும் தொடக்கமும் முடிவும் உள்ளவை,**

கலைக்கூடம் நிரம்பிவிட்டது. 'நாடகம் இதோ ஆரம்பிக்கிறது' என்ற குரல்ஒலி கேட்கிறது. கூடத்தில் இருக்கும் மின் விளக்குகளின் ஒளி குறைகிறது. அரங்கத்தில் உள்ள விளக்குகள் நன்கு ஒளிர்கின்றன: அரங்கில் நடிகர் சிலர் தோன்றுகின்றனர்: தமது பாகத்தை நடித்துவிட்டு அரங்கைவிட்டு வெளியேறுகின்றனர்: தொடர்ந்து வேறு நடிகர் அரங்கிற்கு வருகின்றனர். அவர்களும் அங்ஙனமே வெளியேறுகின்றனர். நாடகம் முற்றுப்பெறுகிறது; திரை விழுகிறது.

நடந்து கொண்டிருக்கும் காட்சியிலேயே இரசிகர்களின் கவனம் செல்கிறது. எந்த நடிகர்கள் எப்போது தோன்றுவார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது. அதேபோல அரங்கைவிட்டு வெளியேறிய நடிகர்களைப்பற்றி இரசிகர்களுக்கு அக்கறையில்லை. ஆனால் முழு நாடகத்தையும் முழுமையாக ஒருவர் அறிகிறார். அவர்தான் தயாரிப்பாளர். நடிகர் எல்லாவரையும், அவர்கள் தாங்கும் பாகங்களையும் அவர் அறிவார். அரங்கில் அவர்கள் நுழையவேண்டிய சரியான நேரமும் வெளியேறும் நேரமும் அவருக்குத்தான் தெரியும்.

எமது உலக வாழ்க்கையும் நாடகம் போன்றதே. குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் வாழும் மக்கள் தமது காலத்தவர்களுடன்தான் உறவாடி வாழ்கின்றனர். ஆனால் இறைவன் கடந்த காலத்திலும், நிகழ் காலத்திலும், எதிர்காலத்திலும் வாழும் எல்லா உயிர் இனங்களையும் மக்களையும் அறிகிறார். வாழ்வில் நுழையும் காலம், வாழ்வில் அவர்கள் தாங்கும் பாகம், வாழ்வை முடித்து வெளியேறும் நேரம் எல்லாவற்றையும் அவர் நிர்ணயித்திருக்கிறார். உலகம் கடவுளின் படைப்பு. படைப்பின் தொடர்பான ஒழுங்குமுறையை அதாவது இருத்தலை இறைவன் நிர்ணயித்துள்ளார்: மனிதராகிய நாம் உயிர்களினது கண்ணுற் காணக்கூடிய தொடக்கத்தையும் வாழ்வையும் மட்டும் காண்கிறோம்: குறிப்பிட்ட நடிகர் ஒருவரின் பாகத்தை நாம் பார்ப்பது போன்றது இது, படைப்புக்களுக்குத் தொடக்கத்தை அருளியவர் இறைவன்: ஒவ்வொரு உயிரின் வளர்ச்சிப் படியையும் நிர்ணயித்தவர் அவரே. ஒவ்வொரு உயிருக்கும் நாம் காணக்கூடிய தொடக்கம் உண்டு. எனவே இந்த உயிர்கள் எல்லாம் இறைவனின் படைப்பாகும்.

ஒளிதரும் ஞாயிறு, சந்திரன், விண்மீன்கள், நாம் வாழும் உலகு எல்லாம் முன்பு இருக்கவில்லை. நாம் காணும் மரங்களும், செடிகளும், உயிர் இனங்களும் முற்காலத்தில் இருக்கவில்லை. உலகில் வாழும் மனிதனுக்கும் தொடக்கம் இருந்தது. படைப்பு அனைத்துக்

கும் தொடக்கம் உண்டு. இந்தத் தொடக்கநிலையை அருளியவர் இறைவன். இங்ஙனம், இவை அனைத்தும் கடவுளின் படைப்புக்களாகின்றன.

கடவுள் திருமொழி:

ஆதியிலே நீர் பூவலகுக்கு அடித்தளம் இட்டீர்.
வானங்கள் உம் கைவேலை.
இவை எல்லாம் அழிந்து விடும். நீரோ நிலை நிற்பீர்!
அனைத்துமே ஆடையைப்போலப் பழமை அடையும்,
துணிமணிபோல் நீர் அவற்றை மாற்றுகிறீர்.
அவையும் மாறிப் போகும்.
நீரோ எனில் ஒரே நிலையாய் உள்ளீர்!
உம் காலத்துக்கு முடிவே இல்லை.

(சங்கீதம் 101:25 – 26).

செயல் திட்டம்;

1. படைப்புகளின் இடையருத் தன்மையை (தொடர்ந்து இருத்தலை) நண்பனுக்கு எவ்விதம் விளக்குவீர்?
2. 'உலகில் உள்ள ஒவ்வொருவரையும், ஒவ்வொன்றையும் இறைவன் அறிகிருர்' என்பதன் விளக்கம் என்ன?

வாழ்க்கைக்கு:

காலைச்செபத்தைத் தினமும் பக்தியுடன் செபிப்பேன்: பிதா, சுதன், பரிசுத்த ஆவியாகிய திரிஏக சர்வேசுரா! தேவரீரை ஆராதித்து தேவரீருடைய திருவாக்கெல்லாம் முழு மனதுடனே விசுவசித்து, நம்பி சகலத்தையும் பார்க்க உம்மையே நேசிக்கிறேன்.

தேவரீர் அடியேனுக்குச் செய்து வருகிற சகல உபகாரங்களுக்காகவும், விசேஷமாய் என்னை இந்நேரமளவும் பிழைத்திருக்கப் பண்ணினதற்காகவும், உமக்கு இடைவிடாத ஸ்தோத்திரம் பண்ணுகிறேன்.

இன்று உம்முடைய கற்பனைகள் தவருமல் நடக்கக் கெட்டி மனதாயிருக்கிறேன். ஆதலால் என் சிந்தனை, வாக்கு, கிரியை. ஆத்துமம், சரீரம் சகலத்தையும் உம்முடைய பணிவிடைக்கு ஏற்க நடப்பித்துக் கொள்ளத்தக்கதாக உமக்கே கையளிக்கிறேன்,

இதல்லாமல் நான் இன்று செய்கிற நற்கிரிகைகளையெல்லாம் யேசுநாதருடைய புண்ணியங்களோடு தேவரீருக்குக் கையளித்து, அவற்றால் வருகிற பலன்களை நான் அடைந்து, சகல பாவங்களுக்கும் உத்தரிக்க மனதாய் இருக்கிறேன். உம்முடைய அளவில்லாத கிருபையால் என்னை இரட்சித்துக் கொள்ளும் சுவாமி, ஆமென்.

விடை தருக:

1. உலகினைப் படைத்துக் காத்து வருபவர் யார்?
2. படைப்புகள் அனைத்துக்கும் எப்படியான தொடக்கமும் முடிவும் உண்டு?

## பாடம் 25

# நிலையில்லா உலகில் வாழும் எனக்கு இறவாப் பெருவாழ்வை அருளுபவர் இறைவன்

மனிதனின் படைப்புப்பற்றிய செய்தி வேதாகமத்தில் இங்ஙனம் கூறப்படுகிறது. "ஆண்டவராகிய கடவுள் களிமண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் முகத்தில் உயிர்மூச்சை ஊதவே மனிதன் உயிர் உள்ளவன் ஆனான். மேலும் இறைவன் மனிதனைத் தமது சாயலாகவும் மாதிரியாகவும் படைத்தார்."

கடவுள் மனிதனை எங்ஙனம் படைத்தார் என்பதை இதிலிருந்து நாம் அறிகிறோம். மண்ணிலிருந்து மனித உடலை அவர் ஆக்கினார்: பின் மனித உடலுக்கு உயிர் ஊட்டினார் இறைவன், மனிதனுக்கு மட்டுமன்றி பறவைகள், மிருகங்கள், ஊர்வனவற்றுக்கும் உயிர் அளித்தார். ஆனால் பிராணிகளின் உயிர் மனித உயிரினும் வேறுபட்டது. கடவுள் மனிதனைத் தம் சாயலாகப் படைத்தார்.

காணக்கூடிய, உருவமுள்ள உடல் கடவுளுக்கு இல்லை, அவர் வடிவம் அற்றவர். எனவே தெய்வீக சாயலை மனிதனின் உடலில் காணமுடியாது, இறைவன் அளவில்லா ஞானமும், முழுமையான சுதந்திரமும் உள்ளவர். இறைவன் மனித உடலை மண்ணிலிருந்து ஆக்கினார். உயிரற்றிருந்த அந்த உடலுக்கு இறைவன் பின்னர் உயிர் அளித்தார். கடவுளின் இச்செயல் மனித உயிர் மற்றைய உயிரினங்களிலும் வேறுபட்டது. மேலானது என்பதைக் காட்டுகிறது. நன்மை தீமையைப் பகுத்து அறியக்கூடிய தன்மையும், விரும்பியதைத் தெரிந்துகொள்வதற்கான சுதந்திரமும் மனிதன் மற்றைய உயிரினங்களிலும் வேறுபட்டவன் என்பதைக் காட்டும். அடையாளமாகும். மனிதனில் கடவுள் தம் சாயலைப் பதித்தார். இதனால் மனித ஆன்மா முடிவில்லா வாழ்வில் பங்குகொள்கிறது. இது மனிதனுக்கு மட்டும் அருளப்பட்ட சிறந்த கொடையாகும். மற்றைய உயிர்களும், உலகமும் அழியக்கூடியவை: அவற்றுக்கு முடிவுண்டு. நான் மனிதன் ஆனதால் இறவாத பெருவாழ்வைப் பெற்றுள்ளேன். எனக்குத் தொடக்கம் இருந்தது. ஆனால் மற்றைய உயிர்களைப்போல் எனக்கு முடிவு இல்லை. நான் இறக்கும் நேரத்தில்—எனது ஆன்மா உடலை விட்டு நீங்கும்போது – உடல் அழிந்துபோகும். ஆனால் ஆன்மா தொடர்ந்து வாழும். நிலையற்ற இவ்வுலகில் வாழும் எனக்கு அழியாத ஆன்மாவை இறைவன் நன்கொடையாக அளித்துள்ளார்.

கடவுள் திருமொழி:

கிறிஸ்துவோடு நாம் இறந்தோம் ஆயின்,
அவரோடு வாழ்வோம் என்பதே நம் விசுவாசம்.

இறந்தோரிடமிருந்து உயிர்த்த கிறிஸ்து இனிமேல் இறக்கமாட்டார்.
இனி அவர் சாவின் ஆட்சிக்கு உட்பட்டவர் அல்லர்;
அவர் வாழ்கிறார்.
அந்த வாழ்வு கடவுளுக்காக வாழும் வாழ்வு.
அவ்வாறே நீங்களும் பாவ வாழ்க்கையைப் பொறுத்த மட்டில் செத்தவர்கள்.
கிறிஸ்து இயேசுவுக்குள்,
'கடவுளுக்காக வாழ்கிறவர்கள்' என எண்ணிக் கொள்ளுங்கள்:
(உரோமையர் 6:8, 9, 11)

செயல் திட்டம்:

1. 'மனித உயிர் மற்றைய பிராணிகளின் உயிர்போன்றது' என்று வாதாடும் நண்பனுக்கு என்ன விடை கூறுவீர்?
2. 'நீர் கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்டவன்' —கடவுள் பக்கமாக அணுகிச் செல்லக்கூடிய வழிகள் எவை? அவரில் இருந்து விலகிப்போவது எப்படி?

வாழ்க்கைக்கு:

மாலைச் செபத்தைச் செபிக்க மறவேன்,

சர்வேசுரா சுவாமி, மனிதர் நித்திரையால் இளைப்பாற இராத்திரி காலத்தைக் கட்டளையிட்டீரே. உமக்கே ஸ்தோத்திரம் உண்டாகக் கடவது'

தேவரீர் இன்று எனக்குச் செய்த சகல உபகாரங்களுக்காகவும் உமக்கு ஸ்தோத்திரம்பண்ணி, என்னுற் செய்யப்பட்ட பாவங்களையெல்லாம், பொறுத்தருளவேண்டுமென்று தேவரீரை மன்ருடுகிறேன்.

என் பாவங்கள் தேவரீருடைய அளவில்லாத மகிமைக்கும், நன்மைத்தனத்துக்கும் விரோதமாய் இருக்கிறதினுலே அவைகளை முழுதும் வெறுத்துத் தள்ளுகிறேன்.

இந்த இராத்திரியிலே சடுதி மரணத்தினுலும், துர்க் கனவு முதலான பசாசின் சோதனைகளாலும் அடியேனுக்கு மோசம் வர ஒட்டாமல் காத்துக்கொள்ளும்,

ஆ என் இயேசுவே! என் மரணவேளையிலே, உமது திவ்விய அருளோடிருந்து, உமது சிலுவையை ஆவலோடு தழுவி உயிர் விடவும், உமது இராச்சியத்தில் உம்மோடு நித்தியமாய் அடியேன் இளைப்பாறவும், கிருபை செய்தருளும் சுவாமி. ஆமென்.

விடை தருக:

1. மனிதனின் படைப்பைப்பற்றி ஆதியாகமம் கூறுவது என்ன?
2. படைப்பின்போது மனிதனுக்களித்த சிறந்த கொடைகள் எவை?

## பாடம் 26

# படைப்பில் பங்குகொள்ள நாம் அழைக்கப்பட்டுள்ளோம்

''இறைவனால் படைக்கப்பட்ட உலகைப் பாதுகாத்து, விருத்தி செய்யும் பணி மனிதனுக்கு அளிக்கப்பட்டுள்ளது'' என வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது.

படைப்பு இறைவனுக்கு மட்டும் உரிய தொழில். ஆனால் படைப்பில் பங்குகொள்ளும்படி மனிதனை அழைக்க இறைவன் விரும்பினார். இதனாலேயே படைப்பின் பொறுப்பாளன் ஆக மனிதனை ஆக்கினார். படைப்பை விருத்திசெய்து, பாதுகாத்தல் மனிதனின் கடமையாகிறது. கடவுளின் திட்டத்திற்கேற்பப் படைப்பு தொடர்ந்தும் நடைபெற உதவ மனிதன் அழைக்கப்பட்டுள்ளான்.

நாம் அனைவருமே இதற்குப் பொறுப்பாளிகள். எனவே படைப்பைப் பாதுகாத்து, விருத்திசெய்வதற்காக ஒன்றிணைந்து பெயற்பட வேண்டும். இதனால், இறைவனின் திட்டப்படி படைப்பு தொடர்ந்து நிகழ்வதற்கு நாம் எவ்விதம் உதவி செய்யலாம் என்பதை நாம் அறிதல் அவசியம்.

மனிதர்மீது கொண்டுள்ள அளவில்லாத அன்பினால் இறைவன் உலகைப் படைத்தார். இயற்கை வளங்களால் மனிதர் பல பலன்களை அடைகின்றனர். கடவுள் எம்மேல் கொண்டுள்ள அன்புக்கு இயற்கை வளங்கள் சான்று ஆகும். இந்த அன்பை நம்மிடையே பரப்புதல் எமது கடமையாகிறது.

படைப்பைப் பாதுகாத்து விருத்தி செய்தல் எம் அனைவர்க்கும் பொதுவான பொறுப்பாகும். இந்தப் பொதுப் பொறுப்புணர்ச்சியில் நாம் அனைவரும் ஒன்றாகப் பங்கு கொள்ளவேண்டும். இதற்கு ஒருவர் ஒருவருக்கு உதவி செய்தல் அவசியம். இப்பெரும்பணியில் நாம் எவ்விதம் செயல்படுகிறோம் என்பது எமது தனிப்பட்ட திறமைகளிலும் ஆர்வங்களிலும் தங்கியுள்ளது. இத்திறமைகளும் ஆர்வங்களும் அனைவருக்கும் பயன்பட வேண்டும் என்பதற்காக இறைவனால் அருளப்பட்டவை. என்னுடைய சூழலைப் பற்றியும், அயலவர் பற்றியும் நான் அக்கறைகொண்டு பணிபுரியும்போது, படைப்பு இடையறாது தொடர்ந்து நடைபெற உதவுகிறேன். இதைப் புரிந்துகொண்டால் பொருள்களை அழித்துச் சிதைத்தல் போன்ற செயல்களில் நான் என்றுமே ஈடுபடமாட்டேன். அனைவரின் பொது நன்மைக்காகவும் உழைப்பேன். இங்ஙனம் உழைத்தால் சமூகம் வளர்ச்சியுறும்.

படைப்புக் கடவுளின் கொடை. அதற்கு மரியாதை காட்டுதல் கடமை. மற்றைய சிறுவர், வளர்ந்தோர் என்பவர்களைப் புரிந்து கொள்ளுதல் படைப்புக்குரிய கௌரவத்தைக் காட்டும் இன்னொரு

வழியாகும். ஏன்? பறவைகள், அழகிய மலர்கள், மரங்கள் எல்லாவற்றையும் விளங்க முயலவேண்டும். இறைவனின் படைப்புத் திட்டத்தில் இப்பொருள்கள் அனைத்தும் பெறுமதி உள்ளவை.

— படைப்பு இடையறுது தொடர்ந்து நடைபெற வேண்டிய தொன்று.
இதில் பங்குகொள்ள நான் அழைக்கப்பட்டுள்ளேன்.

— இதற்கு முதற்படியாகப் படைப்பின் பெறுமதியைப் புரிந்து கொள்ள முயலுவேன்.

கடவுள் திருமொழி:

*தாலாந்து உவமையை வாசிக்கவும். (மத்தேயு 25 : 14 — 30)*

செயல் திட்டம்:

1. மாணவன் என்ற வகையில் படைப்பில் எவ்வாறு பங்கு கொள்ளலாம் என்று கூறுக.
2. கடவுளின் திட்டப்படி எப்படியான சமூகச் செயல்களில் நீர் பங்கு கொள்ளலாம் என்று சுருக்கமாகக் கூறுக.

வாழ்க்கைக்கு:

இசையுடன் பாடுவோம்.

1. இயற்கை அழகின் வடிவாகும்
இறைவன் படைத்த கொடையாகும்
செயற்கை யாவும் இறைவனவர்
செயலைத் தொடர்ந்த தொழிலாகும்.

2. மலரும் கனியும் சோலைகளும்
மண்ணிற் பறவை விலங்கினமும்
அலையின் கடல்வாழ் உயிரினமும்
அமலன் படைத்தார் நமக்காக.

3. படைத்த படைப்பின் பெருமைதனைப்
பாதுகாத்தல் நமது கடன்
உடைத்து அழித்துச் சிதைத்திடுதல்
உண்மை அறியாச் செயலாகும்.

4. அன்பால் இறைவன் உலகமைத்தார்
அன்பின் சான்றே இயற்கை வளம்
அன்பை உலகில் பரப்புவதெம்
அரும்பணி என்றே அறிந்திடுவோம்.

5. ஒருவர் ஒருவரை நேசிப்போம்
உள்ளன்போடு பணிபுரிவோம்
கருணை கொண்டோர் உள்ளந்தான்
கடவுள் வாழும் ஆலயமாம்.

('யாழ். ஜெயம்')

விடை தருக:

1. படைப்பில் மனிதனின் பொறுப்புகள் எவை?
2. கடவுள் உலகை ஏன் படைத்தார்?

ஆய்வுப் பொருள் 4

## பாடம் 27

# விஞ்ஞான அறிவு படைப்பின் தன்மையை மதிப்பிட உதவுகிறது

காற்று, நீர், நெருப்பு என்பவற்றை நாம் அறிவோம். இந்த இயற்கைப் பொருள்களுடன் நாம் பழகுகிறோம். இதனால் அவற்றைப் பயன்படுத்த எம்மால் முடிகிறது. ஒரு பொருளைப் பற்றிச் சிறிதாவது தெரிந்தவர்களே அதைப் பயன்படுத்துவர். நெருப்பைப் பற்றி ஒன்றும் தெரியாத சிறுவனால் அதைப் பயன்படுத்த முடியாது. மாறாக அது அவனுக்கு ஆபத்தையும் விளைவிக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள். இதனால் நாம் பல்வேறு பொருள்களை அறிவோம். ஆயின், அவற்றை எல்லாம் நாம் பயன்படுத்த முடியும் என்பது தெரிகிறதல்லவா?

பொருள்களின் இயல்பும் செயற்பாடும் இயற்கை எனப்படுகிறது. இயற்கை கடவுளின் படைப்பாகும். இயற்கையின் விந்தைகளைப் பற்றி ஒரு சிறிதே எமக்குத் தெரியும். இதனால் இயற்கையைப் பாதுகாத்து விருத்திசெய்யும் திறமை குறைந்தவர்களாக நாம் இருக்கிறோம். அதாவது ஓரளவே இயற்கையைப் பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளோம்.

இயற்கையில் மறைந்துள்ள இரகசியங்கள் பல. இந்த விந்தைகளை நாம் அறியக்கூடிய நுண்ணறிவையும் திறமையையும் இறைவன் எமக்கு அருளியுள்ளார். எனவே எமது திறமைக்கேற்ப இதைப்பற்றி அறிந்து உழைத்தல் எமது கடமை; எமக்குள்ள பெரும் பொறுப்பு இது. இயற்கையைப் பற்றிய அறிவு இறைவனை நன்கு அறியத் துணைபுரியும். எனவே இயற்கையில் பொதிந்துள்ள இரகசியங்களை எம் திறமைக்கேற்ப அறிதல் அவசியம். அப்போது கடவுளின் அழகையும், வியத்தகு, தன்மையையும், வல்லமையையும், மாட்சிமையையும் நாம் அறிவோம். படைப்பின் மதிப்பையும், அதன் பயனையும் புரிந்து கொள்வோம். இதனால் இயற்கையைப் பாதுகாத்து, விருத்திசெய்யும் பொறுப்பை ஏற்று அதற்கியையச் செயற்பட முடியும், நாம் ஒன்றிணைந்து இயற்கை வளங்களை விருத்திசெய்வதால் சமுதாயம் முன்னேறும்

எம் நாட்டில் உள்ள ஒரு நதியின் பெயரைக் கூறுங்கள்; அது எவ்வளவு பயன்படுகிறது என்பதைச் சிந்தியுங்கள், சில நதிகள் நீர் வீழ்ச்சியிலிருந்து ஆரம்பம் ஆகின்றன. நீர்வீழ்ச்சிகள் எவ்வளவு அழகானவை! அழகு மட்டும்தான் அவற்றின் பயனு? நீர்வீழ்ச்சி யைப் பயன்படுத்தி மனிதன் மின்சக்தியை உண்டுபண்ணுகிறுன்; இன்னும் நிலநெய், சுரங்கப் பொருள்கள் முதலிய இயற்கை வளங் களையும் மனிதன் பயன்படுத்துகிறுன்; இவை கடவுளை நன்கு அறிய உதவும் சாதனங்களாக அமைகின்றன.

கடவுள் திருமொழி:

அப்பொழுது கடவுள் ஒளி உண்டாகுக என்று உரைத்தார், உரைக்கவே ஒளி உண்டாயிற்று.
பின் கடவுள் நீர்த்திரளின் நடுவில் வானவெளி உண்டாகி, நீரினின்று நீர் பிரியக்கடவது என்ருர்.
கடவுள் வானவெளிக்குப் பரலோகம் என்று பெயரிட்டார்.
(ஆதியாகமம் 1:3,6,8)

செயல் திட்டம்:

1. உம்மைச் சூழவுள்ள 5 பொருள்களைக் கூறி, அவற்றின் வழியாக இறைவனை எப்படி அறியலாம் என்று காட்டுக.
2. 'விஞ்ஞான அறிவின் வளர்ச்சி கடவுளை மேலும் அறிய உதவு கிறது', சுருக்கமாக விளக்குக.

விடை தருக:

1. இயற்கையை நாம் ஏன் பாதுகாத்து விருத்திசெய்யவேண் டும்?
2. இயற்கை பற்றி நுட்பமான அறிவு வழியாக யாரைக் காண முடியும்?

ஆய்வுப் பொருள் 4

## பாடம் 28

# படைப்பை நிறைவாக்கவும் அதை விருத்திசெய்யவும் விஞ்ஞான வளர்ச்சி உதவுகிறது

வளர்ந்து வரும் விஞ்ஞானம் என்றதும் அணுக்குண்டு, சந்திரனில் இறங்கிய விண்வெளிக்கப்பல், ஏவுகணை என்பவற்றின் நினைப்பு உங்களுக்கு வரலாம். இந்த விஞ்ஞான கருவிகளும் அணு ஆயுதங்களும் மனிதனுக்கு நன்மையிலும் தீமையையே அளிப்பன என்றும் நீங்கள் கருதலாம். இந்தச் சிக்கலான விடயங்களை விட்டு விட்டு சிறு விடயங்களைப் பற்றி இன்று சிந்திப்போம்.

நீங்கள் காலில் அணிந்திருக்கும் பாதவணி அல்லது தலையில் உள்ள மயிரை அழகாக வார உதவும் சீப்பு ஒன்றை நினையுங்கள்- இன்னும் பயணம் செய்ய உதவும் வாகனம், வாசிக்கும் புத்தகங்கள், விளையாடும் பொம்மைகள், இருள் அகற்றும் மின் விளக்கு...... என்னும் பொருள்களைச் சிந்தியுங்கள். இவை அனைத்தும் விஞ்ஞான வளர்ச்சியால் எமக்குக் கிடைத்த பொருள்கள், விஞ்ஞான வளர்ச்சி படைப்பை முன்னேற்ற உதவும், இங்ஙனம் செயற்பட வேண்டும் என்று கடவுள் எங்களை அழைக்கிறார்.

இறைவனின் வல்லமை அவரின் வியத்தகு தன்மை, அன்பு, மாட்சி என்பவற்றைப் படைப்பின் வழியாகக் காண்கிறோம் என முன் படித்தோம். இப்பண்புகளில் கடவுளின் அன்பே முதன்மை வகிக்கிறது. நாம் அழிந்து போவதற்காக இறைவன் உலகைப் படைக்கவில்லை. மகிழ்ச்சியுடனும் வசதிகளுடனும் நாம் வாழவேண்டும்போது நாம் ஒருவர் ஒருவரை அழிக்கக்கூடாது: ஆக்கப் பணியில் ஈடுபட வேண்டும். பொது நன்மையைக் கருத்தில் கொள்ள வேண்டும்: என்பது கடவுளின் திட்டம்.

கடவுளின் திட்டத்திற்கு ஏற்பச் செயற்படும் நாம் எமது திறமைகளையும் ஆற்றல்களையும் வளர்க்க வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும், எமது அறிவைச் சரியான வழியில் வளர்த்தல் எமது கடமை. நாம் பெற்ற சுதந்திரத்தை நல்வழியில் பயன்படுத்த

வேண்டும். சுதந்திரத்தை நல்வழியில் பயன்படுத்துதல் என்ருல் பொதுநன்மைக்காக உழைத்தல் என்பது பொருள். ஒருவர் ஒருவரைச் சிதைத்து அழிப்பவர்களாக வாழ்ந்தால் எமது சுதந்திரத்தைத் தவருன வழியில் பயன்படுத்துபவர்களாக மாறிவிடுவோம்.

இறைவன் எம்மை அன்பு செய்கிருர்; இதில் எவ்வித சந்தேகமும் இல்லே. அன்புக்கு அன்பு செய்தல் எமது கடமை: எம்மை அன்பு செய்யும் இறைவனே அன்பு செய்வோம்; இறைவனே மட்டும் அன்றி, எம் அயலவரையும் அன்பு செய்வோம். இறைவனின் படைப்பு அனேத்திலும் அன்பு கொள்வோம். எனவே படைப்பை அழிக்கும் வேலேயில் நாம் ஈடுபடக்கூடாது. இயற்கையையும், நாம் வாழும் சமூகத்தையும் வளர்க்கும் வழிவகைகளில் எம் அறிவைப் பயன்படுத்துவோம், எமது விஞ்ஞான அறிவு இவை போன்ற குறிக்கோளே நாம் அடைய உதவவேண்டும். நாம் சில நோக்கங்களே நிறைவேற்றுவதற்காக அழைக்கப்பட்டுள்ளோம். சிலர், இந்த அழைப்பை விளங்காமல் இருக்கின்றனர். இதனுல் தமது ஆற்றல்களேத் தவருகப் பயன்படுத்தி அழிவுக்குக் காரணமாகின்றனர்.

கடவுள் திருமொழி;

கடவுள் அவர்களே ஆசிர்வதித்து,
நீங்கள் பல்கிப் பெருகிப் பூமியை நிரப்பி,
அதனேக் கீழ்ப்படுத்துங்கள்,
கடல் மீன்களேயும் வானத்துப் பறவைகளேயும்
பூமியின் மீது அசைந்துலவும் உயிரினங்கள் அனேத்தையும்
ஆண்டு கொள்ளுங்கள் என்ருர். (ஆதி ஆகமம் 1:28)

செயல் திட்டம்

1. விஞ்ஞான வளர்ச்சிக்கு உதவிய கிறிஸ்தவ விஞ்ஞானிகள் பற்றிய விபரங்களே அறிதல், படங்கள் சேகரித்தல்,
2. எமது சுதந்திரத்தைச் சரியான வழியில் பயன்படுத்துவது எப்படி?

வாழ்க்கைக்கு;

விஞ்ஞான வளர்ச்சியால் மனிதனுக்கு ஏற்பட்ட நன்மைகளுக்காக இறைவனேப் புகழ்ந்து ஒரு செபம் ஆக்கிச் செபிப்பேன்.

விடை தருக:

1. விஞ்ஞான அறிவின் பயன் என்ன?
2. படைப்பைச் சீர்ப்படுத்தி, முன்னேற்றுவதற்கு நாம் என்ன செய்யவேண்டும்?

<u>ஆய்வுப் பொருள் 4</u>

பாடம் 29

# படைப்பைப் புதுப்பிக்கும் பணியில் பங்குகொள்ள நான் பெறும் உதவி (1)

(கட்டளைகள் 1, 2, 3)

''.........அவரை அழைத்துச் சென்று, உலக அரசுகள் அனைத்தையும் ஒரு நொடிப் பொழுதில் காட்டி,

''இவற்றின்மேல் முழு அதிகாரத்தையும், இவற்றின் மகிமையையும் உமக்குக் கொடுப்பேன். ஏனெனில் இவை யாவும் என்னிடம் கையளிக்கப்பட்டுள்ளன; என் விருப்பம்போல் எவருக்கும் இவற்றைக் கொடுக்க முடியும். எனவே நீர் தெண்டனிட்டு, என்னை வணங்கினால் இவை யாவும் உம்முடையவை ஆகும்'' என்றது.

இப்படிக் கூறித் தன்னை வணங்கும்படி கேட்டது யார்? எவரை? என்று அறிந்தால் வியப்பு அடைவீர்கள். இயேசுவை அலகை மூன்று முறைகளிற் சோதித்தது. இரண்டாம்முறை அலகை சோதித்தபோது, கூறிய வார்த்தைகள் இவை. அதற்கு இயேசு:

''உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி, அவரை மட்டும் ஆராதிப்பாயாக என எழுதி இருக்கிறதே'' என்றார்.

புனித லூக்காஸ் நற்செய்தியில் உள்ள இப்பகுதி கடவுள் ஒருவரே வணக்கத்துக்கு உரியவர் என்று தெளிவாகக் கூறுகிறது. ஆனால் சகல அதிகாரங்களும் தனக்கு அளிக்கப்பட்டிருப்பதாகவும், தன்னை வணங்குவதற்காகவே இவ்வதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் சாத்தான் உரிமை கோருகிறார்.

படைப்பு முழுவதும் இறைவனுக்குச் சொந்தமானவை எனப் படித்திருக்கின்றோம். அன்பு, அழகு, வல்லமை, மாண்புக்கெல்லாம் ஊற்றாகவும், ஆதாரமாகவும் இருப்பவர் இறைவன், எனவே வணக்கம் பெறுதல் கடவுளுக்கே உரிய தனி உரிமை, கடவுள் ஈடு இணையற்றவர் என்பதே இதற்குக் காரணம். இந்த உண்மையை நான் விளங்கினால் அன்றிப் படைப்பைப் புதுப்பிக்கும் பணியில், பங்கு பற்ற முடியாதவன் ஆவேன்.

''நானே உண்மையும், வழியும், உயிரும்'' என இயேசு பெருமான் ஒருமுறை கூறினார். இயேசு கடவுள்; உண்மை எதுவென அறிந்து அதனைப் புரிந்துகொண்டால் இறைவனையும் அறிவோம்; அவரை விளங்குவோம். உண்மையே உருவான கடவுளையும், அவர் படைத்த படைப்பின் இயல்பையும் விளங்கினால் நாம் படைப்பைப் புதுப்பிக்கும் பணியில் பங்குகொள்ளும் ஆற்றலைப் பெறுவோம்; படைப்பை விருத்திசெய்வதிலும் திறமையாகப் பங்குகொள்வோம்: உண்மையை அறிவது எப்படி? உண்மையை அறியும் வழிகளாக எமது மனச்சான்று, கடவுள் எமக்கு அருளிய கட்டளைகள், பரிசுத்த வேதாகமம் என்பன அமைகின்றன. இந்த வழிகளிற் செல்பவர்களே வாழ்வு உள்ளோராய் இருப்பவர். படைப்பின் நோக்கம் முடிவில்லா வாழ்வுக்கு மனிதனை வழிநடத்துதல் ஆகும். படைப்புப் பணியில் பங்கு கொள்பவர்களாக நாம் இருப்பின் முடிவில்லா வாழ்வை அடைவோம்:

''கட்டளைகளுக்கு அமையும்போது நாம் அடிமைகளாக மாறுகிறோமே'' என்று நீங்கள் கேட்கலாம். கட்டளைகளின்படி நடத்தல் அடிமைத்தனம் அன்று; கட்டளைகளைப் பின்பற்றும்போது நாம் பிறரைக் கௌரவிக்கிறோம்; அடிமைகள் ஆவதில்லை. இறைவன்பால் நமக்குள்ள கடமைகளையும், கட்டுப்பாட்டையும் முதல் மூன்று கட்டளைகள் வாயிலாக அறிகிறோம்.

கடவுள் திருமொழி:

''என் கட்டளைகளை ஏற்றுக் கடைப்பிடிப்பவனே
எனக்கு அன்பு காட்டுகிறவன்.
எனக்கு அன்பு காட்டுகிறவன் மேல்
என் தந்தையும் அன்பு கூர்வார்.
நானும் அவன்மேல் அன்பு கூர்ந்து
அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்''

(அருளப்பர் 14:21)

செயல் திட்டம்:

1. கட்டளைகளின்படி நடத்தல் அடிமைத்தனம் என்று கருதுகிறீரா? கடவுளின் கட்டளையை ஏற்க மறுப்போர் வாழும் ஒரு நகர வாழ்க்கையைக் கற்பனை செய்து ஒரு கட்டுரை எழுதுக.
2. 'வணக்கம் பெறத் தகுதியுள்ளவர் கடவுளே', ஏன்? இந்த வணக்கத்தை மனிதர் வேறு எவருக்குச் செலுத்துகிறார்கள்?

வாழ்க்கைக்கு:

இறைவன் அளித்த பத்துக் கட்டளைகளின்படி நடப்பேன்:

1-வது: ஒரே கடவுளை முழு மனதுடனே ஆராதிப்பாயாக

2-வது: கடவுளின் திருப்பெயரை வீணில் உச்சரியாது இருப்பாயாக

3-வது: கடவுளின் திருநாட்களைப் பரிசுத்தமாய் அனுசரிக்க நினைவாய் இருப்பாயாக

4-வது: பிதாவையும் மாதாவையும் சங்கித்து இருப்பாயாக

5-வது: கொலை செய்யாது இருப்பாயாக

6-வது: மோகபாவஞ் செய்யாது இருப்பாயாக

7-வது: களவு செய்யாதிருப்பாயாக

8-வது: பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக

9-வது: பிறர் தாரத்தை விரும்பாதிருப்பாயாக

10-வது: பிறர் உடைமையை விரும்பாதிருப்பாயாக.

விடை தருக:

1. வணக்கம் செலுத்துதல்பற்றி இயேசு சாத்தானுக்குக் கூறியதென்ன?

2. உண்மையை அறியத் துணைபுரிபவை எவை?

---

ஆய்வுப் பொருள் 4

பாடம் 30

# படைப்பைப் புதுப்பிக்கும் பணியில் பங்குகொள்ள நான் பெறும் உதவி (2)

விசுவாசம், நம்பிக்கை

வேதாகமத்திலே பழைய ஏற்பாட்டில் ஆபிரகாமின் வரலாறு கூறப்பட்டுள்ளது. நாம் பிறந்த நாட்டில் பற்று உடையவர்களாக இருக்கிறோம். 'எமது தாய்நாடு' என்று பெருமைகொண்டு அங்கேயே வாழவும் விரும்புகிறோம் அல்லவா? ஆபிரகாமும் அவ்விதமே வாழ்ந்தார். ஆனால் இறைவன் ஆபிரகாமின் பிறந்த நாட்டைத் துறந்து இறைவன் காட்டிய நாட்டுக்குப் போகும்படி அவருக்கு ஆணையிட்டார். ஆபிரகாம் இறைவனில் விசுவாசம் கொண்டவர்; இறைவனின் ஆணைப்படி தன் சொந்த நாட்டைவிட்டுச் சென்றார்; வானத்திலுள்ள விண்மீன்களைப்போல அவரது சந்ததி பெருகும் எனக் கடவுள் ஆபிரகாமுக்கு அறிவித்தார். ஆனால் ஆபிரகாமோ வயது முதிர்ந்தவர்; அவர் மனைவி சர்ராள் மலடியாகவும் இருந்தாள். இருந்தும் ஆபிரகாம் உண்மையே உருவான கடவுளில் விசுவாசங் கொண்டிருந்தார். அவரின் விசுவாசத்திற்கேற்ப எல்லாம் நிறைவேறிற்று.

ஆபிரகாம் இறைவனில் விசுவாசங் கொண்டமைக்கு மூன்று காரணங்கள் உள:

— முதலாவது அவர் கடவுள் இருக்கிறார் என விசுவசித்தார்;

— இரண்டாவது அழைப்பு இறைவனிடம் இருந்து வந்தது எனப் புரிந்துகொண்டார்.

— மூன்றாவது அவர் தன்னை முழுமையாகக் கடவுளின் கைகளில் ஒப்படைத்தார்.

விசுவாசத்தின் மூன்று முக்கிய பண்புகள் இவை;

விசுவாசத்தை நிறைவு செய்வது நம்பிக்கை எனும் புண்ணியம் ஆகும். 'மனிதனால் ஆகாதது இறைவனால் முடியும்' என்ற உண்மையை ஏற்கச் செய்தது நம்பிக்கை; மேலாக இறைவன் அளித்த வாக்குறுதி நிறைவேறும் என எம்மை எதிர்பார்த்திருக்கச் செய்கிறது. விசுவாசத்தின் இன்னொரு பதிவு முத்திரையே நம்பிக்கை எனலாம்;

விசுவாசமும், நம்பிக்கையும் கடவுளின் சிறப்பான கொடைகள் ஆகும். இறைவனின் திட்டத்தில் அவநம்பிக்கை கொண்டதால் மனிதன் அவல நிலைக்கு ஆளானான். அவன் இறைத் திட்டத்திற்கு முரணாக நடந்தான். படைப்புவேலையில் பங்குகொள்ளாது படைப்பை அழிக்கும் வேலையில் அடியெடுத்து வைத்தான். கடவுளில் நம்பிக்கை இழந்த மனிதன் வழி தவறினான், தனது எண்ணப்படி நடக்கத் தலைப் பட்டான்: இங்ஙனம் நடந்ததால் தொல்லைகளுக்கு ஆளாகினான். அவன் அழிவை நோக்கிச் சென்றான். கடவுளுடைய படைப்பின் நோக்கான பேரின்பவாழ்வு தனக்குக் கிட்டும் என்ற நம்பிக்கையை இழந்தான். இதனால் தானாக இன்பத்தைப் பெறக்கூடிய வழிவகை களைக் கையாள முயன்றான். அகங்காரமும் கொண்டான்; இங்ஙனம் நடந்ததால் உலகிற்குத் தீமையைக் கொண்டுவந்தான்; கடவுளில் விசு வாசமின்றி இருந்தான். அவரில் நம்பிக்கையையும் இழந்தான்; இத னால் படைப்பின் பங்காளி என்ற உயர் நிலையையும் அவன் இழக்க வேண்டி ஏற்பட்டது.

விசுவசித்து, நம்பிக்கை வாழ்வு வாழும் நாம் படைப்பில் பங்கு கொள்ளும் ஆற்றலைப் பெறுகிறோம். இதுவே படைப்பின் நோக்கம் என்பதை நீங்கள் அறிவீர்கள். விசுவாசம், நம்பிக்கை என்ற புண்ணி யங்களை நாம் கைக்கொண்டால் கடவுளில் நம்பிக்கை கொள்வோம்; அவருக்குப் பணிந்து அனைத்தையும் அவர் கரங்களில் ஒப்படைத்து வாழும் மனப்பாங்கையும் பெறுவோம்; இதனால் படைப்பைப் பாது காத்து, விருத்திசெய்யும் ஊக்கம் எமக்கு உண்டாகிறது. உலக முன்னேற்றத்திற்காகவும், மனிதகுலத்தின் நன்மைக்காகவும் உழைப் பதற்குப் போதிய தைரியத்தை அடைந்துகொள்வோம்.

கடவுள் திருமொழி:

அந்த அருளாலேயே விசுவாசத்தின் வழியாக மீட்சி அடைந் திருக்கிறீர்கள்.

இது உங்களால் ஆனதன்று — கடவுளின் நன்கொடையே
இது மனித செயல்களால் ஆனதன்று.

(எபேசியர் 2:8—9)

செயல் திட்டம்:

பழைய ஏற்பாட்டிலுள்ள மோயீசனின் வரலாற்றைப் படிக்கவும்

1. மோயீசன் வரலாற்றில் உண்மையான விசுவாசத்தைக் காட்டக் கூடிய சந்தர்ப்பங்கள் சில எழுதுக.
2. விசுவாசம் அற்ற தன்மை அவிசுவாசம் எனப்படும்; அவிசுவாசி யாக மோயீசன் நடந்த சந்தர்ப்பங்கள் எவை?

வாழ்க்கைக்கு:

*விளக்கேற்றுவோம் நாம் விளக்கேற்றுவோம்—சுடர்*
*வீசும் விசுவாச விளக்கேற்றுவோம்.*

அனுபல்லவி

*உளமெங்கும் வீடெங்கும் ஊரெங்கும் உலகெங்கும்*
*உவந்திட மானிடர் அன்புடனே இன்று*

சரணம்

*நீர் கிறிஸ்துவானவர் தேவசுதன் என்று*
*நேராக விசுவாச உச்சாரணம் செய்து*
*பார்மீது திருச்சபைக் கஸ்திவாரமாகி*
*பாறை என்றே பெயர்கொண்ட ராயப்பர்போல் (விளக்கேற்...)*

விடை தருக:

1. *விசுவாசத்தின் முக்கிய பண்புகள் எவை?*
2. *நம்பிக்கை என்றால் என்ன?*

---

பாடம் 31

# படைப்பைப் புதுப்பிக்கும் பணியில் பங்குகொள்ள நான் பெறும் உதவி (3)

**இறை அன்பு**

நாம் கொண்டுள்ள விசுவாசம், நம்பிக்கை எனும் புண்ணியங்கள் இறை அன்பில் வெளிப்படுகின்றன. இறை அன்பும், விசுவாசம் நம்பிக்கைபோல் இறைவனின் கொடையே. இறைவனின் அன்புக் கொடையாகிய இறையன்பினால் எம் வாழ்க்கை கருத்துள்ளதாகிறது.

''என்னை அறிபவன் கடவுளை அறிகிறான்'' என இயேசு பெருமான் கூறினார். இயேசுவின் முழு வாழ்க்கையும் கடவுள்மட்டில் அவர் கொண்டுள்ள அன்பை வெளிக்காட்டுவதாகவே அமைந்திருந்தது தமது வாழ்க்கையினால் உண்மை அன்பு இன்னதென்று மனிதருக்கு வெளிப்படுத்தினார். தந்தையாகிய இறைவனுக்காக ஒருவர் ஒருவரை அன்பு செய்வதே உண்மையன்பு அல்லது இறையன்பு என்பதைக் காட்டினார். கடவுளின் சித்தத்துக்கு ஏற்ப நடத்தல் இறையன்பு; தன்னலமின்றிப் பிறருக்காக உழைத்தல் இறையன்பு. இறைவனுக்காகச் சமுதாய நலனுக்கான பணியில் பங்குகொள்ளல் இறையன்பு என்பதை வாழ்ந்து காட்டினார். சுருங்கக்கூறின் அயலவரில் தந்தையாம் இறைவனைக் காண்பவராக, அவருக்காக வாழ்பவராக, இறையன்பின் அடையாளமாக இயேசு திகழ்ந்தார். **'அன்பே இறைவன்'** என்பதை இவ்வாறு காட்டினார்.

கடவுள் எம்மீது கொண்டுள்ள அன்பை அறிவோமாயின் படைப்பின்மீது அவர் காட்டும் அன்பையும் உய்த்துணர்வோம். எனவே கடவுளை அன்பு செய்யவேண்டின், அவரின் படைப்புகளையும் மதிக்க வேண்டும். கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதனுக்கு நாம் அன்பு காட்டும்போது இறைவனை அன்பு செய்கிறோம் என்பது சிறப்பாகத் தெரிகிறது. மனிதனின் நலனுக்காகவே இறைவன் படைப்பனைத்தையும் அளித்தார். இதே நோக்குடன் நாம் வாழ்ந்தால் படைப்புக்குத் தீங்கு விளைவிக்காமலும், அதை அழிக்காமலும் வாழ்வோம்.

இறைவன் மனிதனில் எத்தகைய அன்புள்ளவராக இருக்கிறார். என்பது படைப்பின் வழியாகத் தெரிகிறது. மனிதனின் மகிழ்ச்சியான வாழ்வுக்குத் தேவையானதெல்லாம் இறைவன் அளித்துள்ளார்.

சகல வசதிகளும் மனிதனுக்கு அளிக்கப்பட்டுள்ளன. படைப்பை நல்வழியிற் பயன்படுத்த அவன் பெற்றுள்ள நுண்ணறிவு பயன்படுகிறது. இயற்கை வளங்களைச் சீரிய முறையிற் பயன்படுத்தி நன்மை செய்வதற்காக மனிதனுக்குச் சுதந்திரம் கொடுத்துள்ளார் இறைவன்.

எம்மை அன்பு செய்பவரை அன்பு செய்ய நாம் விரும்புவது இயல்பு. கடவுள் எம்மை அன்பு செய்வதால் நாமும் அவரை அன்பு செய்யவேண்டும். நாம் அயலார்மீது காட்டும் அன்பினால் இறைவன் மீது கொண்டுள்ள அன்புக்குச் சான்று பகரவேண்டும்.

உண்மையான இறையன்பு நன்மையைத் தெரிந்தெடுத்து, அதையே செய்யும்படி எம்மைத் தூண்டுகிறது. தீமை செய்வது தான் எனது இயல்பாக இருந்தாலும் நன்மையே செய்யவேண்டியது எனது கடமை. இறையன்பு என்னை ஆட்கொள்ளும்போது பொது நன்மைக்காகப் படைப்பை விருத்திசெய்வதில் ஈடுபடுவேன். இதனால் படைப்பின்மேல் கடவுள் கொண்டுள்ள அன்பைப் பிறர் அறிய உதவுவேன். இவ்வாறு செயற்படின் படைப்பை விருத்திசெய்து, மனித இனம் முழுவதும் மீட்பு அடைவதற்காக உழைப்பதே எனது நோக்கமாக அமையும். இவற்றை நான் இறைவனுக்காகச் செய்வேன்; அயலவரைக் காணும்போது என் அன்பான இறைவனையே காண்கிறேன்.

கடவுள் திருமொழி:

*'அயலானுக்கு அன்பு, பகைவனுக்கு வெறுப்பு' என்று*
*சொல்லி உள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள்*
*நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்*
*உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள்*
*உங்களைத் துன்புறுத்துவோருக்காகச் செபியுங்கள்:*

(மத்தேயு 5:43–44).

செயல் திட்டம்:

1. கடவுள்மேல் கொண்டுள்ள அன்பைக் காட்டுவதற்கு மாணவனாகிய நீர் ஆற்றக்கூடிய ஐந்து கருமங்களை எழுதுக.
2. இயேசுக்கிறிஸ்துநாதர் தமது அன்பைப் பரமதந்தைக்கு எப்படிக் காட்டினார் என்று விளக்குக.

வாழ்க்கைக்கு;

'அன்பு வாழ்க்கை வாழுவேன்' என்ற கருத்தமைய ஒரு செபம் ஆக்கிச் செபிப்பேன்.

விடை தருக:

1. இறையன்பின் அடையாளமாக வாழ்ந்தவர் யார்?
2. நாம் இறைவன்மீது கொண்டுள்ள அன்புக்குச் சான்று என்ன?

<u>ஆய்வுப் பொருள் 5</u>

## பாடம் 32

# எனது அழைப்பை ஏற்க நான் தயாரா?

### பொறுப்பை ஏற்றல் அல்லது அதிலிருந்து தப்பியோடுதல்

தூரத்திலுள்ள நாடு ஒன்றுக்குச் செல்லச் செல்வந்தன் ஒருவன் தீர்மானித்தான். அவன் போகுமுன் தனது பணியாளர் மூவரை அழைத்தான். அவர்களில் ஒருவனுக்கு ஐந்து பொற்காசுகளும் மற்றவனுக்கு இரண்டும் அடுத்தவனுக்கு ஒன்றுமாகக் கொடுத்தான், தலைவன் சென்றபின் ஐந்து பொற்காசுகளையும் இரண்டு பொற்காசுகளையும் பெற்ற பணியாளர் வணிகம்செய்து நயம் பெற்றனர். ஆனால் ஒரு பொற்காசைப் பெற்றவனோ, தான் பெற்ற பணத்தை நிலத்தில் புதைத்து வைத்தான். செல்வந்தன் திரும்பி வந்தபோது பணத்தைப் புதைத்து வைத்தவனைத் தண்டித்தான்; ஆனால் மற்ற இருவரையும் பாராட்டி மேலும் பணம் கொடுத்தான்.

கிறிஸ்துநாதர் கூறிய உவமைகளில் இதுவும் ஒன்று. கதை வழியாக ஓர் உண்மையைப் படிப்பிப்பது உவமை; நாம் இன்று படித்த பொற் காசுகளின் உவமை பொறுப்பை ஏற்றுக்கொள்ளல் பற்றி விளக்குகிறது. முன்னைய பாடங்களில் படைப்பில் நாம் பங்கு கொள்ள வேண்டும் என்று படித்தோம்: படைப்பில் பங்குகொள்ள நாம் அனைவருமே அழைக்கப்பட்டுள்ளோம். ஆனால் நாம் எல்லோரும் ஒரேவிதமாகப் பொறுப்பில் அல்லது அழைத்தலில் பங்குபற்ற இயலாது: இது நான் பெற்றுள்ள திறமைகளிலும், தனி வேறுபாடுகளிலும் தங்கியுள்ளது.

உழைப்பினால் உலகை விருத்திசெய்வதற்காக இறைவன் மனிதனைப் படைத்தார். அவரவர் தன்தன் திறமைக் கேற்ப வேலைசெய்கின்றனர். இதுவே அவரது அழைத்தல். எனது ஆற்றலுக்குத் தக்கதாக உலகுக்குச் சேவை செய்யும் ஓர் அழைத்தல் எனக்கும் உண்டு. எனது அழைப்புக்கேற்பச் செயற்படவேண்டியது எனது கடமை: நான் பள்ளி செல்லும் மாணவன், எனவே படித்தல் எனது இப்போதைய கடமை. எனது திறமைகளை நான் அறிந்து அவற்றை மேலும் மேலும் வளர்க்கவேண்டும். அதாவது அவற்றை விருத்தி செய்தல் அவசியம். எனது ஆற்றல்களையும், திறமைகளையும் உலகின் நன்மைக்காகப் பயன்படுத்தப் பயிற்சி செய்வேன்.

அழைப்பை ஏற்றுக்கொள்ளுமுன் எனக்குள்ள சிறப்பான திறமைகளைக் கண்டறிதல் வேண்டும். திறமைகள் பல திறப்பட்டவை: விளையாட்டு, பேச்சு, கணிதம் போன்ற பல திறமைகள் உண்டு: மேலும் சில திறமைகளைக் கூற முயலுங்கள்......எனக்குரிய திறமைகளை அறிந்து, விளங்கி, அதற்கு ஏற்ப எவ்விதமான சேவையில் நான் ஈடுபடவேண்டும் என்று இன்று சிந்திப்பேன்;

மனிதன் தனித்துவம் உள்ளவன் என முதலாம் பாடத்தில் படித்ததை நினைவுகூருவோம். எனக்குரிய திறமைகள் எனக்குரிய சிறப்பான கொடைகளாகும். அத்திறமைகளுக் கேற்பச் செயற்படுவதே அழைப்பு அல்லது பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல். பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் மனப்பான்மை உமக்கு உண்டா? நான் ஏற்கவேண்டிய பொறுப்பைப் பிறர் ஏற்றுச் செய்யவேண்டும் என எதிர்பார்த்தால் எனது திறமைகளை அவமதிக்கிறவன் ஆவேன்; எனது அழைத்தலை அசட்டை செய்கிறேன், பொறுப்பிலிருந்து நழுவுகிறேன் என்பது பொருள். பொறுப்பு எனும் இலக்கை நோக்கிச் செல்லும் பாதையில் தடையாக இருப்பவை சோம்பலும் தன்னலமும் ஆகும். எனவே உற்சாகத்துடன் கடினமாக உழைப்பேன், சமுதாய நலனுக்காகத் தன்னலமின்றிச் செயற்படுவேன்.

கடவுள் திருமொழி:

என்னிடம் வருகிறவன் தன் தந்தை, தாய், மனைவி
மக்கள், சகோதர சகோதரிகளையும்
ஏன் தன் உயிரையுமே வெறுக்காவிட்டால்
என் சீடனாய் இருக்கமுடியாது;
தன் சிலுவையைச் சுமந்துகொண்டு
என்னைப் பின் செல்லாதவன்
என் சீடனாய் இருக்கமுடியாது. (லூக்காஸ் 14:26 – 27)

செயல் திட்டம்:

1. உமக்குரிய திறமைகளை விருப்ப முறைப்படி ஒன்றன்பின் ஒன்றாக நிரைப்படுத்தி எழுதுக, இதிலிருந்து உமக்குள்ள ஐந்து பொறுப்புக்களை அறிய முயற்சி செய்க.
2. 'எல்லோரும் கடினமாக உழைக்க வேண்டியது கடமை' இது இறைவனின் சித்தம் என்பதற்குக் காரணம் கூறுக;

வாழ்கைக்கு:

1. காற்றும் மழையும் கதிரும் தத்தம்
கடமைகள் முறையே செய்வதுபோல்
போற்றும் மனித குலத்திற் பிறந்தோர்
பொறுப்பினை உணர்தல் கடனாகும்.

2. உழைப்பால் இந்த உலகம் மலர
ஒவ்வொரு தொழிலை மேற்கொள்ளல்
அழைப்பாம் இந்த அழைத்தலை ஏற்க
ஆண்டவர் நம்மைப் படைத்திட்டார்!

3. மாணவர் உங்கள் திறமைகள் யாவும்
மாபரன் தந்த கொடைகளெனப்
பேணுதல் வேண்டும்; கல்வியில் ஆற்றல்
பெற்றிட வேண்டும் மறவாதீர்!

'யாழ், ஜெயம்'

விடை தருக:

1. இறைவன் மனிதனை ஏன் படைத்தார்?
2. உமது பொறுப்பை ஏற்றுக்கொள்ள நீர் செய்ய வேண்டியதென்ன?

---

ஆய்வுப் பொருள் 5

பாடம் 33

# கிறிஸ்து எம்மைப் புது வாழ்வுக்குயர்த்தினர் இதனுல்புதுவாழ்வை அனைத்திற்கும்அளிப்போம்

இயேசுவின் காலத்தில் மரிய மதலேனுள் என்ற பெண் ஒருத்தி வாழ்ந்தாள். தீயநெறியில் வாழ்ந்த அவளை அவ்வூரார் 'பட்டணத்துப் பாவி' என்று அழைத்தனர். இயேசு ஒருநாள் சீமோன் என்ற பரிசேயரின் வீட்டிற்குச் சென்றிருந்தார். இதையறிந்த மரியமதலேனுள் அங்கு சென்று இயேசுவின் முன்னிலையில் நின்று தன் பாவங்களுக்காக மனம்வருந்தி அழுதாள். அவருடைய பாதங்களைத் தனது கண்ணீரால் நனைத்தாள். அதைத் தனது கூந்தலினுல் துடைத்தாள். பரிமள தைலத்தை அவர் பாதங்களில் ஊற்றினுள். அவளின் பாவங்களை இயேசு மன்னித்தார்.

மரியமதலேனுள் நன்மைத்தனத்தின் வழியை இயேசுவில் கண்டு கொண்டாள். இயேசுவின் வார்த்தையைக் கேட்டாள்; அதற்கேற்ப தன் வாழ்க்கையை மாற்றி அமைத்தாள். நல் வாழ்வு வாழத் தொடங்கினுள். கல்வாரிவரை இயேசுவைத் தொடர்ந்து நடந்தாள். இயேசு உயிர்த்துவிட்டார் என்பதை முதலில் அறிந்தவளும் அவளே! இந்த நல்ல செய்தியை அவள் பிறருக்கும் அறிவித்தாள்.

மரியமதலேனுளின் வாழ்க்கை எமக்குப் பெரும் பாடமாக அமைகிறது. புதுவாழ்வைப் பெற்றவர்களுள் மரிய மதலேனுளும் ஒருத்தி. இதனுல் மற்ற எல்லாரிலும் முன்னதாகவே கிறிஸ்துவின் உயிர்ப்பை அறியும் பெரும் பேற்றினைப் பெற்ருள். இப் புது வாழ்வினைப் பற்றி ஏனையோருக்கும் அவள் அறிவிக்கக்கூடியவளாக இருந்தாள்.

நாமும் இப்புது வாழ்வைப் பெற்றுள்ளோம். கடவுளின் பிள்ளை என்ற நிலையைத் திருமுழுக்கின் வழியாகப் பெற்ரோம். 'அன்புத் தந்தை இறைவன்' என்பதை அன்று ஏற்றுக்கொண்டோம். இயேசுவைப் பின்செல்லும் வழியையும் தேர்ந்து எடுத்தோம். உயிர்த்த கிறிஸ்துவுக்குச் சான்று பகர்வதற்கும் உடன்பட்டோம். இவ்வாறு, சான்று பகர்தலே எமது அழைப்பு. முடிவில்லா வாழ்வைப் பெற்றுள்ளோம் என்பதையும் அதன் வளர்ச்சிக்காக முயற்சி செய்ய வேண்டும் என்பதையும் விளங்குதலே எமது அழைத்தல்; நாம் பெற்ற புது வாழ்வைப் பிறர் பெற உதவுதலும் எமது கடமை.

இந்தப் பொறுப்புக்கு அமைய — அழைத்தலுக்கேற்ப — ஆற்ற வேண்டிய பணிகள் பல உள. முதலில் எனது சொந்த வாழ்வை நான் புதுப்பிக்கவேண்டும். கடவுளின் பிள்ளையாகிய நான் கடவுள் விரும்பும் வழியைத் தெரிந்தெடுக்கவேண்டும். தன்னலம் இன்றிப் பிறர் நலம் பேணும் வாழ்வு வாழ்வதால் புதுவாழ்வு பெற்று, அதைப் பிறருக்கும் அளிப்பேன். கிறிஸ்து இறைவனின் சித்தத்தை நிறைவேற்றும் வாழ்வை வாழ்ந்தார். இதனால் துன்பங்களையும் வேதனைகளையும் அனுபவித்தல் அவருக்கு மகிழ்ச்சிகரமாக இருந்தது. அனைவரதும் நன்மைக்காகக் கடினமாக உழைத்தார் இயேசு. அதனால் பெருமகிழ்ச்சியும் அடைந்தார். நாமும் கிறிஸ்துவைப் பின்செல்பவர்கள்; அதனால் எல்லோருக்கும் நன்மைசெய்து வாழ்வோம்.

கடவுள் திருமொழி :

*நீங்கள் ஏற்றுக்கொண்ட அழைப்புக்கேற்ப*
*வாழ்க்கையை நடத்துங்கள்;*
*நிறைவான தாழ்ச்சியும், சாந்தமும், பொறுமையும் உள்ளவர்களாய் நடந்து,*
*அன்பினால் ஒருவரை ஒருவர் பொறுத்துக் கொள்ளுங்கள்;*
*(எபேசியர் 4:2)*

செயல் திட்டம்

1. பாடத்தை வாசித்து, திருமுழுக்கால் எவ்விதம் புதுவாழ்வு அடைந்தோம் என்று விளக்குக.
2. புனித சின்னப்பர் மனந்திரும்பிய வரலாற்றை ஆசிரியரிடம் கேட்டு அறிக.

வாழ்க்கைக்கு:

*'ஆண்டவரை அன்பு செய்யவும்,*
*அவருக்குப் பணிபுரியவும்*
*சமாதானத்தில் சென்று வாருங்கள்'*
*என்று பலி முடிவில் குருவானவர்*
*சொல்வதற்கேற்ப என் வாழ்வை மாற்றி அமைப்பேன்.*

விடை தருக:

1. இயேசுவைப் பின்பற்றிய மரிய மதலேனாள் என்ன செய்தாள்? அதற்குமுன் அவள் எப்படி வாழ்ந்தாள்?
2. நாம் பெற்ற புதுவாழ்வைப் பிறருக்கு அளிப்பதற்கு யாரைப் பின்பற்றி நடக்கவேண்டும்? எப்படி?

## பாடம் 34

# இறைவன்மட்டிலும் மனிதர்மட்டிலும் பொறுப்பை ஏற்கும்படி கிறிஸ்து என்னை அழைக்கிறார்! (I)

நன்முன்மாதிரிகை வழியாக

ஒருநாள் இயேசுவின் சீடர்கள் செபிப்பது எப்படி என்று சொல்லித்தருமாறு அவரை வேண்டினார்கள். இயேசு மனம் மகிழ்ந்து படிப்பித்த செபம் இதுதான்;

*வானகத்தில் உள்ள எங்கள் தந்தாய்!*
*உமது பெயர் பரிசுத்தம் எனப் போற்றப்படுக!*
*உமது அரசு வருக!*
*உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவதுபோல,*
*மண்ணுலகிலும் நிறைவேறுக!*
*எங்கள் அன்றாட உணவை எங்களுக்கு இன்று அளித்தருளும்.*
*எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தவர்களை, நாங்கள் மன்னித்துள்ளதுபோல, எங்கள் குற்றங்களை மன்னித்தருளும்,*
*எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும்,*
*தீயோனிடம் இருந்து எங்களை விடுவித்தருளும்.*

(மத்தேயு 6 : 9 – 13)

நாம் வகிக்கவேண்டிய பொறுப்புக்கள் இச்செபத்தில் அடங்கியுள்ளன. கடவுளுக்கும் மனிதருக்கும் நாம் ஆற்றவேண்டிய கடமையை இது கூறுகிறது. இறைவன் எமது தந்தை என்பதையும் நாம் அனைவரும் சகோதரர் என்பதையும் நினைவூட்டுகிறது: இறைவனை மகிமைப்படுத்தி, அவரது விருப்பத்துக்கு – சித்தத்துக்கு – பணிந்து நடக்க வேண்டும் என்று கூறுகிறது. எமக்குரிய சொத்துக்களைப் பிறருடன் பகிர்ந்து வாழும்படி எம்மை அழைக்கின்றது. எமது அயலவரை மன்னித்து, அவர்களோடு அன்புடனும் அமைதியுடனும் வாழவேண்டும் என்று நினைவூட்டுகிறது. இயேசு எமக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தார். அவரது மாதிரிகை வாழ்வை இச்செபத்தில் தெளிவா

கக் காண்கிறோம். இச்செபத்தின் வழியாகப் பொறுப்பை ஏற்கக் கிறிஸ்து என்னை அழைக்கிறார்.

இறைவனை பிதாவே! என அழைக்கும்படி கிறிஸ்து கூறினார். இதிலிருந்து நாம் இறைவனின் பிள்ளைகள் என்பது புலனாகின்றது. இறைவன் அப்பா என்பதால் நாம் எல்லாரும் சகோதரர். சகோதரராகிய நாம் நேர்மையுடன் ஒருவர் ஒருவரை அன்புசெய்ய வேண்டும். சாதி, சமய, கட்சி வேறுபாடுகள் இன்றி நாம் வாழ்தல் அவசியம். பிறரிடத்துப் பரிவும், இரக்கமும் உள்ளவர்களாக நாம் வாழவேண்டும். இயேசு நாம் எப்படி வாழவேண்டுமென வாழ்ந்துகாட்டினார். இறைவனின் திருச்சித்தத்தை நிறைவேற்றுவதே அவர் வாழ்வின் குறிக்கோளாக இருந்தது. அதற்கேற்ப மக்களை அன்பு செய்தார். மனிதருக்காகத் தம்மையே தந்த கற்பகம் அவர். எனவே நாமும் அவ்விதம் வாழவேண்டும் என எதிர்பார்க்கிறார்.

- எமது விசுவாசத்தால் கிறிஸ்துவுக்குச் சாட்சி பகர்வோம்.
- சமுதாயமாக ஒன்றுகூடி இறைவனைப் புகழ்வோம்.
- இந்த உலகில் இறையரசு தோன்றச் சிரமத்துடன் உழைப்போம்.
- எமது வாழ்வினால் இயேசுவை உலகம் அறிய வைப்போம்.
- எல்லோரையும் நேர்மையுடன் அன்பு செய்வோம்.
- அவர்கள் புரியும் தவறுகளை மன்னிப்போம்.
- தீமையை விலக்கி நல்லவர்களாக வாழ்வோம்.
- பொது நலனுக்காக உழைப்போம்.

கடவுள் திருமொழி

இசையாஸ் எழுதிய இறைவாக்குகளின் ஏட்டுச்சுருளை விரித்ததும் இயேசு பின்வரும் பகுதியைக் கண்டார்.

ஆண்டவருடைய ஆவி என்மேலே,
ஏனெனில் என்னை அபிசேகம் செய்துள்ளார்.
எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும்,
சிறைப்பட்டோர் விடுதலை அடையவும்,
குருடர் பார்வை பெறுவர் என அறிவிக்கவும்,
ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்கவும்,
ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவிக்கவும்,
அவர் என்னை அனுப்பினார்.

(லூக்காஸ் 4:17 – 19)

செயல் திட்டம்

1. கர்த்தர் கற்பித்த செபத்தை நாம் செபிக்கும் சில சந்தர்ப்பங்களை எழுதுக.

2. கிறிஸ்துவை உவகு அறியச்செய்யக் கையாளக்கூடிய ஐந்து வழிகள் கூறுக?

வாழ்க்கைக்கு:

'பொறுப்பை ஏற்கும்படி கிறிஸ்து என்னை அழைக்கிறார்,
அந்த அழைப்பை நாம் ஏற்றுச் செயற்பட
நான் ஒரு சிறுசெபம் ஆக்குவேன்.

விடை தருக

1. கர்த்தரின் செபம் என அழைக்கப்படுவது எது? ஏன்?
2. இயேசு எப்படி வாழ்ந்தார்?



பாடம் 35

# இறைவன்மட்டிலும் மனிதர்மட்டிலும் பொறுப்பை ஏற்கும்படி

## கிறிஸ்து என்னை அழைக்கிறார் (2)

திருவருட்சாதனங்கள் வழியாக

*சமாரியா என்பது ஓர் ஊர், அவ்வூர் வழியாக அண்ணல் இயேசு ஒருநாள் பயணம் செய்துகொண்டிருந்தார். மத்தியான வெயில் .... நீண்ட தூரம் நடந்ததால் களைத்த இயேசு ஒரு கிணற்றண்டையில் அமர்ந்து இளைப்பாறினார். அப்போது அவரது சீடர்கள் அங்கிருக்கவில்லை. அவர்கள் உணவு தேடிவரச் சென்றிருந்தனர். கிணற்றில் தண்ணீர் அள்ளிக்கொண்டு போகச் சமாரியப் பெண் ஒருத்தி வந்தாள். இயேசு தண்ணீர் தரும்படி அவளைக் கேட்டார். இதைக் கேட்ட பெண் வியப்படைந்தாள். கிறிஸ்து யூதஇனத்தைச் சேர்ந்தவர் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். யூதர்கள் சமாரியரைத் தம்மிலும் தாழ்ந்தவர்களாகக் கருதி வந்தனர். சமாரியப் பெண்ணான தன்னிடம் இயேசு தண்ணீர் கேட்டதே அவளின் வியப்புக்குக் காரணம். அப்போது இயேசு அவளைப் பார்த்து.*

*''என்றுமே தாகம் தராத வாழ்வின் தண்ணீரை உனக்குத் தருவேன்; இதைக் குடிக்கும் எவரும் என்றுமே தாகங்கொள்ளார்'' என்று கூறினார்.*

இயேசு புதுவாழ்வைத் தொடர்ந்து பாதுகாக்கும் வழிவகைகளை வழங்குகிறார். இந்தப் பேருண்மையை இச் சம்பவம் விளக்குகிறது: இவ்வழிகளே திருவருட்சாதனங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

திருவருட்சாதனங்கள் வழியாக நாம் இறைவனைச் சந்திக்கிறோம். இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள இந்த உறவு எம்மில் பல மாறுதல்களை ஏற்படுத்துகிறது. இம்மாற்றங்களினால் எமது நடத்தையும் மாற்றம்பெறத் துவங்குகிறது. இந்த மாற்றங்கள் எம் வாழ்வில் இடம்பெறச் செய்வதே எமது கடமை.

திருவருட்சாதனங்கள் வழியாகப் பொறுப்பை ஏற்பதற்கான ஓர் அழைப்பைப் பெறுகின்றோம். அழைப்பவர் இறைவன். இறைவனை விசுவசித்து, நம்பி, அவரை அன்பு செய்யும்படி திருமுழுக்கின் வழி

யாக அவர் அழைக்கிறார். அந்த அழைப்பைப் பெற்று அதை ஏற்கும் நான், அதற்கேற்ப நடப்பேன். அதைப் பிறரும் அறியச் செய்வேன். இதற்கு உறுதிப்பூசுதல் எமக்குதவி செய்கிறது. திவ்விய நற்கருணையும், பாவமன்னிப்பும் தெய்வீக வாழ்வில் நாம் வளரவும், அதைப் பிறருக்குக் கொடுத்து வாழவும் உதவுகின்றன. இவை போன்று மற்றைய திருவருட்சாதனங்கள் வழியாகவும் பொறுப்புக்களை ஏற்கும்படி கடவுள் எங்களை அழைக்கிறார்.

திருவருட்சாதனங்கள் வழியாக இறைவனைச் சந்தித்து, அவரின் அழைப்பை ஏற்கிறோம். இதன்பின் இறைவனுக்குச் சேவை புரியும் பொறுப்பை மேற்கொள்ளுகின்றோம். புதுவாழ்வு வாழும் அழைப்புக்குச் சம்மதிக்கிறோம். இங்ஙனம் நாம் பெற்ற புதுவாழ்வைப் பேணிப் பாதுகாக்கும் பணியில் இடையறாது ஈடுபட்டு, மென்மேலும் திருந்தி வாழ்வோம்; இதுவே எமது பொறுப்பு. இதுவே எமது அழைத்தல்.

கடவுள் திருமொழி:

இயேசு அவர்களை அணுகிக் கூறியது;
விண்ணிலும் மண்ணிலும் எல்லா அதிகாரமும்
எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.
நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடர் ஆக்குங்கள்.
பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயரால்
அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து,
நான் உங்களுக்குக் கட்டளையிட்ட அனைத்தையும்
அவர்கள் கடைப்பிடிக்கும்படி போதியுங்கள்.
இதோ உலக முடிவுவரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்.
(மத்தேயு 28:18 – 20).

செயல் திட்டம்:

1. எமது புதுவாழ்வைப் பேணிப் பாதுகாக்கக் கிறிஸ்து எமக்கு அளித்த வழிவகைகள் எவை?
2. இதுவரை நீர் பெற்றுக்கொண்ட திருவருட்சாதனங்கள் எவை? இவை வழியாகச் சமுதாய நலனுக்கு நீர் செய்யக்கூடியவற்றை எழுதுக.

வாழ்க்கைக்கு:

திருவருட்சாதனங்களை எனக்கு அருளிய இறைவனுக்கு நன்றி செலுத்தி ஒரு செபம் ஆக்குவேன்.

விடை தருக!

1. ஏழு திருவருட்சாதனங்களின் பெயரையும் எழுதி, அவை பற்றி இவ்விரண்டு வசனம் எழுதுக.
2. திருவருட்சாதனங்களினால் எம்மில் என்ன நிகழ்கிறது?

ஆய்வுப் பொருள் 5

பாடம் 36

# எமது கிறிஸ்துவ அழைப்பு நமது பண்பாட்டுடன் இயைந்த ஒழுக்கத்தையும் நேர்மையான வாழ்வையும் மேற்கொள்ளப் பயிற்சி அளிக்கிறது

இயேசு தமது போதனைக்கால வாழ்வைத் துவங்கியதும், அப்போஸ்தலர் பன்னிருவரைத் தேர்ந்து எடுத்தார்: அனைத்தையும் துறந்துவிட்டு, தம்மைப் பின்தொடரும்படி அழைத்தார். அப்போஸ்தலரும் அவர் சொற்படி நடந்தனர். இயேசுவின் போதனைகளால் பலவற்றைக் கற்றனர். இயேசுவின் வாழ்க்கை அப்போஸ்தலருக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியது, அவரைப் பின்பற்றித் தம் வாழ்வையும் சீர்ப்படுத்தினர், இயேசுவைப் பின்பற்றிய அப்போஸ்தலர் உயிர்த்த கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாக விளங்கினர். இங்ஙனம் அவர்கள் உலகுக்குப் புத்துயிரைக் கொணர்ந்தனர்.

ஒருவன் கிறிஸ்தவனாக இருக்க விரும்பின் அவன் அப்போஸ்தலனாக வேண்டும். கிறிஸ்துவைத் தன் வாழ்வில் பிரதிபலித்துக் காட்டுபவன். 'கிறிஸ்து அவன்' என்று அடையாளம் காணக்கூடியவனே கிறிஸ்தவன்.

நேர்மையீனம், அநீதி, போலி வாழ்க்கை போன்ற தீயசெயல்களை வெறுத்து வாழ்ந்தவர் கிறிஸ்து. கருணை, மன்னிப்பு, நீதி போன்ற புண்ணியங்களை இயேசு மேலாக மதித்து நடந்தார், நன்மைத்தனத்துக்காக அயராது கடினமாக உழைத்தார். தனி மனிதனின் நலனுக்காகவும் சமுதாய நலனுக்காகவும் தம் வாழ்நாளையே அர்ப்பணித்தார். எது சரி என்பதையும் அதைச் செய்யும் வழியையும் காட்டினார் உலகம் ஒழுக்கத்தில் நிலைபெற நாம் ஆற்றவேண்டிய செயல் முறைகளை இயேசு எமக்கு வழங்கிச் சென்றார்.

உலகுக்கு நன்மைசெய்யும் பணிக்குத் தாமே முன்னோடியாக இருந்தார்: கஷ்டப்பட்டோருக்கு உதவினார்; பிணியாளரைச் சுகமாக்கினார். அவர்களுக்கு ஆவனசெய்தார்; துன்பச் சுமையால் வருந்தியவர்களுக்கு ஆறுதல் கூறி அவர்கள் துன்பம் களைந்தார்;

பாவச்செயல் புரிந்தோர்க்குக் கருணை காட்டினார்; அவர்களைத் தண்டிக்காது அவர்களின் பாவங்களை மன்னித்தார். தமது எடுத்துக்காட்டான வாழ்வினால் நேர்மையையும், புண்ணியங்களையும் வெளிப்படுத்தினார்.

கிறிஸ்துவைப் பின்செல்லுபவனே கிறிஸ்தவன்; எனவே கிறிஸ்துவின் புண்ணியங்களைக் கிறிஸ்தவன் கைக்கொள்ளவேண்டும். அவனே உண்மைக் கிறிஸ்தவன்; கிறிஸ்துவைப் பின்செல்ல விழையும் அருமைப் பிள்ளையே! நீயும் கிறிஸ்தவனாக வாழ விரும்புகிறாய் அல்லவா? கிறிஸ்தவனான உனது கடமை மேலானது; கண்ணியமானது; இது உனக்குக் கிடைத்த பெரும்பேறு; கிறிஸ்துவுக்குச் சான்று பகர்பவனாக நீ வாழ்வாயாக; மற்றவர்கள் உனது வாழ்வில் கிறிஸ்துவைக் காணவேண்டும். இதுவே உனது அழைப்பு! எனவே இளவயதில் இருந்தே இப்படியான நல்வாழ்வு வாழ நீ பயிற்சிபெற முயற்சிசெய்.

கிறிஸ்தவனாகப் பயிற்சி பெற நீ கடினமான முயற்சி செய்யவேண்டும். நேர்மையாகப் படிக்கவேண்டும்; சமுதாய நலனுக்கான வழிவகைகளை அறிந்து, அதற்கேற்பச் செயற்படவேண்டும்.

எனக்குள்ள திறமைகளைச் சமுதாய நலனுக்காக நெறிப்படுத்த முயற்சி செய்வேன். என்றுமே நன்மைசெய்யப் பழகுவேன். பிறருக்காகவே வாழ்வேன். இதனால் இறைவனின் அன்பைப் புரிந்துகொள்வேன். பரம அன்பினால் உந்தப்பட்டுச் சமுதாய நலனுக்காக உழைப்பேன்.

கடவுள் திருமொழி:

உங்கள் அன்பு கள்ளமற்றதாய் இருப்பதாக<br>
தீமையை வெறுத்து நன்மையையே பற்றிக்கொண்டிருங்கள்.<br>
சகோதரர்க்குரிய முறையில் ஒருவருக்கொருவர்<br>
உளங்கனிந்த அன்பு காட்டுங்கள்!<br>
பிறர் உங்களைவிட மதிப்புக்கு உரியவரென எண்ணுங்கள்;<br>
ஊக்கந் தளராது இருங்கள்!<br>
ஆர்வந் தணியாது இருங்கள்;<br>
நீங்கள் ஊழியஞ் செய்வதும் ஆண்டவருக்கே!

(உரோமையர் 12:9—11).

செயல் திட்டம்:

1. கிறிஸ்தவனாகப் பயிற்சி பெறுதல் எவ்விதம்?
2. 'கிறிஸ்தவன் ஓர் அப்போஸ்தலனும் ஆகின்றான்' விளக்குக!

வாழ்க்கைக்கு:

கிறிஸ்து பாவிகளை மன்னித்ததுபோல, எனது உடன் மாணவர் எனக்குச் செய்யும் தவறுகளை மன்னிப்பேன்.

கிறிஸ்து பெற்றோருக்கு அமைச்சலுள்ளவராய் இருந்தது போல, நானும் பெற்றோருக்கு அமைந்து நடப்பேன்.

கிறிஸ்துவின் வாழ்வை வேறு எவ்வகையில் பின்பற்றுவேன் என்று சிந்தித்து நடப்பேன்.

விடை தருக:

1. உலகுக்குப் புத்துயிர் அளிப்பதில் அப்போஸ்தலர் எவ்விதம் செயற்பட்டனர்?
2. கிறிஸ்தவன் என்றால் என்ன பொருள்?

## பாடம் 37

# எனது கிறிஸ்தவ அழைத்தலுக்கு விடை அளிக்க பரிசுத்த ஆவி என்னில் செயற்பட்டு - திடமும் அளிக்கிறார்

**உறுதிப்பூசுதல்**

இயேசு உயிர்நீத்தபின், அப்போஸ்தலர் அச்சத்தினால் பீடிக்கப் பட்டனர். அதனால் வெளியில்வராது மறைந்து வாழ்ந்தனர். உயிர்த்த கிறிஸ்துவைக் கண்டபின்னும், அச்சம் அவர்களைவிட்டு அகலவில்லை. உயிர்த்த கிறிஸ்து நாற்பதுநாள் அவர்களோடு இருந்தார். அதன் பின்பே விண்ணகம் சென்றார். இருந்தும் அப்போஸ்தலர் அஞ்சி யஞ்கி வாழ்ந்தனர். ஆனால் கிறிஸ்து விண்ணகம்சென்று பத்து நாட் களின் பின் அப்போஸ்தலர்கள் திடம் உள்ளவர்களாக மாறினர். பயம் இன்றி மக்களிடையே சென்று கிறிஸ்துவை அவர்களுக்குப் போதித்தனர். அவர்களின் துணிவைக் கண்ட மக்கள் வியப்புக் கொண்டனர்.

பரிசுத்த ஆவியானவர் அவர்களில் செயற்பட்டதே அப்போஸ்த லரின் திடத்துக்குக் காரணம் ஆகும். அவர் அவர்களைத் திடப்படுத் தினார். ஆவியானவரின் கொடைகளைப் பெற்ற அப்போஸ்தலர் போதிப்பதற்கு முன்வந்தனர், கிறிஸ்துவுக்குச் சான்று பகர்ந்தனர். அவருக்காக அல்லல் அனுபவிக்கத் தயாராய் இருந்தனர். அவருக் காக உயிரைத் துறக்கவும் மகிழ்ச்சியுடன் முன்வந்தனர். இறைவ னின் அழைப்புக்கு அப்போஸ்தலர் அளித்த பதில் அவர்களின் செயல்களினால் நன்கு புலப்படுகிறது. அப்போஸ்தலரை இயேசு தெரிந்தெடுத்தார். அப்பொழுதே அவர்கள் அழைப்பைப் பெற்றனர். அந்த அழைப்பை நன்கு புரிந்துகொண்டனர். ஆனால்...... அதற்கு விடை அளிக்கத் துணிவு இல்லாதிருந்தனர்; தைரியம் அற்றிருந்த னர்; உண்மைக்குச் சான்று கூறுவதற்கான உள்ளொளி இல்லாத வர்களாக இருந்தனர். இந்த வல்லமையைப் பரிசுத்த ஆவியே அவர் களுக்கு அருளினார்.

பரிசுத்த ஆவியானவர் கடவுள்; அவர் நாம் அன்பு செய்யும் கடவுள்; எம்மைப் புனிதர் ஆக்கும் கடவுள். உண்மைக்குச் சான்று பகர நாம் பெற்ற அழைப்புக்குத் துணிவுடன் விடை அளிக்க எம் மிடையே வரும் கடவுள்; இந்த ஆவியானவர் எங்களிலேயும் செயல் ஆற்றுகிறார். சிறப்பாக உறுதிப்பூசுதல் என்னும் திருவருட்சாதனத்

தால் நாம் திடம் என்னும் கொடையைப் பெறுகின்றோம்; அப்போது உண்மையான கிறிஸ்தவ வாழ்வுக்குச் சான்று பகரும் தகைமையைப் பெறுவோம். நாம் கிறிஸ்துவுக்கும் பரம அன்புக்கும் உண்மைக்கும் சான்று கூறுபவர்களாக விளங்கத் தூயஆவி எம்மில் செயலாற்றி, எம்மைத் தைரியப்படுத்துகிறார்.

கடவுள் திருமொழி:

ஆகவே நான் சொல்லுவது
ஆவியின் ஏவுதலின்படி நடவுங்கள்!
அப்போது ஊன் இயல்பின் இச்சைகளை நிறைவேற்றமாட்டீர்கள்
தேவ ஆவி விளைவிக்கும் பலன்களாவன:
அன்பு — மகிழ்ச்சி — அமைதி — பொறுமை — பரிவு
நன்னயம் — விசுவாசம் — சாந்தம் — தன்னடக்கம்.
இவையுள்ள இடத்தில் சட்டம் எத்தடையும் விதிப்பதற்கு
இடமில்லை. (கலாத்தியர் 5:16, 22—23):

செயல் திட்டம்:

1. உறுதிப்பூசுதலில் நாம் பெறும் சிறப்பான கொடைகள் எவை?
2. 'நீர் சிறுவனாக / சிறுமியாக இருந்தாலும் உண்மைக்குச் சான்று பகரலாம்' நீர் செய்யக்கூடிய 3 செயல்களை எழுதுக.

வாழ்க்கைக்கு:

பாடிப் பழகுவோம்:

பல்லவி

வானத்திலிருந்து வையகம் எழுந்து
புனித ஆவியே வருக!
ஞானத்தின் ஒளியை மனதினில் ஏற்கும்
மாசற்ற அன்பே வருக!

சரணம்

1. உயிருக்கு உயிரே வாழ்வுக்கு வாழ்வே
உண்மையின் வடிவே வருக!
பயிருக்கு மழையே பார்வைக்கு ஒளியே
பரமனின் அருளே வருக!

2. கீழ்த்திசை வானில் வாழ்த்திசை பாடும்
காலைக் கதிரோன் வருக!
ஆழ்கடல் மீதினில் அலையுடன் ஆடும்
ஆனந்த நிலையே வருக!

விடைதருக:

1. அப்போஸ்தலர் திடீரெனத் திடம் பெற்றமைக்குக் காரணம் என்ன?
2. எந்தத் திருவருட்சாதனத்தால் பரிசுத்த ஆவி சிறப்பான முறையில் செயலாற்றுகிறார்?

பாடம் 38

# இறைவனுடன் ஒன்றிணைந்த வாழ்வு வாழ நான் அழைக்கப்பட்டுள்ளேன்

**உடன்படிக்கை வாழ்வு**

*சீனாய் என்பது அராபியாவிலுள்ள ஒரு மலை. இந்த மலையில் ஓர் உடன்படிக்கை இடம் பெற்றதென்று வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் வாசிக்கிறோம்.*

இறைவனுக்கும் அவருடைய மக்களாகிய இஸ்ராயேலருக்கும் இடையில் இருந்த உடன்படிக்கை இடம்பெற்றது. இறைவன் மோயீசன் வழியாக அதை ஏற்படுத்தினார் இறைவனை ஏற்றுக்கொள்வதும், அதற்குத் தடையான அனைத்தையும் நீக்குவதும் இந்த உடன்படிக்கையின் நிபந்தனையாகும். இதன்படி இறைவனை உலகுக்கு அறிவிக்கும் பணியை இறைவன் இஸ்ராயேலருக்கு அளித்தார். இங்ஙனம் இஸ்ராயேல் மக்கள் இறைவனை உலகுக்கு அறிவிக்கும் பெரும் பணிக்கு அழைக்கப்பட்டனர். இந்த அழைப்புக்குத் தகச் செயற்படுதலே சீனாய் உடன்படிக்கையின் நிபந்தனையாக அமைந்தது.

இருபகுதியினர் செய்துகொள்ளும் ஒப்பந்தமே உடன்படிக்கையாகும். இருபகுதியினரும் ஒப்பந்தத்தால் இணைக்கப்படுகின்றனர். நாங்களும் கிறிஸ்துநாதர் வழியாக இறைவனுடன் ஓர் உடன்படிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளோம். இறைவனை எங்கள் வாழ்வில் பெறுதலே—ஏற்றுக்கொள்ளுதலே—இந்தப் புதிய உடன்படிக்கையின் நிபந்தனையாகும்; திருமுழுக்கு வழியாக இறைவனுடன் ஒன்றிக்கும் வாழ்வுக்கு நாம் அழைக்கப்பட்டுள்ளோம். இந்த அழைப்புக்கு ஏற்ப செயற்படுதல் எனது கடமையாகும்; அழைப்புக்கு ஏற்பச் செயற்படுபவன் தன் வாழ்வை மாற்றி அமைக்கவேண்டும், தன்னலத்தை அகற்றிப் பிறர் நலம் பேணும் சேவை வாழ்வைத் தழுவவேண்டும்: பாவத்தை வெறுத்துக் கிறிஸ்து காட்டிய வழியில் நடக்கவேண்டும்: கடவுளின் கட்டளைகள் உடன்படிக்கை வாழ்வின் வழியை எமக்குக் காட்டுகின்றன.

இந்த உடன்படிக்கையின் பலனாக நாம் தெய்வீக வாழ்வில் பங்கு கொள்ளும் சிறந்த கொடையைப் பெறுகின்றோம். எனவே இறைவனின் பிள்ளையென்ற தகுதிக்கேற்ப எனது வாழ்வைச் சீர்ப்படுத்துதல் எனது தலையாய கடமையாகும். வாழ்வைச் சீர்ப்படுத்தவிரும்பும்நான் இறைவனில் செயல் நிறைந்த நம்பிக்கை கொள்வேன்; இறை அன்புக்கேற்ப வாழ்ந்து சமுதாய நலனுக்காகப் பணிபுரிவேன்.

இயேசுவுடன் இணைந்து – ஒன்றித்து – வாழும் வாழ்வை மேற்கொள்ளுவேன். கிறிஸ்துவின் வழியிற் செல்பவர்களாகிய நாம் பொதுச் சகோதரத்துவ மக்கள் என்றும், சேவையின் மக்கள் என்றும் அறிவோம். இந்த உடன்படிக்கையைப் பொருள் நிறைந்ததாக்கும் வழிகளான ஆராதனையிலும், திருவழிபாட்டிலும் அதிகம் அதிகமாக ஈடுபடுவோம்.

கடவுள் திருமொழி:

'தம் ஒரே பேறுன மகனின் வழியாக
நாம் வாழ்வு பெறும் பொருட்டு
அவரை உலகுக்கு அனுப்பினர். இதனுல்
கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்படுத்தப்பட்டது
(அருளப்பர் 1 : 4–9)

செயல் திட்டம்:

1. சீனாய் உடன்படிக்கைபற்றி அறிந்தவற்றை எழுதுக.
2. திருமுழுக்கில் நாம் இறைவனுடன் என்ன உடன்படிக்கையை நிறைவேற்றுகிறோம்?

வாழ்க்கைக்கு:

செபம்

எல்லாம் வல்ல இறைவா!
''திருமுழுக்கின் வழியாக என்னை நீர் ஓர் அப்போஸ்தலனாக
உலக மக்களுக்கு ஊழியனாக,
பரிசுத்த ஆவியின் கருவியாக,
உம் திருமகனின் சகோதரனாக,
ஏழை எளியவரின் அன்பனாக வாழ அழைத்தீர்!
நான் எனது அழைப்பை உணர்ந்து வாழ,
உமது அருளைப் பொழிந்து,
என்னை வழி நடத்தியருளும்!
உமது திருவுளத்திலே எனது மகிழ்ச்சி அமைவதாக!
என்றென்றும் வாழும் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின்
வழியாக — ஆமென்

விடை தருக

1. பழைய ஏற்பாட்டில் இறைவன் யாருடன் உடன்படிக்கையை ஏற்படுத்தினர்?
2. திருமுழுக்கினுல் நாம் எதற்கு அழைக்கப்பட்டுள்ளோம்?

ஆய்வுப் பொருள் 6

பாடம் 39

# சமுதாய வாழ்வுக்கு அழைக்கப்பட்ட மனிதன் தன்னலம் நாடுதல் ஏன்?

''நல்ல குருவே! நான் முடிவில்லா வாழ்வு பெற என்ன செய்ய வேண்டும்?'' என மக்கள் தலைவன் ஒருவன் இயேசுவை வினவினான்.

''கற்பனைகளை நீ அறிவாய் அல்லவா? அவைகளின்படி நட'' என்று இயேசு அவனுக்கு விடை கூறினார்.

'நான் இளவயதிலிருந்து கற்பனைகளின்படி நடந்து வந்திருக்கிறேன்.'' என்று அவன் திரும்பவும் கூறினான்; இயேசு அதற்கு,

''நீ போய் உனக்குள்ளவற்றை விற்று ஏழைகளுக்குக் கொடு; பின்னர் வந்து என்னைப் பின்செல்'' என்று கூறினார்.

இதைக் கேட்ட மனிதன் துக்கத்துடன் திரும்பிப் போனான்.

இந்த மனிதனைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? முடிவில்லா வாழ்வு பெற அவன் விரும்பினான். அதை அடையும் வழியையும் அறிய முயற்சி செய்தான். அதற்குரிய வழியை இயேசு கூறினார். ஆனால், அவனோ தன் அழைப்பை விளங்கிக்கொள்ளவில்லை. அதை அவன் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே அவன் இயேசுவைப் பின்செல்லவில்லை. அவன் செல்வந்தனாய் இருந்தான். தன் செல்வத்தில் பற்றுக்கொண்டிருந்தான்; செல்வத்தைத் தனக்காக உபயோகிப்பதே அவனது எண்ணமாக இருந்தது. ஆனால் அது தவறு என இயேசு அவனுக்குக் காட்டினார். அவன் தன் உடைமைகள் யாவையும் விற்று ஏழைகளுக்குக் கொடுக்கவேண்டும் என்பதே இயேசுவின் அறிவுரையாகும். வேறுவிதமாகக் கூறின், இது தன்னலமற்ற வாழ்வு வாழும்படி அவனுக்கு விடுக்கப்பட்ட ஓர் அழைப்பாகும். ஆனால் அவன் தான் பெற்ற அழைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை; அதைப் புறக்கணிக்கிறான்.

நாமும் பலமுறைகளில் தன்னலத்துடன் வாழ்கிறோம். 'எமது உடைமைகள் எமக்கு மட்டுமே உரியவை' என்ற எண்ணத்துடன் இருக்கிறோம். பிறர் நலனுக்காக அவை பயன்பட நாம் விரும்புவதில்லை. இங்ஙனம் வாழுதல் தவறு; தன்னலத்துடன் வாழ்பவர் குற்றவாளிகள்; முடிவில்லா வாழ்வை நாம் மாத்திரம் அடைந்தாற் போதும் என்ற மனப்பான்மை உடையவர்களையும் நாம் காண்கிறோம். இதுவும் தன்னலத்தின் அடையாளமாகும்.

இறைவனின் அழைப்பைப் புறக்கணிப்பவன் தன்னலம் உள்ளவனாக வாழ்வான், பொறுப்பை ஏற்றுக்கொள்ளவும் மறுப்பான்;

நாங்கள் கிறிஸ்தவர்களாயிருந்தும் வேதனை துன்பங்களை ஏற்க விரும்புவதில்லை; தடைகளை எதிர்த்துப் போராட விரும்புவதில்லை. பிறருக்குப் பணி செய்து வாழ விரும்புவதில்லை. இங்ஙனம் நாங்கள் வாழ்ந்து வந்தால், இன்றைய பாடத்தில் படித்த மக்கள் தலைவன் போல இறைவனின் அழைப்பை ஏற்க மறுக்கிறோம்; இயேசுவைப் புறக்கணிக்கிறோம்; கிறிஸ்தவர்களாக வாழ விரும்பாது தன்னலம் உள்ளவர்களாகிறோம்.

சமூகமாக வாழ்வதற்காக என்றே இறைவன் எங்களைப் படைத்தார். நாங்கள் அவரைப் பிறருக்கு அறியச் செய்யவேண்டும் என்பது இறைவனின் சித்தமாகும். இறைவனையும் சமூகத்தையும் ஒன்றிணைக்கும் இணைப்பாளர்களாக விளங்கும்படி இறைவன் எம்மை அழைக்கிறார், மேலாக, தியாகம் செறிந்த வாழ்க்கையின் வழியாக ஒருவர் ஒருவருக்கு உதவிவேண்டும், இதுவே கிறிஸ்தவனுக்கு உரிய அழைப்பு ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் உரிய பொறுப்பு இதுவே!

கடவுள் திருமொழி:

*''உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்!*
*பணக்காரன் விண்ணரசில் நுழைவது அரிது.*
*மீண்டும் உங்களுக்குச் சொல்லுகிறேன்!*
*பணக்காரன் விண்ணரசில் நுழைவதை விட*
*ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது!''*

*(மத்தேயு 19 : 23—24);*

செயல் நிட்டம்:

1. கிறிஸ்துவைப் பின்பற்ற நீர் செய்யும் மூன்று காரியங்களைத் தருக.
2. சமூகத்தை இறைவனிடம் வழிநடத்த நீர் செய்யக்கூடிய மூன்று பணிகள் எழுதுக.

வாழ்க்கைக்கு :

*உன் இதயம் ஒரு பள்ளிக்கூடம்—அதில்*
*என் இதயம் ஒரு மாணாக்கன் இயேசுவே!*

1. *தாழ்ச்சி என்பதே முதல் பாடம்*
   *அதில் வளர்ச்சி காண்பதே மனப்பாடம்*
   *சாந்தம் கொள்வதே வீட்டுப்பாடம்*
   *அதில் சாந்தி காண்பதே வெற்றியாகும்!*
2. *அன்பு என்பதே எழுத்தாகும்*
   *பிறர் அன்புசெய்வதே சொல்லாகும்!*
   *பகைமை மறப்பதே பொருளாகும்*
   *இறைபாசம் வளர்ப்பதே நயமாகும்!*

விடை தருக:

1. இறைவனிடம் இருந்து நாம் பெறும் அழைப்பு எது?
2. கிறிஸ்தவ அழைப்பைத் தள்ளிவிடும் 5 சந்தர்ப்பங்களை எழுதுக.

———

ஆய்வுப் பொருள் 6

## பாடம் 40

# சமுதாயமும் நான் வாழும் முறையும் (1)

கட்டளைகள்

நாம் இவ்வுலகில் வாழ்கிறோம், எம் நாளாந்த வாழ்க்கைக்குப் பல பொருள்கள் தேவைப்படுகின்றன. ஆனால் இத்தேவைகள் அனைத்தையும் எம் சொந்த முயற்சியால் மட்டும் பெறமுடியாது. உண்ண உணவு, உடுக்க உடை, வாழ்வதற்கு வதிவிடம், பிறருடன் தொடர்பு கொள்வதற்கான வழிவகைகள் முதலாய தேவைகள் எமக்குள, இவற்றை நாம் பெறப் பலரின் உழைப்பும் வேண்டப்படுகிறது. இங்ஙனம் பலரின் உதவி தேவைப்படும் சமுதாயத்தில் நாம் வாழ்கிறோம். பரஸ்பர கூட்டுறவும் ஒத்துழைப்பும் சமூகத்தில் வாழும் எமக்குத் தேவைப்படுகின்றன.

பள்ளியில் இருந்து வீடு சென்றதும் அம்மாவிடம் உணவு பெற்று உண்கிறாய்; அப்பாவிடம் உரிமையுடன் பணம் கேட்கிறாய்; எனது வீடு என்று மனம் மகிழ்கிறாய். இவைபோன்றவை உனது உரிமைகள். இவ்வுலகில் நம் எல்லோருக்கும் சில உரிமைகள் உண்டு. நாம் இந்த உரிமைகளை அனுபவித்து வாழ்கிறோம். உனக்குரிய வேறு உரிமைகளைக் கூற முடியுமா?

ஆனால் உரிமைகளை அனுபவிக்கும் நாம் மேற்கொள்ளவேண்டிய சில பொறுப்புக்களும் உண்டு என்பதை நினைவில் கொள்ளவேண்டும்: அம்மாவுக்கு உதவிசெய்தல், அப்பா சொற்படி நடத்தல், வீட்டைச் சுத்தமாக வைத்திருத்தல் போன்றன உனது பொறுப்புக்கள் ஆகும். ஆற்றவேண்டிய பொறுப்புக்கள் கடமைகள் எனப்படுகின்றன. உனக்குரிய கடமைகள் சிலவற்றைக் கூற முடியுமா? எமது உரிமைகளைப் பாதுகாக்க விரும்புகிறோம். அப்படிச் செய்வது சரி, அதேபோல எமது கடமைகளையும் செய்யவேண்டும். அப்போதுதான் சமுதாயம் முன்னேறும்; சமுதாய நலனும் பேணப்படும்.

இவ்வுலகில் 'எப்படியும் வாழலாம்' என்பதல்ல, 'இப்படித்தான் வாழவேண்டும்' என்ற ஒரு நியதி உண்டு. இதுவே எமது வாழ்க்கை நெறியாகும். இந்த வாழ்க்கை நெறி பிறருக்குத் தீங்கு விளைவிக்காததாக அமையவேண்டும். நமக்கு மட்டும் நன்மை பயக்கும் வாழ்வு நீதியானதல்ல.

சமுதாயத்துடன் இணைந்து வாழக்கூடிய தன்மைகளுடையவனாக மனிதனை இறைவன் படைத்தார். சமூகத்தில் வாழும்படி ஒவ்வொருவரையும் கடவுள் அழைக்கிறார். ஒவ்வொருவரும் சமுதாயத்துக்கு உதவவேண்டும்; ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்ற கடமையை அந்த அழைத்தலால் பெறுகிறோம். இதுவே எமது பொறுப்பாகும்.

தனது உடைமைகளைச் சமுதாய நலனுக்காகப் பயன்படுத்தக் கடமைப்பட்டவன் மனிதன். தனது எடுத்துக்காட்டான வாழ்வினால் மற்றவர்களை நன்மைத்தனத்துக்கு வழி நடத்தவும் அவனுக்குக் கடமையுண்டு.

இந்த அழைப்பு உனக்கும், எனக்கும், எல்லாக் கிறிஸ்தவனுக்கும் உரியது. 'என்னால் என்ன செய்யமுடியும்?' என்ற மனப்போக்குள்ளவர்களாக எவரும் இருக்கக்கூடாது. இறைவனை உலகறியச் செய்வது ஒவ்வொரு கிறிஸ்தவனதும் கடமை, கிறிஸ்தவனின் வாழ்வு இறைவன் மனிதனில் கொண்டுள்ள அன்பைப் பிறர் காண்பதாக அமையவேண்டும், முழு மனித குலத்துக்காகக் கிறிஸ்து பெற்றுத் தந்த மீட்பை உலகம் அடைந்துகொள்வதற்குக் கடினமாக உழைத்தல் அவசியம், உத்தானமான கிறிஸ்துவுக்குச் சான்று பகருதல் கிறிஸ்தவன் ஒவ்வொருவனதும் கடமையாகும்.

இங்ஙனம் நாம் வாழ இறைவன் அளித்த கட்டளைகள் எமக்கு உதவுகின்றன. கட்டளைகளுக்கு அமைதல் அடிமைத்தனம் அன்று எமது சுதந்திரத்தைப் பறிப்பதற்காக அவை அளிக்கப்படவில்லை. மாறாக கட்டளைகள் எங்கள் சுதந்திரத்தையும், முழுச் சமுதாயத்தின் சுதந்திரத்தையும் பாதுகாக்கின்றன. நாமும், உலக மாந்தர் அனைவரும் மீட்புப் பெறுவதற்காகக் கடவுள் இக்கட்டளைகளைக் கொடுத்திருக்கிறார்.

கடவுள் திருமொழி:

*இயேசு அவனிடம் — ''கடவுளாகிய ஆண்டவருக்கு*
*முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும், முழுமனத்தோடும்*
*அன்பு செய்வாயாக!*
*இதுவே எல்லாவற்றிலும் பெரிய முதன்மையான கட்டளை*
*இரண்டாவது இதை ஒத்ததே!*
*உன்மீது நீ அன்பு காட்டுவதுபோல்,*
*உன் அயலான் மீதும் அன்பு காட்டுவாயாக'' என்றார்.*
*(மத்தேயு 22:37—39).*

செயல் திட்டம்:

1. ''சமுதாயத்தில் வாழும் எமக்குப் பரஸ்பர உதவி தேவை'' சுருக்கமாக விளக்குக.
2. திருட்டுத்தனத்தைத் தண்டனையால் திருத்துவது நன்று; திருட்டுத்தனத்தை அன்பினால் திருத்துவது நன்று — சொற்போர் நடத்துக.

வாழ்க்கைக்கு:

இறைவன் அருளிய கட்டளைகளின்படி நடக்கிறேனா என்று ஆத்தும சோதனை செய்வேன்.

விடை தருக:

1. சமுதாய விருத்தி எவற்றில் தங்கியுள்ளது?
2. பத்துக் கட்டளைகள் எதற்காக?

ஆய்வுப் பொருள் 6

பாடம் 41

# சமுதாயமும் நான் வாழும் முறையும் (2)

நான்காம் கட்டளை

நான் ஒரு சமுதாயத்தில் பிறந்து வாழ்கிறேன், எனது அப்பா, அம்மா, நான்...... நாங்கள் சமுதாயத்தின் சிறு பகுதியாகிய ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவேளை எனக்குச் சகோதர சகோதரிகள் பிறந்ததும் சமுதாயத்தின் இச் சிறு கூறுன குடும்பம் விரிவடையக்கூடும், ஒரு கிராமம். ஒரு பட்டினம், ஏன் ஒரு பெரிய நாடே இவ்வித சிறிய குடும்பங்களினுல் ஆனவை. நான் கல்வி பயிலும் பள்ளியும் ஒரு சமுதாயம். என்னைப்போன்ற பலர் சமுதாயத்துக்குச் சேர்ந்தவர்கள். சமுதாயத்துக்குச் சேர்ந்தவர்கள் அதன் உறுப்பினர் எனப்படுகின்றனர். உறுப்பினர் அனைவரும் ஒரேவிதமானவர் அல்லர். பள்ளியில் உள்ள ஒன்றியங்கள், சங்கங்கள் போன்ற அமைப்புகளைப்பற்றிச் சிந்தித்தால் இவ்வுண்மை தெளிவாகும். இவ்வமைப்புகள் எல்லாம் உறுப்பினரைக் கொண்டுள்ளன, ஆனுல் இவை நன்முறையில் செயற்பட அலுவலர் பலர் இருக்க வேண்டும். தலைவர், செயலர், பொருளர் போன்ருேர் அலுவலர் எனப்படுகின்றனர். சங்கங்கள் சிறிதாயினும் பெரிதாயினும் அலுவலர் இன்றி அவை இயங்கமாட்டா.

குடும்பத்தின் நலனுக்காகத் தாயும், தந்தையும் கடமை உணர்ந்து உழைக்கின்றனர். அவர்கள் அயராது உழைக்கின்றனர். இதே போன்று தலைவர்களும், ஆளுநர்களும் தம் கிராமத்திற்காகவோ, நகருக்காகவோ, அன்றித் தம் நாட்டுக்காகவோ சேவைசெய்ய முன் வருகின்றனர். இவர்கள் எல்லாரும் இறைவனின் பிரதிநிதிகள். பரிபாலித்தல், அதாவது நிர்வகித்தல் இவர்களது அழைப்பாகும். இவர்கள் சேவைக்காகத் தம்மை அர்ப்பணிக்கின்றனர் ; சமுதாய நலனுக்காக ஊக்கமாக உழைக்கின்றனர். இவர்கள் படைப்புப் பணியில் சமுதாயம் பங்குகொள்வதற்கு வழி நடத்துகின்றனர். சமுதாயத்துடன் ஒன்றித்து, உலக முன்னேற்றத்துக்காக, உலக நன்மைக்காகச் செயல் ஆற்றுகின்றனர்.

நானும் சமுதாயத்தின் உறுப்பினன். எனவே எனக்கும் உன்னதமான கடமை உண்டு. அதாவது நான் ஆற்றவேண்டிய பங்கை உணர்ந்து, திறமையுடன் செயற்பட வேண்டும். சமுதாயத்தில் வாழும் பொறுப்புணர்ச்சி உள்ளோர் எனது பங்கை அறிந்துகொள்ள

வும், எனது கடமையைச் செய்யவும் எனக்குப் பயிற்சி அளிக்கின்றனர். எனவே எனது தாய் தந்தையர்க்கும், ஆசிரியர்களுக்கும், நாட்டின் ஆளுநர்களுக்கும் அமைந்து நடத்தல் எனது கடமையாகும். என் தகுதிக்கேற்ப அவர்களுக்கு உதவவேண்டும். இது தவிர, எனது முன்னேற்றத்திற்காக உழைத்து, இறைவனின் திருச் சித்தத்தை நிறைவேற்றும் இவர்களுக்கு மரியாதை செய்யும்போது இறைவனையே மரியாதை செய்கிறேன். பெரியோருக்குக் காட்டும் நன்றியறிதல் இறைவனுக்கு நன்றி காட்டுவதற்குச் சரியாகும். அவர்களுக்கு உதவும்போது இறைவனின் படைப்பில் பங்குகொள்கிறேன். தன்னலம் இன்றி அவர்களுக்கு உதவும்போது பெரும் சேவை செய்கிறேன்.

கடவுள் திருமொழி :

மனைவியரே உங்கள் கணவருக்குப் பணிந்து நடவுங்கள்!
கணவர்களே உங்கள் மனைவியர்க்கு அன்பு காட்டுங்கள்!
பிள்ளைகளே எல்லாவற்றிலும் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்திருங்கள்!
இதுவே ஆண்டவருக்கு உகந்தது

(கொலோசேயர் 3:18–20);

செயல் திட்டம் :

1. உமது வகுப்பின் தலைமை மாணவனாக/மாணவியாக நியமிக்கப்பட்டால் எவ்விதம் இறைவனின் பிள்ளையாக நடந்துகொள்வீர்?
2. உம்மைத்தவிரக் குடும்ப உறுப்பினர் அனைவருக்கும் நோய் ஏற்பட்டால் இறைவனின் பிள்ளையாகிய நீர் என்ன செய்வீர்?

வாழ்க்கைக்கு :

நான் வீடு சென்றதும் பெற்றோர் மனம் மகிழத்தக்க அன்புச் செயல்களைச் செய்வேன்.

விடை தருக :

1. நான்காம் கட்டளையின்படி எமது பெற்றோருக்கு மாத்திரம் அமைந்து நடந்தால் போதுமா?
2. இவர்கள் யாருடைய பிரதிநிதிகள் ஆக இருக்கின்றனர்?

---

## பாடம் 42

# சமுதாயமும் நான் வாழும் முறையும் (3)

### ஐந்தாம் கட்டளை

கிறிஸ்து பலஸ்தீனுவில் வாழ்ந்த காலத்தில் வியத்தகு செயல்கள் பலவற்றைச் செய்தார். நற்செய்தி ஏடுகளில் இவை கூறப்பட்டுள்ளன. அற்புதமான முறையில் உணவு பலகச்செய்து, பசியால் வாடிய மக்களுக்கு வழங்கினுர். தீராத நோய்களைக் குணமாக்கினுர், இறந்தோர்க்கு உயிரளித்தார். இவ்வருஞ் செயல்களால் இயேசு மனித உயிரைப் பாதுகாத்தார் என்பது புலனுகிறது. இயேசு மனித உயிரை மதித்து, அதைப் பேணிப் பாதுகாத்து, எனக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கினுர்.

இவ்வுலகம் எமக்காக இறைவனுல் படைக்கப்பட்டது; நாம் அதைப் பாதுகாத்து முன்னேற்றுவதற்கு வேண்டிய வழிவகைகளையும் காட்டியுள்ளார். நாம் உயிர் வாழ்வதற்கு (இருத்தலுக்கு)த் தேவையான அனைத்தையும் அவர் எமக்குத் தந்துள்ளார். எமது உயிர் இறைவனுக்குச் சொந்தம். எனவே நாம் இறைவனுக்காக வாழவேண்டும். படைப்பின் விருத்திக்கு உழைப்பதற்காக நாம் வாழ்தல் எமது மேலான கடனுகின்றது. மனிதனின் நலனுக்காகவும், அவனைப் பாதுகாக்கவும், அவனது வாழ்வுக்கு வேண்டியவற்றை வழங்கவுமே நாம் வாழவேண்டும். இதனுல் நாம் ஒவ்வொருவரும் நமது உயிரைப் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளோம். அவ்வாறே பிறரின் உயிரைப் பாதுகாத்தலும் எமது கடமையாகும், இதுவே எமக்குரிய பொது அழைத்தல் ஆகும்.

பிறரின் உயிரைப் பாதுகாக்கும் ஒருவன் உயிர் வாழத் தேவையானவற்றை அவர்களுக்கு வழங்காமல் இருக்கமுடியாது. இதற்கு நாம் கடினமாக உழைக்கவேண்டும். நெற்றி வியர்வை நிலத்தில் விழ, பாடுபட்டு உழைக்கவென்று படைக்கப்பட்டவர்கள் நாம். உழைப்பு மனித இயல்புடன் இரண்டறக் கலந்த பண்பு. எனவே காடு திருத்திக் கழனியாக்கி, ஆலை அமைத்துப் பல பொருள் உற்பத்தி செய்து, கடல்படு திரவியத்தைக் கொணர்ந்து, எம் நாட்டின் உற்பத்தியை அதிகரிப்போம். இதனுல் நாடு வளம்பெற்று, மக்கள் அதிக உணவு பெறுவர்; இதுவன்றிப் பிணியாளர் பிணிதீர நல்மருந்துகள் கிடைக்கும்; மக்களுக்கான பிற தேவைகளும் கிட்டும். உமது

உழைப்பினால் உயிர்களைப் பாதுகாக்க முடியும் என்பது புரிகிறதுதல்லவா?

இன்னொன்றையும் நினைவிற்கொள்வோம். நீர் வளர்ந்த பின்னர் சமுதாயத்துக்குச் சேவை செய்வதற்கு நல்லதொரு தொழில் உமக்குக் கிடைத்தல் அவசியம். அதற்கு நன்கு கற்கவேண்டும், பொருத்தமான தொழிலில் அமர்ந்தால் இறைவன் உமக்கு அளித்த திறமைகளை இன்னும் வளர்க்கலாம். மனித நலனுக்காகவும், உலக நன்மைக்காகவும் இத்திறமைகளை நெறிப்படுத்தலாம். இதுவன்றி, இளவயதிலிருந்தே எமது சுகத்தைப் பேணி நடக்கவும்வேண்டும். இதற்காக விளையாட்டுக்களிலும் உடற்பயிற்சிகளிலும் ஈடுபடுதல் அவசியம். கடினமாக உழைப்பதற்கு நாம் சிறுவயதிலிருந்தே பயிலவேண்டும். புகைத்தலும் மதுபானம் அருந்துதலும் எமது சுகத்துக்கு ஊறுவிளைவிக்கும். இத்தீய பழக்கங்கள் இன்றி இருப்பின் சுகமாக வாழ்வோம்:

**கடவுள் திருமொழி :**

*''தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு யாரிடமும் இல்லை''.*

(அருளப்பர் 15:13).

**செயல் திட்டம்:**

1. குருடன் ஒருவன் வீதியைக் கடந்து செல்லும் வேளையில் கிறிஸ்தவனை உமது கடமை எதுவென்று கூறுக.
2. பிறர் வாழ்வைப் பேணுவதற்காக உழைத்த ஐந்து பெரியார்களின் பெயரைக் கூறுக, அவர்கள் ஆற்றிய தொண்டைச் சுருக்கமாக விளக்குக.

**வாழ்க்கைக்கு:**

1. உயிரின் மாண்பை அறிந்து, உயிருக்கு ஊறு விளைவிக்கும் செயல்களில் ஈடுபடாது வாழ இறைவனை வேண்டுவேன்.
2. கொலை, சண்டை, குடிவெறி, தற்கொலை ...போன்ற உயிரை அழிக்கும் செயல்கள் நாட்டில் நடைபெறாது இருக்க இறைவனை வேண்டுவேன்.

**விடை தருக:**

1. எமது பொது அழைத்தல் என்ன?
2. பிறரின் உயிரை ஏன் பாதுகாக்கவேண்டும்?

## பாடம் 43

# சமுதாயமும் நான் வாழும் முறையும் [4]

**ஆறும் ஒன்பதாம் கட்டளைகள்**

ஒருமுறை இயேசு மக்களுக்குப் போதித்துக்கொண்டிருந்தார். அவர் அங்கிருந்த ஒரு சிறுபிள்ளையைச் சுட்டிக்காட்டி, சிறந்த ஒரு பாடத்தைக் கற்பித்தார். இப்பாடம் வளர்ந்தோர்க்கு மாத்திர மன்று, சிறுவர்களாகிய எமக்கும் பயனுடையது. ''நாம் சிறுவர்களைப்போல் இருந்தால் ஒழிய, விண்ணக அரசில் நுழைய முடியாது'' என இயேசு மொழிந்தார். இதனால் சிறுவர் தூய்மை உள்ளவர் என இயேசு காட்டினார், நாம் தூயவராகாவிடின் விண்ணக அரசில் பெறும் இன்பத்தை அடையமுடியாது என அவர் விளக்க விரும்பினார்.

சிறுவர் கபடம் இல்லாதவர் என்பதை நாம் அறிவோம். இவர்கள் பிறருக்குத் தீங்கு இழைப்பதில்லை. என்றுமே பொறாமை கொள்வதில்லை. எவரைக் கண்டாலும் இன்முகம் காட்டுவர்: எனவேதான் அவர்களை விரும்பி அன்புசெய்கிறோம். அவர்களது வாழ்வு தூயது; எண்ணங்கள் நல்லவை; பாவத்தை அவர்கள் விரும்புவதில்லை; நல்லவற்றைச் செய்வதே அவர்களின் இயல்பு: சிறுவர் எதிலும் நல்லவற்றைக் காண ஆசிப்பவர். இவ்வித குணங்களை உடையவரே இறைவனின் அன்பைக் கவருவர், இவர்களே முடிவில்லா வாழ்வும் பெறுவர்.

இளவயதிலிருந்து நாம் தூயவராய் இருப்பதையே இறைவனும் விரும்புகிறார். நன்மையானவற்றையே நாம் சிந்திக்க வேண்டும், எமது இரகசிய எண்ணங்களையும் இறைவன் அறிகிறார்: இறைவனை அன்புசெய்ய விரும்பினால் நன்மையானவற்றைச் சிந்திப்போம்; நல்லதைப் பேசுவோம்: எம்பேச்சு மற்றவர்களுக்கு மகிழ்ச்சிதருவதாக இருக்கவேண்டும்: எமது வார்த்தைகள் இறைமக்களுக்கு ஏற்றதாக அமையவேண்டும்; நாம் நற்பண்புகளுடன் நடக்கவேண்டும்; அரைகுறை ஆடை அணிந்து அலங்கோலமாக இராது, மரியாதையான ஆடைகளை அணிய வேண்டும்; பிறரை மதித்து நடக்கவேண்டும்: சுருங்கக் கூறின் எமது பேச்சும் செயலும் இறைமக்கள் என்பதற்குச் சான்று பகர்வதாக அமையவேண்டும்.

தொட்டிலிற் பழக்கம் சுடுகாடுவரைக்கும் செல்லும், எனவே நாம் சிறுவயது முதல் தூய்மையாக வாழ்வதற்குப் பயிலவேண்டும்.

இதற்கு எமது பெற்றோர், ஆசிரியர், பெரியோர் துணையை நாட வேண்டும்; நல்ல வழி காட்டும் நூல்களை வாசிக்கவேண்டும்; நல்லுரை களைக் கேட்கவேண்டும்; ஒழுக்கத்தைப் பாழ்படுத்தாத விளையாட் டுக்களிலும், கேளிக்கைகளிலும் பங்குகொள்ளவேண்டும். பெற்றோர் ஆசிரியர், பெரியோர் என்போர் நாம் வாழ்வாங்கு வாழ உதவி செய்ய ஆர்வம் கொண்டவர்கள். அவர் சொற்கேட்டு நடப்பது சிறுவர்களாகிய நமக்கு நன்மை பயக்கும்.

கடவுள் திருமொழி:

''தூய உள்ளத்தோர் பேறு பெற்றோர்!
ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்''

(மத்தேயு 5 : 8)

செயல் திட்டம்:

1. திருமறை நூலில் 'இயேசு சிறுவர்களைக் காட்டிப் படிப்பித்த பாடத்தை' வாசித்துச் சுருக்கமாக எழுதுக.
2. ''சொதோம் கொமரு நகர வாசிகள் கற்பொழுக்கத்தில் தவறிய படியால் இறைவன் கோபங்கொண்டு அவர்களைத் தண்டித்தார் என்ற வரலாற்றைப் பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. அந்த நிகழ்ச்சியை எழுதுக.

வாழ்க்கைக்கு:

1, இன்றிலிருந்து சிந்தனை, சொல், செயல் மூன்றிலும் தூய்மை உள் ளோனாய் இருப்பேன் என்று உறுதி கூறிச் சிறு செபம் ஆக்குக.
2. கற்பொழுக்கம் தவறி நடக்கும் மக்கள் திருந்தி நடக்கவேண்டும் என்ற கருத்துடன் இன்று சில தவமுயற்சிகள் செய்வேன்,

விடை தருக:

1. சிறுவர்களை ஏன் எல்லோரும் அன்பு செய்கின்றனர்?
2. கற்பொழுக்கத்தைப் பற்றிய அறிவுரையை யாரிடம் பெற லாம்.

———

ஆய்வுப் பொருள் 6

## பாடம் 44

# சமுதாயமும் நான் வாழும் முறையும் (5)

ஏழாம் பத்தாம் கட்டளைகள்

இறைவன் உலகைப் படைத்து, மனிதனிடம் ஒப்படைத்தார் என்பதை நாம் அறிவோம். மனிதன் பாடுபட்டு உழைத்து உலகை முன்னேற்றவேண்டும் என்றே அவ்வாறு செய்தார். தனது உழைப்பின் பயனை அனுபவிக்கும் உரிமை உடையவன் மனிதன். இதனால் உழைப்பது அடிமைத்தனம் அன்று என்பதை விளங்குகிறேன். உழைப்பின் பயனை அனுபவிக்கும் உரிமை மனிதன் இறைவனிடம் இருந்து பெற்ற சிறப்பான ஒரு கொடையாகும்.

வாழும் உரிமையை ஒவ்வொரு மனிதனுக்கும் இறைவன் அளித்துள்ளார். அவனது வாழ்க்கைத் தேவைகளையும் அவர் வழங்கியுள்ளார். எனவே ஒவ்வொருவரும் தத்தமக்குரிய உடைமைகளை அனுபவிக்கும் உரிமை உடையவர்.

ஆனால் .. ... ... ... ...

தனிப்பட்டோரின் உடைமைகள் அவரவர் தேவைக்கேற்ற அளவில் அமைந்திருக்க வேண்டும். இதுவே இறைவனின் திருவுள்ளம் ஆதலால் மனிதன் அளவுக்கு மிஞ்சிய செல்வத்தையும் சொத்துக்களையும் சேர்த்து வைத்தல் பிழை: இது இறைவனின் திருவுள்ளம் அன்று. நாம் எப்பொழுதும் இறைவனின் திருவுள்ளத்தைப் புரிந்து கொள்வதில்லை.

இதனால் ... ... ...

– நாம் எமது தேவைக்கும் அதிகமாகச் சேர்த்து வைக்க விரும்புகிறோம். இங்ஙனம் நாம் செல்வத்துக்கு அடிமை ஆளாகிறோம்.

– பணத்துக்கு அடிமையானவன் பிறரின் உரிமைகளைக் கவனிக்க மாட்டான்;

– நல்வழியால் அன்றி, எவ்வழியாலாவது பணந்தேடத் தூண்டப்படுகிறோம்;

– செல்வந்தேட நாம் பாடுபட்டு உழைக்கவேண்டும் என்பதையே மறந்துவிடுகிறோம்.

—நேர்மை, நியாயம் இன்றிக் குறுக்கு வழிகளால் செல்வத்தைக் குவிப்பதற்கு இயலுமானதெல்லாம் செய்கிறோம்.

—படிப்படியாக நாம் சமூதாயத் துரோகிகளாய் ஆகிவிடுகிறோம். இத்தகைய வழிகளால் எமது உடன்படிக்கை வாழ்வுக்கேற்ற வகையில் புதிய சமுதாயத்தைக் கட்டி எழுப்ப முடியாது.

நாம் எமது செல்வத்தையும், சொத்துக்களையும் பாதுகாக்க விரும்புவது இயல்பே. ஆனால் இறைவனது திரு உள்ளத்தின்படி நடக்க விரும்பினால்,

—பிறரின் சொத்துக்களையும் மதித்து நடப்போம்,
இறைவனுக்கு உகந்த முறையில் சமுதாயத்திற்குச் சேவை செய்ய விரும்பினால் இயற்கை வளங்களை முன்னேற்றச் சிரமப் பட்டு உழைப்போம்.

—பிறரின் உழைப்பின் பயனை அபகரிக்கும் புல்லுருவிகளாக மாட்டோம்.

—சோம்பல் இன்றி உழைப்போம்.

—நமது சௌகரியங்களுக்காகக் கடினமாக உழைக்கும் அதே வேளையில், பிறர் பாடுபட்டுத் தேடிய சொத்துக்களை அநீதியான முறையில் அபகரிக்கும் தீய எண்ணத்துக்கு, இடம் கொடாது வாழ்வோம்.

**கடவுள் திருமொழி:**

இவ்வுலக செல்வங்களை உடையவன் ஒருவன்
தன் சகோதரன் வறுமை உற்றிருப்பதைக் கண்டு,
மனம் இரங்காவிடின், அவனுள் கடவுள் அன்பு
நிலைத்திருக்கிற தென்று எவ்வாறு சொல்லமுடியும்?
(1 அருளப்பர் 3 17)

செயல் திட்டம்:

1. புத்தகம் இல்லாததால் உமது வகுப்பிலுள்ள மாணவன் ஒருவன் பாடசாலைக்கு வருவதில்லை. வகுப்பு மாணவர் ஒன்றுசேர்ந்து அவனுக்கு எவ்விதம் உதவி செய்யலாம்?

2. குடும்பத்தினர் ஒன்றாக உணவு அருந்துவதில் உள்ள கிறிஸ்தவ மதிப்பீடுகள் பற்றிக் கலந்து உரையாடுக.

வாழ்க்கைக்கு:

1. உழைப் பில்லாமல் உயர்வில்லை
உழைப்பே நாட்டின் பெருஞ் செல்வம்
உழைத் துண்ணுது வாழ்பவரை
உலகம் தூற்றும் மதியாது.

2. பாடு பட்டுத் தேடாமல்
பணத்தைக் குறுக்கு வழிகளிலே
தேடிக் குவிக்க முயல்பவர்கள்
தேசத்துக்குத் துரோகிகளாம்.

3. தேவைக்கதிகம் செல்வத்தைத்
திரட்டிப் புதைத்தல் களவாகும்
ஆசை வைத்தோர் செல்வத்தின்
அடிமைகளாகி வாழ்ந்திடுவார்.

4. அடுத்துக் கெடுத்துப் பிழைக்காமல்
அயலார் சொத்தைப் பறிக்காமல்
கொடுத்து வாழும் உள்ளந்தான்
கொள்ளும் அழியாப் பேரின்பம்

'யாழ். ஜெயம்'

விடை தருக:

1. செல்வத்துக்கு அடிமைப்படும் ஒருவன் எப்படி வாழ்வான் என்று எழுதுக.

2. இயற்கை வளங்களை விருத்தி செய்ய நாம் ஏன் உழைக்க வேண்டும்?

---

பாடம் 45

# சமுதாயமும் நான் வாழும் முறையும் (6)

எட்டாம் கட்டளை

"உண்மை பேசு"
"உண்மை வெல்லும்
"உண்மைக்கு அழிவில்லை"

இவை போன்ற உண்மையைப் பற்றித் தமிழில் உள்ள வேறு பழமொழிகளைக் கூறுங்கள்.... ... பொய்யும் புழுகும் இல்லாதவர் எப்பொழுதும் உண்மை பேசுவர். என்ன துன்பம் வந்தாலும் உண்மை கூற நாம் அஞ்சக்கூடாது. இதுபற்றிச் சிறிது சிந்திப்போம்:

"நானே வழியும், உண்மையும், வாழ்வும்" என்று இயேசு கூறினார். இதனால் உண்மையே இறைவன் என்பது தெளிவாகிறது. நாம் எவ்வளவுக்கு உண்மை பேசுகிறோமோ, அவ்வளவுக்கு இறைவனை நெருங்கிச் செல்கிறோம். உண்மை உள்ளவர்களாய் இருக்க நாம் முயற்சி எடுக்கும் அளவுக்கு ஏற்ப இறைவனின் பிள்ளைகள் ஆகின்றோம். இது மட்டும் அன்று. உண்மை முடிவில்லா வாழ்வுக்கு எம்மை அழைத்துச் செல்லும் வழியாகும். உண்மைக்குச் சான்று பகரத் தவறும்போது நாம் கிறிஸ்தவர்களாய் இருக்கத் தவறுகிறோம்: இயேசு உண்மைக்குச் சான்று பகர்ந்து வாழ்ந்தார். தமது எடுத்துகாட்டான வாழ்வினால் உண்மைக்குச் சான்றுபகரும் முறையைக் காட்டினார். எனவே உண்மை என்பது, நாம் விலக்கிவிட முடியாது கைக்கொள்ளவேண்டிய ஒரு புண்ணியம் என்பது விளங்குகிறது. உண்மை சமுதாய முன்னேற்றப் பாதையில் நம்மை வழிநடத்திச் செல்லும் ஓர் உன்னத பண்பாகும்.

நம் எல்லோரிடமும் குறைபாடுகள் உள. எமது குறைபாடுகளைப் பிறர் அறியும்போதும், அறிந்துவிடுவார்கள் என நினைக்கும் போதும் மனங் கலங்குகிறோம். இப்படியான அனுபவங்கள் எமக்கும் ஏற்படலாம். குறைபாடுகளை ஏற்று, அவற்றின் வழியாக வாழ்வைத் திருத்த நாம் முயலவேண்டும்.

ஆனால் எம்மிற் பலர் குறைபாடுகளை மூடி மறைக்க விரும்புகிறோம். இது பெரும் மடமையாகும். பொய் சொல்லுபவன் தனது குறைபாடுகளை மூடி மறைக்க விரும்புகிறான். மற்றவர்களைக் குறிப்பிட்ட சில காலத்துக்கு ஒருவேளை ஏமாற்றலாம். ஆனால் காலஞ்செல்ல நாம் 'பொய் பேசுபவர்கள்' 'புழுகர்' என்பதை மற்றவர்கள் அறிவர். அதன்பின் எங்களை நம்பி நடக்கமாட்டார்கள்: 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு' என்பது பழமொழி அல்லவா? உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார் உறவை எவரும் விரும்பமாட்டார்கள், மற்றவர்களை ஏமாற்றுவதிலும் அவர்க

ளது நம்பிக்கையைப் பெறுவதே மிக முக்கியம் என்பதை நினைவிற் கொள்வோம். மேலாக, நாம் இறைவனின் மக்களாய் இருப்பதனுல் பொய் கூறி மற்றவர்களை ஏமாற்றுவது எமது மாண்புக்கு இழுக்காகும்.

பொய் பேசி மற்றவர்களுக்குத் தீங்கு இழைக்கும்போது முழுச் சமுதாயத்துக்குமே தீங்கு உண்டாக்குகிறோம். நாம் நமது நல்ல பெயரைப் பாதுகாக்க விரும்புவது இயல்பு. எமது குற்றங் குறைகளை மற்றவர்கள் கதைப்பதையும், வெளிப்படுத்துவதையும், நாம் விரும்புவதில்லை. பிறர் அவ்விதம் செய்வதை ஒருபோதுமே சகிக்க மாட்டோம். பிறரும் எம்மைப் போன்றவர்களே! தங்கள் நற்பெயரைப் பாதுகாக்க அவர்களும் விரும்புகிறுர்கள். எனவே நாம் பிறரின் நல்ல பெயரைப் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளோம். கோள் சொல்வது எமக்கு அழகல்ல. ஒருபோதும் செய்யாத குற்றத்தை ஒருவர்மீது சுமத்தும்போது – பொய் சொல்லும்போது – நாம் பெரிய பாவம் கட்டிக்கொள்கிறோம்.

கடவுள் திருமொழி:

'உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்'

(அருளப்பர் 8 : 32).

செயல் திட்டம்:

1. உண்மை கூறியதால், நன்மை உண்டானதைக் காட்ட, உமது வாழ்வில் இருந்து ஒரு சம்பவம் கூறுக.
2. மாணவனுகிய நீர் உண்மைத் தன்மையைக் காட்டக்கூடிய மூன்று சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

வாழ்க்கைக்கு:

பூவில் உண்மை பேசி வாழ்வோர்
புனிதர் என்று சொல்கிறோம்
நாவில் தீய பொய்கள் பேசி
நாங்கள் வாழ்தல் நல்லதா?
நீதி நேர்மை நியாயம் எங்கள்
நிறைந்த செல்வம் என்கிறோம்
சூது வாது வஞ்சமோடு
சூழ்ச்சி செய்தல் நல்லதா?
வாய்மை உண்மை மெய்மை மோட்ச
வாழ்வு சேர்க்கும் வாயிலாம்
தூய்மையான உள்ளம் ஈசன்
தோன்றி வாழும் கோயிலாம்.

'யாழ். ஜெயம்'

விடை தருக:

1. கிறிஸ்தவன் ஏன் எப்பொழுதும் உண்மைக்குச் சான்று பகர வேண்டும்?
2. பொய் கூறுவது, ஏன் சமுதாய வாழ்வுக்குத் தீங்கு விளைக்கும் என்று எழுதுக.

ஆய்வுப் பொருள் 6

பாடம் 46

# சமுதாயமும் நான் வாழும் முறையும் (7)

கட்டளைகளும் – பேறுகளும்

'தாய் ஏசியதை மகளால் பொறுக்க முடியவில்லை:
இதனால் நஞ்சு அருந்தித் தற்கொலை செய்துகொண்டாள்!
'கடத்திய விமானம் வெடித்து நாசம் – 71பேர் பயங்கரப்பலி!
'சைப்பிரஸ் தலைநகரிலிருந்து கிரேக்கர்கள் காடுகள், மலைகளுக்கு ஓடுகிறார்கள். மீண்டும் போர் மூளுமென அச்சம்!

'காரில் வந்த கோஷ்டி வியாபாரியைத் தாக்கியதாம் – முரசமோட்டையில் சம்பவம்!

'திருடிய பணத்தில் உலகம் சுற்றினராம் – பலநாள் தேடப்பட்ட சாவலூர் வாலிபர் கைது!'

செய்தித் தாள்களில் காணப்பட்ட இச்செய்திகள் குறிப்பது என்ன?

—இன்றைய உலகில் சமுதாயச் சீர்கேடுகள் அதிக அளவில் இடம் பெறுகின்றன.
—உலகம் அமைதி இழந்து காணப்படுகிறது.
– ஒற்றுமை என்னும் ஒளி மறைந்து இருள் மண்டிவிட்டது.
– அன்பு என்பது அறியாப் புதிராகிவிட்டது .......

இதன் காரணம் என்ன?.........இறைவனிடம் இருந்து மனிதன் பிரிந்ததே இத்தீமைகளுக்குக் காரணம். மனிதன் உடன்படிக்கை வாழ்வில் இருந்து விலகிவிட்டான்.

உடன்படிக்கை வாழ்வை இலகுவாக்குவதற்காகப் பத்துக் கட்டளைகள் இறைவனால் கொடுக்கப்பட்டன என்று திருமுறை நூலில் வாசிக்கிறோம். இறைமகன் கிறிஸ்து இந்தக் கட்டளைகளை இரண்டு கட்டளைகளில் அடக்கிக் காட்டியுள்ளார். படைத்த பரமனை அன்பு செய்யவும், பிறரையும் உன்போல் அன்பு செய்யவும் இயேசு படிப்பித்தார். இவற்றுடன், மலைப்பொழிவின்போது பேறுகளின் மகிமையையும் இயேசு அறிக்கை இட்டார்.

பேறுகளைப்பற்றிய கிறிஸ்துவின் நல்லுரை மலைப்பொழிவு எனப்படுகிறது.

—இயேசு, 'சாந்தம் உள்ளோர் பேறுபெற்றோர்' என்று குறிப்பிட்டபோது 'உன் பெற்றோரையும் பெரியோரையும் சங்கிப்பாயாக' என்ற 4-ம் கட்டளையை அழுத்திக் கூறினார்.

—'கொலை செய்யாது இருப்பாயாக' என்பது 5-ம் கட்டளை. மனித உயிரைப் பேணுதலைப் பற்றியது இக்கட்டளை என்பதை அறிவீர்கள். 'இரக்கம் உடையோர் பேறுபெற்றோர்' எனக் கருணை வள்ளல் இயேசு மொழிந்து இதே கட்டளையை அன்பு மனப்பாங்குடன் கைக்கொள்ள எம்மைத் தூண்டுகிறார்.

—'தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர்' என்று கூறிய இயேசு தூய வாழ்வின் அழகைச் சித்தரித்துக் காட்டுகிறார். 6-ம், 9-ம் கட்டளைகள் கற்பிப்பது இதுவே.

—'எளிய மனத்தோர் பேறுபெற்றோர்' என்றதனால் நாம் மற்றவர்களின் உடைமைகளைப் பாதுகாக்கவேண்டும் என்ற 7-ம், 10-ம் கட்டளைகளைத் தெளிவாக்குகிறார்-

—ஈற்றில் 'சமாதானம் செய்வோர் இறைவனின் மக்கள்' என்று இயேசு கூறி உண்மையின் மதிப்பை -- 8-ம் கட்டளை கற்பிப்பதை—உயர்த்தி உள்ளார்.

கிறிஸ்து காட்டிய எட்டுப் பேறுகள். கிறிஸ்தவன் கட்டளைகளைக் கடமைக்காகக் கைக்கொள்ளும் மனநிலையை மாற்றி உள்ளன. பதிலாகக் கிறிஸ்தவ நிறைவின் உச்சிக்கு இட்டுச்செல்லும். அன்பு அழைத்தல் ஆகப் பேறுகள் அமைகின்றன. அதேவேளையில் பத்துக் கட்டளைகளின் முக்கியத்துவத்தையும் மனிதன் அவற்றிற்குப் பணிந்து நடக்கவேண்டும் என்பதையும், சமுதாய நலனுக்கு அவை ஏற்றன என்பதையும் சுட்டிக் காட்டுகின்றன.

எனவே நாம் இறைவனின் மக்களாக வாழவேண்டின் கட்டளைகளின் வழியில் செல்லவேண்டும்.

எமது பரஸ்பர ஒத்துழைப்பினால் சமுதாயத்தைக் கட்டி எழுப்ப வேண்டும் என்பது இறைவனின் திருவுள்ளமாகும். தெய்வீக சமுதாயத்தை உருவாக்குவது எமது கடமை. இது எமது பொறுப்பு; இதுவே எமது அழைப்பு.

கிறிஸ்தவர்களாகிய நாம் அன்புநிறைந்த, அமைதி நிலவும், ஒற்றுமை ஒளிரும் உலகை ஆக்குவோம்; பத்துக்கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் வாழ்வை மேற்கொள்வோம்.

கடவுள் திருமொழி:

எட்டுப் பேறுகள்

'எளிய மனத்தோர் பேறுபெற்றோர்.
ஏனெனில் விண்ணரசு அவர்களதே.
துயர் உறுவோர் பேறுபெற்றோர்,
ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்.
சாந்தம் உள்ளோர் பேறுபெற்றோர்,
ஏனெனில் மண்ணுலகு அவர்களது உரிமையாகும்.
நீதியின்பால் பசிதாகம் உள்ளோர் பேறுபெற்றோர்.
ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்.
இரக்கம் உடையோர் பேறுபெற்றோர்,
ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்,
தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர்,
ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்.
சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர்,
ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர்.
நீதியின் நிமித்தம் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர்.
ஏனெனில் விண்ணரசு அவர்களதே.'

(மத்தேயு 5:3—10).

செயல் திட்டம்:

1. எட்டுப் பேறுகளையும் மனனம் செய்க.

2. கிறிஸ்தவ மாணவனுக நீர் வகுப்பில் சமாதானத்தை நிலைநாட்ட கைக்கொள்ளக்கூடிய வழிவகைகள் எவை எனக் கூறுக.

வாழ்க்கைக்கு:

பத்துக்கட்டளைகளைக் கடமைக்காக மட்டும் அனுசரிக்காது, என்னுல் இயன்ற அளவு நிறைவுள்ள புனித நிலையை அடைய முயல்வேன்.

விடை தருக:

1. கிறிஸ்து பத்துக்கட்டளைகளை எவ்விதம் இரண்டு கட்டளைகளில் அடக்கினுர்?

2. 'பரஸ்பர ஒத்துழைப்பினுல் சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதே இறைவனின் திருஉள்ளம்.' இதைக் குறித்துக் காட்டும் பேறுகள் எவை?

ஆய்வுப் பொருள் 6

பாடம் 47

# திவ்விய பூசைப்பலி இறைமக்களை ஒன்றாக இணைக்கிறது 1

திருப்பலி இறைவனுக்கு ஒப்புக்கொடுக்கப்படும் பலியாகும். பழைய உடன்படிக்கை நாட்களில் பலவித பலிகள் வழியாக இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஒற்றுமை நிலைநாட்டப்பட்டது. பழைய உடன் படிக்கையின் பலிகள் அனைத்தும் புதிய உடன்படிக்கையின் திருப்பலியின் முற்குறிகள் ஆகக் கருதப்படுகின்றன:

- திருப்பலியை முதன் முதலில் ஒப்புக்கொடுத்தவர் இயேசுக் கிறிஸ்து.
- திருப்பலியில் பலியானவரும் அவரே!
- அவரது பலி பெரியவியாழன் அன்று தொடங்கிக் கல்வாரி மரணத்தில் முடிவடைந்தது.

''அப்பத்தை உண்டு, திருக்கிண்ணத்தில் பருகும்போதெல்லாம், ஆண்டவர் வரும் வரையில், நாம் கிறிஸ்துவின் மரணத்தை அறிக்கை இடுகின்றோம்'' என்று புனித சின்னப்பர் இத்திருப்பலி பற்றிக் கூறுகிறார்.

குருவானவர் திருப்பலியின்போது அப்பத்தையும், இரசத்தையும் ஒப்புக்கொடுக்கிறார். காணிக்கையின்போது அவர் சொல்லும் வார்த்தைகள் உங்களுக்கு நினைவிருக்கக்கூடும். அவர் பயன்படுத்தும் வார்த்தைகள் இவை;

''ஆண்டவரே! அனைத்துலகின் இறைவா! உம்மைப் போற்றுகின்றோம். ஏனெனில் உமது அருட்பெருக்கிலிருந்து நாங்கள் இந்த அப்பத்தைப் பெற்றுக்கொண்டோம். நிலத்தின் விளைவும் மனித உழைப்பின் பயனுமான இந்த அப்பத்தை உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். இது எங்களுக்கு வாழ்வளிக்கும் அப்பமாக மாறும்.''

இரசத்தை ஒப்புக் கொடுக்கும்போதும் இதேபோன்ற செபம் ஒன்று சொல்லப்படுகின்றது.

திருப்பலியின்போது குருவானவரால் ஒப்புக்கொடுக்கப்படும் வெண்ணிற அப்பம் ஆயிரம் ஆயிரம் மக்களின் உழைப்பினால் உருவானது: திராட்சை இரசமும் இதுபோன்றதே. திருப்பலியின்போது ஒப்புக்கொடுக்கப்படும் இந்தப் பொருள்கள் இரண்டும் இறைமக்கள் ஆகிய எமது ஒற்றுமையின் அடையாளங்கள் ஆக விளங்குகின்றன.

திருப்பலியானது எமது சொந்த வாழ்க்கையின் பலியும் ஆகும். எமது நாளாந்த செயல்கள், உழைப்பு, ஏக்கங்கள், கவலைகள், தொல்லை

கள், மனக் கசப்புக்கள், இன்பங்கள், நம்பிக்கை அனைத்தும் நாங்கள் ஒப்புக்கொடுக்கும் காணிக்கைகள் ஆகும். இவ்வித காணிக்கைகளுடனேயே நாம் திருப்பலியில் பங்குகொள்ளவேண்டும்.

பலியிற் பங்குபற்றும் அனைவரது உழைப்பும், முயற்சியும் அப்பம், இரசம் என்னும் அடையாளத்தால் இணைக்கப்படுகின்றன

திருப்பலியின்போது அப்பத்தையும் இரசத்தையும் வாழ்வளிக்கும் உணவாகப் பெற்றுக்கொள்கிறோம். நம்மிடம் உள்ள தெய்வீக வாழ்வை வளரச்செய்ய இறைவன் உணவாய் எம்மிடம் வருகிறார். இது 'நாம் எல்லாரும் சகோதரர்' என்பதைப் புலப்படுத்துகிறது. இதன் வழியாக நாம் கிறிஸ்துவின் உத்தானத்துக்கு உயிருள்ள சாட்சிகள் ஆகின்றோம்.

கடவுள் திருமொழி:

மேலும் அப்பத்தை, எடுத்து நன்றிகூறி, பிட்டு அவர்களுக்கு அளித்து,
''இது உங்களுக்காக அளிக்கப்படும் என் உடல்!
இதை என் நினைவாகச் செய்யுங்கள்'' என்றார்.
அவ்வாறே உணவு அருந்தியபின் கிண்ணத்தை எடுத்து,
இக்கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படும்
இரத்தத்தினால் ஆகும் புதிய உடன்படிக்கை'' என்றார்
(லூாக்காஸ் 22:19—20).

செயல் திட்டம்:

1. திருப்பலியில் ஒப்புக்கொடுக்கப்படும் அப்பத்தை ஆக்குவதற்குத் துணைபுரிந்தவர்களின் பட்டியல் ஆக்குக.
2. திருப்பலி எமது சொந்த வாழ்க்கைப் பலியாவது எப்படி?

வாழ்க்கைக்கு:

பாடிப்பழகுவோம்!

பல்லவி

வருவாய் இன்று கிறிஸ்தவ குலமே
கிறிஸ்து விடுத்த அழைப்பினை ஏற்று — வருவாய்

சரணம்

1. வரிவேத நிறைவாம் வார்த்தை அளிக்கும்
விருந்தினை உண்ண விரைவாய் குலமே
உண்பவர் எல்லாம் ஒரு குலமாகி
உன்னத பலியை உவந்தே செலுத்த—வருவாய்.
2. திருநீராட்டால் வந்தது உரிமை
திருப்பலி தனையே செலுத்தும் அருமை
கிறிஸ்துவை அறியா உலகுக்குப் புதுமை
கிறிஸ்தவ குலமே உந்தன் பெருமை — வருவாய்.

விடை தருக:

1. திருப்பலியை முதன் முதலில் ஒப்புக்கொடுத்தவர் யார்?
2. புனித சின்னப்பர் திருப்பலிபற்றி யாது கூறியுள்ளார்?

## பாடம் 48

# திவ்விய பூசைப்பலி
# இறைமக்களை ஒன்றாக இணைக்கிறது 2

பிறந்தநாள், திருமண நிகழ்ச்சி ...... போன்ற விழாக்களின்போது விருந்து உபசாரம் இடம்பெறுவதை அறிவோம். இது நல்லதொரு சமுதாய வழக்கம் ஆகும் சமுதாய ஒன்றிப்பை இது காட்டுகிறது அங்கும் இங்கும் சிதறி வாழும் உறுப்பினர் விருந்துபசாரத்தின் போது ஒன்றாகச் சேர்கின்றனர். உறுப்பினரிடையே உள்ள பகையும் பிணக்கும் ஒழிந்து நல்லெண்ணம் ஏற்படுகிறது. சமுதாயஒற்றுமை ஏற்படுகிறது. ஆகவே விருந்து அல்லது 'ஒன்றுகூடுதல்' சமுதாய ஐக்கியத்தின் அடையாளமாகும்.

குடும்பத்தினர் ஒருங்கு அமர்ந்து உணவு அருந்துவதும் சிறந்த ஒரு வழக்கமே. குடும்பத்தில் நல்லெண்ணம் வளர இது வழி செய்கிறது. நம்மிடையே உள்ள வெறுப்புக்கள் நீங்குகின்றன. இதனால் குடும்ப உறுப்பினரையும் அவர்களது உரிமைகளையும் பற்றி நினைப்பதற்கான வாய்ப்பும், பயிற்சியும் உண்டாகிறது. குடும்பத்தில் நல்லுறவும், ஒற்றுமையும் இருந்தால் சமுதாயத்தில் நல்லுறவும், ஒற்றுமையும் நிலவும்.

இதைப்போலவே நற்கருணைத் திருப்பலியும் இறைமக்களிடையே ஒற்றுமையையும், நல்லுறவையும் வளர்க்கிறது. நல்லெண்ணத்தையும் ஏற்படுத்துகிறது. எனவே நற்கருணை இறைமக்களின் குடும்ப உணவு ஆகும். நாம் எத்தகைய வேற்றுமையும், பாகுபாடும் இன்றி ஒரே பந்தியில் அமர்ந்து, திருவிருந்தில் பங்குகொள்கிறோம். விண்ணக அப்பம் ஆகிய இயேசு இறைமக்கள் அனைவரையும் தெய்வீக வாழ்வு எனும் பொதுவான பிணைப்பினால் ஒன்றுசேர்க்கிறார். இதனால் நாம் இறை அன்பைப் பரப்பும்படி தூண்டப்படுகிறோம். அன்றியும் சமுதாயத்தின் பொது நலனுக்காக உழைப்பதற்கு வேண்டிய வலுவையும், மன வலிமையையும் பெறுகிறோம்.

இயேசு எமக்களித்த உன்னத நன்கொடை இத்தெய்வீக அப்பமாகிய நற்கருணை ஆகும்.

—தமது மரணத்துக்கு முந்திய நாள் அன்று அவர் தமது அப்போஸ்தலர்களுடன் இரவுணவை அருந்தினார்;

— அந்த இரவுணவில்போது அப்பத்தையும், இரசத்தையும் தமது திரு உடலாகவும், இரத்தமாகவும் மாற்றி அவர்களுக்குக் கொடுத்தார்.

— வருங்காலத்திலும் தமது நினைவாக ...தைச் செய்யுமாறு ஆணையிட்டார்.

— அவ்வாறு செயற்படுவதற்கான அதிகாரத்தையும் அவர்களுக்கு அளித்தார். திருப்பலியானது இறுதி இரவுணவை மீளவும் நடாத்துவதாகும்.

கடவுள் திருமொழி:

என் தசை மெய்யான உணவு.
என் இரத்தம் மெய்யான பானம்:
என் தசையைத் தின்று, என் இரத்தத்தைக் குடிப்பவன்
என்னில் நிலைத்திருக்கிறான்.
நானும் அவனில் நிலைத்திருக்கிறேன்.

(அருளப்பர் 6:55 - 56).

செயல் திட்டம்:

1. குடும்பத்தினர் ஒன்றுசேர்ந்து உணவு அருந்துவது ஒற்றுமையின் அடையாளமாயிருப்பது எப்படி?
2. 'இறைமக்கள் குடும்பத்தில் நீர் ஓர் உறுப்பினர்' என்ற வகையில் உமது வகுப்பில் ஒற்றுமையை வளர்க்க நீர் செய்யக்கூடிய 3 பணிகள் எவை?

வாழ்க்கைக்கு:

உணவுக்கு முன் செபம்

இறைவா! இன்று எமக்குத் தந்துள்ள உணவுகளுக்காக நன்றி கூறுகிறேன். சாப்பாடு இல்லாமல் இன்று பசியாக இருப்பவர்களையும் காப்பாற்றுமாறு உம்மை மன்றாடுகின்றேன்:

உணவுக்குப் பின் செபம்

அன்பின் இறைவா! எமது பசியைப்போக்க உணவு தந்தமைக்கு, உமக்கு நன்றி கூறுகின்றேன், உணவுப்பொருள்களை உற்பத்தி செய்தவர்களையும், தயாரித்தவர்களையும் ஆசீர்வதித்தருளும்—ஆமென்.

விடை தருக:

1. கிறிஸ்து எமக்களித்த உன்னத கொடை எது?
2. சமுதாய ஒன்றிப்புக்குரிய ஓர் அடையாளத்தைக் குறிப்பிடுக.

ஆய்வுப் பொருள் 6

பாடம் 49

# திவ்விய பூசைப்பலி

# இறைமக்களை ஒன்றாக இணைக்கின்றது (3)

எமது கிறிஸ்தவ முன்னோர்களின் வாழ்க்கை முறைபற்றி அறிய நீங்கள் ஆவல்கொள்வீர்கள். இயேசுக்கிறிஸ்து திருச்சபையை நிறுவினார் என நாம் அறிவோம். திருச்சபையின் தொடக்க காலத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களை ஆதிக்கிறிஸ்தவர்கள் என அழைக்கின்றோம். அவர்களின் வாழ்க்கையிலிருந்து மூன்று முக்கிய உண்மைகளை நாம் அறியக்கூடியதாக உள்ளது. அவை:

— அப்போஸ்தலரின் போதனையைக் கேட்டு நடந்தனர்.

— சான்று வாழ்வை மேற்கொண்டனர்.

— பொது வழிபாடுகளில் பங்கெடுத்தனர்.

ஆதிகாலக் கிறிஸ்தவர்கள் இயேசுவின் போதனைகளுக்கு ஏற்ப வாழ்ந்தனர். அதனால் அவர்கள் இறைமகன் என ஏற்றுக்கொண்ட கிறிஸ்துவுக்குச் சான்று பகர்ந்தனர். தம் சொந்த உடைமைகளை விற்று வந்த பணத்தை அனைவரதும் பொது நன்மைக்காகப் பயன்படுத்தினர். இவ்விதம் தங்கள் கிறிஸ்தவ அன்பைப் புலப்படுத்தினர். பொது வழிபாட்டுக்காக அவர்கள் ஒருங்குகூடி, கடவுள் திருமொழிக்குச் செவிகொடுத்தனர். தங்களது அனுபவத்தைப் பரிமாறிக் கொண்டனர். ஒருவர் மற்றவரின் வாழ்க்கைபற்றி ஆழமான அறிவு பெற்றிருந்தனர். திருவழிபாடுகளில் பங்குபற்றினர்; இத்திருவழிபாடுகளில் அப்பம் பிட்டல் அதி உன்னதமானதாகக் கருதப்பட்டது. இறைமக்களின் ஒற்றுமைக்கு அப்பம் பிட்டல் – திவ்விய நற்கருணையில் பங்குகொள்ளுதல் – அதி சிறந்த வாய்ப்பாக அமைந்தது.

எம் முன்னோரான ஆதிக் கிறிஸ்தவர்கள் 'அப்பத்தைப் பிட்கும்' வழிபாட்டுக்கு வெறுங்கையோடு செல்லவில்லை, பொதுநலனுக்கான காணிக்கைப் பொருள்களைத் தம்முடன் எடுத்துச் சென்றனர். அவர்களின் காணிக்கைகள் ஆதிக்கிறிஸ்தவர்களது திருச்சபையின் பொது நன்மைக்காகப் பயன்படுத்தப்பட்டன.

வாழ்க்கையால் கிறிஸ்துவுக்குச் சான்றுபகரவேண்டிய கடப்பாடு இன்றய கிறிஸ்தவனாகிய எனக்கும் உண்டு; ஆதிக்கிறிஸ்தவர்

போல், அனைவரதும் நலனுக்காக, எமது வருவாயில் இருந்து கொடுக்க வேண்டியது எமது கடமையாகும். ஞாயிறு திருப்பலியின்போது பணம் சேர்க்கப்படுகிறதை அறிவீர்கள். அதற்குத் தாராளமாக—நம்மால் இயன்ற அளவுக்கு—கொடுத்து உதவுதல் எமது தலையாய கடன் ஆகும். நாம் வழங்கும் காணிக்கைப் பணம் ஏழைகள் நோயாளர், அநாதைகள் ஆகியோர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

கடவுள் திருமொழி:

*'நாள்தோறும் தவறாமல் ஒரே மனதாய்க் கோவிலில் கூடுவர்.*
*வீடுகளில் அப்பத்தைப்பிட்டு மனமகிழ்வோடும்*
*கபடமற்ற உள்ளத்தோடும் பகிர்ந்துகொள்வர்,*
*இங்ஙனம் கடவுளைப் புகழ்ந்து வந்தனர்*
*மக்கள் அனைவருக்கும் வேண்டியவர்களாய் விளங்கினர்'*
*(அப்போஸ்தலர் பணி 2:46—47)*

செயல் திட்டம்;

1. *கடந்த ஞாயிற்றுக்கிழமை நீர் கேட்ட இறை வார்த்தையில் இருந்து கற்றுக்கொண்ட இரு படிப்பினைகளைக் குறிப்பிடுக.*
2. *'சமாதானத்திற் சென்று வாருங்கள்'—உமது குடும்பத்தில் சமாதானம் நிலவச்செய்யும் மூன்று வழிவகைகளைக் கூறுக.*

வாழ்க்கைக்கு:

பல்லவி

*அன்பினிற் பிறந்த இறைகுலம் நாமே*
*அன்பினைக்காத்து அறம் வளர்ப்போமே*
*அறம் வளர்ப்போமே.*

சரணம்

1. *ஒருமனத்தோராய் அனைவரும் வாழ்வோம்*
*அருளொளி வீசும் ஒரு வழிபோவோம்*
*பிரிவினை மாய்த்து திருமலற காப்போம் (2)*
*ஒருமையில் இறைவன் திருவுளம் காண்போம்;*

2. *பிறப்பிலும் இயேசு இறப்பிலும் காட்டி*
*பேருமை செய்தாரே புனித பேரன்பை*
*பிறந்த நல்வாழ்வின் பயன் பெறவேண்டும்—*
*சிறந்த நம்வாழ்வின் பயன்பெறவேண்டும்;*
*பிறரையும் தமைப்போல் நினைத்திடவேண்டும்!*

விடை தருக:

1. *ஞாயிறு அன்று கோவிலில் சேர்க்கப்படும் காணிக்கைப் பணம் எந்த நோக்கங்களுக்காகச் செலவிடப்படுகிறது?*
2. *ஆதித் திருச்சபையின் திருவழிபாட்டில் மூன்று பண்புகள் எவை?*

ஆய்வுப் பொருள் 6

பாடம் 50

# திவ்விய பூசைப்பலி
# இறைமக்களை ஒன்ருக இணைக்கிறது (4)

இஸ்ராயேல் மக்கள் எகிப்தியரின் அடிமைத்தனத்தில் இருந்து எவ்வாறு விடுதலை பெற்றனர் என முன்னர் படித்தோம்; பழைய ஏற்பாட்டில் இவ்வரலாறு காணப்படுகிறது. எகிப்து நாட்டைவிட்டு வெளியேறுமுன் அவர்கள் தம் முதல் பாஸ்கா விழாவைக் கொண்டாடினர். பாஸ்கா என்பதன் பொருள் கடந்து செல்லுதல். அடிமைத்தனத்திலிருந்து விடுதலை அடைந்ததன் நினைவாக அவர்கள் பாஸ்கா என்னும் விழா எடுத்தனர்.

உரிமை நாட்டை நோக்கிச் சென்ற இஸ்ராயேலர், நீண்ட பயணத்தை மேற்கொள்ள நேரிட்டது. செங்கடலைக் கடந்து, அதன் பின், பாலைவனத்தின் ஊடாகச் சென்றனர். அங்கு அவர்கள் உண்ண உணவின்றி வாடினர். மக்களின் துயர்கண்ட இறைவன் வானத்திலிருந்து 'மன்னு' என்னும் அப்பத்தைப் பொழிந்தார். இதனுல் அவர்கள் ஊட்டமும், வலுவும் பெற்றனர்.

புதிய உடன்படிக்கையின் மக்களாகிய நாமும் பாஸ்காவைக் கொண்டாடுகிறேம். கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளின் நினைவாகப் பாஸ்கா எம்மால் கொண்டாடப்படுகிறது. கிறிஸ்துவின் பாஸ்கா எது என்பதை நாம் நன்கு விளங்கவேண்டும்.

— பாவத்தின் விளைவான இறப்பிலிருந்து உத்தானம் ஆகும் உன்னத நிலையைக் கிறிஸ்து எமக்குப் பெற்றுத் தந்துள்ளார்: இறப்பை வென்றவர் இறைமகன் கிறிஸ்து, அவர் தமது உயிர்ப்பின் வழியாக மரணத்தை வென்ருர்.
— கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு மூன்றையும் கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருள் குறிக்கிறது.
— இப்பெரு நிகழ்ச்சியான பாஸ்கா மறைபொருள் நினைவாகத் திருப்பலி விழாக் கொண்டாடப்படுகிறது.
— திருப்பலி கிறிஸ்து அடைந்த வெற்றியினதும் எமது மீட்பினதும் நினைவாகும்.

திருப்பலி வேளையில் வானக அப்பமாகிய திவ்விய நற்கருணையில் பங்குகொள்வதினுல் கிறிஸ்துவின் வெற்றியில் பங்கு கொள்கிறேம். விண்ணகப் பயணத்தை மேற்கொண்டுள்ள எமக்கு நற்கருணை வலுவைத் தருகிறது. நற்கருணை எமக்குத் தெய்வீக ஊட்டம் அளிக்கும் உணவாகவும் விண்ணக வாழ்வில் பங்குகொள்வோம் என்ற நம்பிக்கை அளிப்பதாகவும் அமைகிறது.

திருப்பலி இறைவனுடன் மனிதர் கொண்டுள்ள உறவை வளர்க்கும் வழியாகும். இறைவார்த்தை வழியாக இறைவன் பலி வேளையில் எம்முடன் உரையாடுகிறார். காணிக்கை வேளையில் கிறிஸ்துநாதர் தம்மை எங்களுடன் சேர்த்து இறைவனுக்கு அர்ப்பணிக்கிறார், திவ்விய நற்கருணை வழியாகத் தம்மை எமக்கு மீளவும் தருகிறார். இவ்விதம் நாம் இறைவனுடன் ஒன்றுபடுகிறோம். இதனால் திவ்விய நற்கருணைப் பலி இறைவனுடன் எம்மை இணைக்கும் திருவருட் சாதனம் ஆகும்.

கடவுள் திருமொழி:

ஆட்டுக் கடாக்கள் இளங்காளைகளின் இரத்தத்தைக் கொண்டு கிறிஸ்து தூய அகலத்தில் நுழையவில்லை.
தம் சொந்த இரத்தத்தைக் கொண்டே அதில் நுழைந்தார்.
இவ்வாறு நாம் முடிவில்லா மீட்பைக் கண்டடையச் செய்தார்
(எபிரேயர் 9:12).

முந்தின உடன் படிக்கையின் காலத்தில் செய்யப்பட்ட குற்றங்களிலிருந்து மக்களை விடுவிக்கக் கிறிஸ்து இறந்தார்.
இங்ஙனம் சாவொன்று நிகழ்ந்துள்ளதால் அழைக்கப்பட்டவர்கள்
—புதிய உடன்படிக்கையால் வாக்களிக்கப்பட்ட
முடிவில்லா உரிமையைப் பெறமுடிந்தது,
இவ்வகையில் அவர் புதியஉடன்படிக்கையின் இணைப்பாளராய்
இருக்கிறார் (எபிரேயர் 9:15).

செயல் திட்டம்;

1. திருப்பலியின் முக்கிய பகுதிகளைக் கூறுக.
2. பழைய உடன்படிக்கைப் பாஸ்காவோடு புதிய உடன்படிக்கைப் பாஸ்காவை ஒப்பிடுக.

வாழ்க்கைக்கு:

வானக அப்பமே வர வேண்டும்
இவ்வையக உணவே வர வேணடும்
விண்ணக உறவைத் தர வேண்டும்
நான் உன்னுடன் வாழும் வரம் வேண்டும்
உள்ளத்தில் உனக்குக் கோயில் செய்தேன்
அதில் உயர்ந்த கோபுரம் கட்டி வைத்தேன்
அன்பென்னும் விளக்கை ஏற்றி வைத்தேன்—அதில்
வாழ்ந்திட மன்னவா வர வேண்டும்!
வர வேண்டும்! வர வேண்டும்! (வானக அப்பமே)

விடை தருக:

1. பாஸ்காப் பண்டிகை வழியாக இஸ்ராயேலர் எவற்றை நினைவு கூர்ந்தனர்?
2. இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் உள்ள உறவைத் திருப்பலி எவ்விதம் வளர்க்கிறது?

---

8

## பாடம் 51

# திருமணம் சகோதரத்துவம் நிலவும் உடன்படிக்கைச் சமுதாயத்தை வளர்க்கிறது

அம்மா என்னைப் பெற்று வளர்க்கிருள், என்னை ஆளாக்க அப்பா விரும்புகிருர், அவர்கள் என்னை அன்பு செய்கின்றனர். என்மீது கொண்ட அன்பினுல் அயராது உழைக்கின்றனர். அவர்கள் பல் சுவை உண்டி, அழகு மிளிரும் ஆடை, கற்பதற்கான நூல்கள்...... இன்னும் பலவற்றை எனக்குத் தருகின்றனர். இந்த உலகில் நான் பிறப்பதற்குக் காரணமாக இருந்தவர்கள் எனது பெற்ருேரே. அன்புப் பெற்ருேரை எனக்கு அளித்தவர் இறைவன்!

எனது தந்தையும் தாயும் கிறிஸ்தவர்கள் ஆனதால், திருமணம் வழியாக இறைவனுடன் ஓர் உடன்படிக்கை வாழ்வு வாழ இணங்கினர். இந்த உடன்படிக்கைக்கு இறைவன் சாட்சியாகவும் இருந்தார்; திருவருட்சாதனங்களில் திருமணமும் ஒன்று.

திருமண வாழ்வில் ஈடுபட்டுள்ள எனது பெற்ருேர் இறை மக்களைப் பெற்று, ஊட்டம் அளிக்க உணவுதந்து வளர்ப்பதற்கும் உடன்பட்டனர். மேலும் இறைமக்களாகிய தம் பிள்ளைகள் இறைவனுக்கும், சமுதாயத்துக்கும் உகந்தவர்களாக இருப்பதற்கான கல்வியையும் ஊட்டுகின்றனர்.

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவுவதற்காய வழிவகைகளை எனது பெற்ருேர் மேற்கொள்ளுகின்றனர். மகிழ்ச்சிகரமான குடும்பத்தில் வாழ்வது எவ்வளவு மேலானது என்பதை நாம் அறிவோம், ஒருவரை ஒருவர் அளிப்பவர்களாய் இராது எல்லோருக்கும் பாதுகாப்பாய் இருத்தல் குடும்ப மகிழ்ச்சியின் முதற்படியாகும். உறுப்பினர் சகோதரத்துவமும் ஒற்றுமையும் உடையவர்களாய் வாழவேண்டும். பிள்ளைகள் நன்முறையில் வளர்வதற்கு மகிழ்ச்சிகரமான சூழ்நிலை குடும்பத்தில் நிலவவேண்டியது அவசியம். மகிழ்ச்சி உண்டாக்குவதற்குப் பிள்ளைகளாகிய நீங்கள் என்ன செய்யக்கூடும்?

இதனுல் நான் வாழும் இல்லம் புனிதமான இடம் என்பதை விளங்குகிறேன்: அன்பு, பண்பு, அமைதி, மகிழ்ச்சி...... என்பன என் வீட்டில் நிலவவேண்டும். இல்லத்தில் வாழும் நான் இந்தச் சீரிய புண்ணியங்களைக் கைக்கொள்வேன்.

நான் நன்முறையில் வாழ்ந்தால் என் குடும்பமும் வாழும், நான் தாழ்ந்தால் என் குடும்பமும் தாழும்; எனது முன்னேற்றம் குடும்ப முன்னேற்றத்துக்கு அடிப்படை, எனவே ஊக்கத்துடன் படித்து, சோம்பலின்றி வேலை செய்து நான் வாழும் குடும்பத்துக்குப் பெருமை தேடுவேன்.

கடவுள் திருமொழி;

பிள்ளைகளே! ஆண்டவருக்குள் பெற்றோருக்குக் கீழ்ப்படித்திருங்கள்! இதுவே முறை. 'தாய் தந்தையரைப் போற்று' என்பதே வாக்குறுதியோடுகூடிய கட்டளைகளுள் முதலாவது,
அப்போது மண்ணுலகில் நீ நலம் பெறுவாய் —
நீடுழி வாழ்வாய் – என்பது அவ்வாக்குறுதி.
தந்தையரே! உங்கள் பிள்ளைகளுக்குச் சினமூட்டாதீர்கள்!
அவர்களைக் கண்டித்துத் திருத்தி – ஆண்டவருக்கேற்ற
முறையில் அறிவு புகட்டி வளர்த்தல் வேண்டும்''

(எபேசியர் 6:1 – 4)

செயல் திட்டம்:

1. உமது குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவச்செய்வதற்கு நீர் உதவக் கூடிய ஐந்து வழிகளைக் கூறுக;
2. நீர் குடும்பத்தில் ஒரு பிள்ளை—குடும்ப முன்னேற்றத்திற்காக நீர் செய்யவேண்டிய கடமைகள் எவை?

வாழ்க்கைக்கு;

திருமணம் ஒரு திருவருட்சாதனம். எனவே திருமணவிழாவில் பங்குகொள்ளும்போது இறைவனின் அருளை மணமக்கள் மீது பொழியும்படி வேண்ட மறவேன்.

விடை தருக!

1. நல்ல கிறிஸ்தவ குடும்பத்தின் பண்புகள் எவை?
2. உமது நன்மைக்காக உழைக்கும் பெற்றோருக்காக ஒரு செபம் ஆக்குக.

ஆய்வுப் பொருள் 6

## பாடம் 52

# குருத்துவம் சகோதரத்துவம் நிலவும் உடன்படிக்கைச் சமுதாயத்தை வளர்க்கிறது

இறைவன் எமது மீட்பர். நாம் மீட்படைய இறைவன் திட்டம் வகுத்து உள்ளார். அவரின் மீட்புத் திட்டத்தில் பங்கு கொள்ள இறைவன் எம்மை அழைக்கிறார். இந்த அழைப்பு ஒரேவிதம் ஆனதல்ல, வெவ்வேறுபட்ட முறையில், ஆனால் ஒவ்வொருவரும் அழைக்கப்படுகின்றனர். எனவே சமுதாயத்தை வளர்க்கும் பணியில், சமுதாய விருத்திக்கான செயல்களில் ஈடுபடவேண்டியது ஒவ்வொருவரதும் கடமையாகும், இந்தக் கடமையை முழுமையாக நிறைவேற்ற வேண்டிய பெரும் பொறுப்பு குருக்களுக்கு உண்டு. கிறிஸ்து நிறுவிய மேய்ப்புப் பணிக்கு இவர்கள் தங்களை அர்ப்பணித்துள்ளனர். திருத்தந்தை, மறை ஆயர்கள், குருக்கள் ஆகியோர் இந்தச் சிறப்பான அழைத்தற் பேற்றைப் பெற்றுள்ளனர்.

மனிதனுக்கும் இறைவனுக்கும் இடைநிலையானர் — இணைப்பாளர் ஆக இருப்பவர் குருவானர், இறைமக்களுடன் சேர்ந்து திருப்பலி நிறைவேற்றுவதற்கான அருள் உதவியையும் உரிமையையும் அவர் பெறுகின்றார் இறைவனின் அருட் பெருக்கை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கிறார்.

குருத்துவம் ஒரு திருவருட்சாதனமாகும். குருக்களாகத் திருநிலைபடுத்தப்பட்டோர் உலக பற்றுதல்களைத் துறந்து கிறிஸ்துவைப் பின்செல்லுகின்றனர். இறைமக்களின் பணிக்காகத் தம்மை அர்ப்பணிக்கின்றனர். ஏழ்மை, அமைச்சல், துறவு என்பவற்றைக் கடைப்பிடிக்கின்றனர். இறையன்பை உலகறியச்செய்யும் பெரும் பணிக்காகப் பாடுபடுகின்றனர், இவற்றின் வழியாகச் சகோதரத்துவம் நிலவும் கிறிஸ்தவ சமுதாயத்தை – தெய்வீக குடும்பத்தை – கட்டி எழுப்ப முயலுகின்றனர்.

கிறிஸ்துவின் பதிலாளிகளான குருக்கள் கிறிஸ்துவை மாண்பு படுத்த வேண்டியவர்கள்.

குருக்கள் எமது ஆன்மீகத் தந்தையர்கள். ஆன்மீக உதவிவேண்டும்போது நாம் அவர்களை அண்டிச் செல்வோம், நான் நல்வழி

காட்டும் இறை அடியார்களாகிய குருக்களின் நன்மதி கேட்டு நல்ல வணக வாழ்வேன்.

கடவுள் திருமொழி:

''ஆகவே அன்புப் பிள்ளைகளாய் நீங்கள் கடவுளைப்போல்
ஒழுக முயலுங்கள்
கிறிஸ்து தம்மையே கடவுளுக்கு
நறுமணம் வீசும் காணிக்கையும் பலியுமாக
நம்மை முன்னிட்டுக் கையளித்து
உங்கள்மேல் அன்பு கூர்ந்தது போல்
நீங்களும் அன்பு கொண்டு ஒழுகுங்கள்''

(எபிரேயர் 5:1);

செயல் திட்டம்:

1. உமக்காகக் குருக்கள் ஆற்றும் ஆன்மீகப் பணிகள் எவை?
2. திருப்பணியாளராக இருப்போர்க்கு வேண்டிய நல்ல பண்புகள் எவை என்று நினைக்கிறீர்?

வாழ்க்கைக்கு:

பீடத்தில் கிறிஸ்து குரு எழுகின்றார்
பேரருள் சுரக்கும் பலி நிறைவேற்ற..........(பீடத்தில்)
பாவியார் நாமும் பலிபீடம் செல்வோம்
பரமனின் பலியில் பெரும்பங்கு கொள்வோம்!

நிகரில்லாக் குருவாய்க் கிறிஸ்துவே அன்று
நிறைசெய்தார் சிலுவைப்பலியினை நன்று
நினைவூட்டும் பலியில் மறையுடல் தலையாய்
நலம்பெற நம்மை அழைக்கிறார் இன்று!

விடை தருக:

1. குருக்களுக்கு நாம் ஏன் மரியாதை காட்டவேண்டும்?
2. இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் குரு எவ்வாறு இணைப்பாளராக இருக்கிறார்?

ஆய்வுப் பொருள் 6

பாடம் 53

# துறவறவாழ்வும் பொதுநிலை வாழ்வும் சகோதரத்துவம் நிலவும் உடன்படிக்கைச் சமுதாயத்தை வளர்க்கின்றன

''உப்புச் சமைந்தால் உப்பின் அருமை தெரியும்''

''உப்பில்லாப் பண்டம் குப்பையிலே'' என்னும் பழமொழிகளை நீங்கள் அறிவீர்கள். உணவு கெடாமல் இருக்க உப்பு உதவுகிறது. உணவுக்குச் சுவை ஊட்டுவதும் உப்பு. அப்பத்துக்கான மாவைப் புளிக்கச்செய்ய ஒரு சிறிது புளிக்காரம் உபயோகிக்கிறோம். இதனால் மாப் புளித்துச் சுவையும் மணமும் உள்ள அப்பம்சுட முடிகிறது.

இயேசு தமது போதனையின்போது இந்த இரு பொருள்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இப்பொருள்கள் வழியாக ஓர் உண்மையைத் தெளிவாக விளக்கி உள்ளார்.

—''சமுதாயத்துக்குச் சேவைசெய்வோர் மக்களிடையே உப்புப் போலவும் புளிக்காரம்போலவும் செயற்பட வேண்டும்'' என இயேசு கூறினார்.

துறவறத்தோரும்,பொதுநிலையினரான இல்வாழ்வாரும் சமூகசேவையாளரே. இவ்விருசாராரும் உப்பும் புளிக்காரமும் போல இருக்க வேண்டுமென அழகாகச் சொல்லுகிறார் இயேசு.

- துறவிகள் இறைவனின் சிறப்பான அழைத்தலைப் பெற்றவர்;
- அவர்கள் பாரிய பொறுப்புக்களை ஏற்றுச் செயற்படுகின்றனர்;
- சமுதாயத்தினர் இறைவனை அறியச்செய்ய அரும்பாடு படுகின்றனர்.
- இறைவனையும் மனிதனையும் ஒன்றிணைக்கும் திரு முயற்சியில் ஈடுபடுகின்றனர்.
- அவர்கள் தெய்வீக குடும்பத்தை உருவாக்கி அதை வளர்க்கும் பணியை மேற்கொண்டுள்ளனர்.
- கிறிஸ்துவின் வழியில் செல்கின்றனர்.
- உதவி வேண்டியோர்க்கு உதவி செய்கின்றனர்.
  இன்னும்................................
- பிணியாளர் துயர் தீர்த்து, அநாதைகளை ஆதரித்து, இளைஞருக்குக் கல்வியூட்டி... ... பல்வேறு துறைகளில் சமுதாய சேவையாற்றி வருகின்றனர், உலகில் இறையன்பை விளங்க வைக்கும் கலங்கரை விளக்குகளாகத் துறவறச் சபையினர் வாழ்கின்றனர்;

இவர்களைத் தவிரப் பொதுநிலையினராகிய மக்களும் தம்மை அப்போஸ்தலப் பணிக்கு அர்ப்பணித்து வாழ்கின்றனர்.

—இந்தப் பொதுநிலையினரும் துறவிகள் போன்று சிறப்பான அழைத்தலைப் பெற்றவர்களே.

—தமது அழைத்தலுக்குத் தக அவர்கள் வாழ்கின்றனர்.

—பொதுநிலை அப்போஸ்தலப் பணியினர் உலக முயற்சிகளில் பங்கு கொண்டு அதன் வழியாகச் சமுதாயத்தைப் புனிதம் ஆக்குகின்றனர்.

—இங்ஙனம் புனிதம் ஆக்கிய சமுதாயத்தை இறைவனுக்கு அர்ச்சனை ஆக்குகின்றனர்.

நாங்கள் வளர்ந்தபின் துறவறத்தோர் ஆகக்கூடும். அல்லது பொதுநிலையினராக இருக்க விரும்பலாம். ஆனால் இருவகையினரும் சமுதாயத்தில் இறைவனின் ஒளியாக ஒளிரவேண்டியவர்கள். தெய்வீக குடும்பத்தை உருவாக்க உதவி, இயேசுவின் மீட்புத் திட்டத்தில் பங்குகொள்ள வேண்டியவர்கள் என்பதை நினைவிற்கொள்வோம்.

துறவற வாழ்வு மேற்கொண்டு வாழ விரும்புவோர்க்கான சபைகள் பல உள. இதேபோன்று பொதுநிலையினர் அப்போஸ்தலப் பணியினர்க்கான பல சபைகள் உள.

இந்தச் சபைகளில் சேர்வோர் நற்செய்தி அறிவுரைகளைப் பின்பற்றி வாழ வாக்குறுதி அளிக்கின்றனர். துறவிகள் காலத்துக்காலம் துறவற வாக்குறுதிகளையும் எடுப்பர். இங்ஙனம் இரு பகுதியினரும் இறைவனுக்கும் தாம் வாழும் சமுதாயத்துக்கும் தம்மை அர்ப்பணித்து வாழ்கின்றனர்.

கடவுள் திருமொழி:

வீட்டையோ, சகோதர சகோதரியையோ, தாய் தந்தையையோ,
மக்களையோ, நிலபுலன்களையோ என் பெயரின் பொருட்டுத்
துறந்துவிடும் எவனும் பன்மடங்கு பெறுவான்!
முடிவில்லாத வாழ்வும் பெற்றுக்கொள்வான்.''

(மத்தேயு 19:29).

வாழ்க்கைக்கு:

எனது அழைத்தல் எதுவென அறிய ஊக்கம் எடுப்பேன்; அதற்காகச் செபிப்பேன்.

விடை தருக:

1. கிறிஸ்தவர்களிடத்தில் உப்பாகவும் புளிக்காரமாகவும் செயற்பட வேண்டியவர்கள் யார்?
2. துறவறத்தாரின் பல்வேறு பணிகளை எழுதுக.

---

## பாடம் 54

# சமுதாய ஒருமைப்பாடு

ஒரே உடலில் நமக்கு உறுப்புக்கள் பல உள. இந்த உறுப்புக்கள் எல்லாம் ஒரே செயலைச் செய்வதில்லை. அதுபோலவே பலராயிருக்கிற நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே உடலாய் இருக்கிறோம்.

புனித சின்னப்பர் உரோமைக் கிறிஸ்தவர்களுக்கு ஒரு திருமுகம் எழுதினர். அதில் பன்னிரண்டாவது அத்தியாயத்தில் மேலே உள்ள பகுதி காணப்படுகிறது.

கை, கால், தலை..... போன்ற உறுப்புக்கள் ஒரே உடலாய் இணைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல இறைமக்களும் ஒருவருக்கொருவர் உறுப்புக்களாய் இருக்கிறோம். உடல் உறுப்புக்கள் வேறுபட்டனவாக இருந்தபோதிலும் ஒரே உயிரைக் கொண்டுள்ளன. அதேபோல இறைமக்களும் தெய்வீக உயிரினல் ஒன்ருக இணைக்கப்பட்டுள்ளனர். இத்தெய்வீக உயிர் கிறிஸ்துவிடம் இருந்து வருகிறது.

இயேசு இறப்பதற்கு முன்னர் பன்னிரு அப்போஸ்தலர்களைத் தெரிந்தெடுத்தார். இங்ஙனம் புதிய இறைமக்கள் சபையைத் தோற்றுவித்தார். அவரது மாண்புமிகு உயிர்ப்பின் பின்னர் சபையின் அலுவல்களை நிறைவுசெய்தார். எதிர்காலத்தில் எவ்விதம் செயல்படவேண்டுமென அப்போஸ்தலர்களுக்கு அறிவுரை வழங்கினர். கிறிஸ்து அப்போஸ்தலர்களுக்கு அதிகாரமும் அளித்தார்.

''மண்ணிலும் விண்ணிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே சகல சாதி சனங்களுக்கும் போய்ப் படிப்பித்து பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயரால் திருமுழுக்கு அளியுங்கள். நான் உங்களுக்குக் கற்பித்தவைகளைக் கடைப்பிடிக்கும்படி அவர்களுக்குப் படிப்பியுங்கள். இதோ நான் உலகம் முடியுமட்டும் உங்களோடு இருப்பேன்!'' என்பது இயேசுவின் பொன்மொழியாகும்.

கிறிஸ்துநாதரால் நிறுவப்பட்டது இந்தச் சமுதாயம். கிறிஸ்து உயிர்த்த ஐம்பதாவது நாள் தூயஆவியானவர் அப்போஸ்தலர்மீது இறங்கி வந்து, அவர்களை உறுதிப்படுத்தினர். ஐம்பதாவது நாள் நடந்த இந்தப் பெரு நிகழ்ச்சியை பெந்தக்கோஸ்து என அழைக்கின்

றோம். இந்த நன்னாளில் இருந்து இச்சமுதாயம் செயற்படத் தொடங்கியது. இச்சமுதாயத்தை நாம் திருச்சபை என அழைக்கிறோம். இறைமக்கள்சபை எனவும் இது அழைக்கப்படுகிறது.

கிளையானது திராட்சைக் கொடியில் ஒன்றுபட்டிருந்தால் அன்றித் தானாகக் கனி தராது. இதேபோன்று கிறிஸ்தவர்களும் திராட்சைக் கொடியாகிய கிறிஸ்துவுடன் இணைந்திருந்தால் மட்டும் பயனை அளிப்பவர்களாக இருப்போம். கிறிஸ்துவுடன் இணைந்த நாம் நற்செயல்களைச் செய்ய முயல்வோம்.

கடவுள் திருமொழி:

''உடல் ஒன்று – உறுப்புக்கள் பல; உடலின் உறுப்புக்கள் பலவாயினும்
ஒரே உடலாய் உள்ளது; கிறிஸ்துவும் அவ்வாறே என்க.''

(1 கொரிந்தியர் 12:12).

செயல் திட்டம்:

1. திருச்சபையின் உறுப்பினராகிய உமக்குரிய ஐந்து கடமைகளைக் கூறுக.
2. கிறிஸ்து தம் அப்போஸ்தலர்களுக்கு எவ்விதம் அறிவுரை கூறித் திருச்சபையின் மேல் அதிகாரத்தையும் வழங்கினார்.

வாழ்க்கைக்கு:

பலிவேளையில் சொல்லப்படும் நிசேயா விசுவாசப் பிரமாணத்தை மனனஞ் செய்து, கருத்துடன் சொல்லுவேன்.

விடை தருக:

1. புனித சின்னப்பர் திருச்சபையை ஏன் உடலுக்கு ஒப்பிடுகிறார்?
2. கிறிஸ்துவின் மறை உடலாகிய திருச்சபையை வளர்க்க நீர் செய்யக்கூடிய மூன்று நற்செயல்களைத் தருக.

ஆய்வுப் பொருள் 7

பாடம் 55

# இறையரசில் என் தாய்நாட்டின் இடம்

இயேசு பலஸ்தீன நாட்டில் நற்செய்தியை அறிவித்துவந்த நாட்களில் தாம் வாழ்ந்து வந்த சமுதாயத்துக்கு அளப்பரிய சேவை செய்தார்; பிணியாளரைக் குணமாக்கினார்; பசிப்பிணியால் வாடிய மக்களுக்கு உணவு அளித்தார்; தவறுகளைக் கண்டித்தார்; சமுதாயத்தைப் புனரமைத்தார்; தவறியவர்களை நல்வழிப்படுத்தினார்; சட்டத்துக்கு அமைவான வரிகளைச் செலுத்தினார். தம் கடமைகளைக் கைக்கொண்டு நல்ல குடிமகனாக வாழ்ந்து வந்தார். இவ்வாறு சேவை மனப்பான்மையுடன் மக்களுக்குப் பணிபுரிந்தார் இயேசு. தம் அன்புத் தந்தையாகிய இறைவனின் பேரன்புக்கு அவர் சான்று பகர்ந்து வாழ்ந்தார். தாம் வாழ்ந்த சமுதாயத்தை இறைவனிடம் வழி நடத்தினார்.

இவ்வாறு அவர் வழிச் செல்பவர்களும் செயற்பட வேண்டுமென அறிவுறுத்தினார், உலகின் பல்வேறு நாடுகளிலும் உள்ள மறைபரப்பாளர் இயேசு காட்டிய வழியில் நடந்தார்கள். நோயாளிகளைப் பராமரித்து, இளைஞர்களுக்கு நல்லறிவூட்டி, அநாதைகளுக்கு ஆதரவு நல்கி... வாழ்ந்தனர். இன்றும் வாழ்கின்றனர். அவர்கள் தாம் வாழும் நாட்டின் வளர்ச்சிக்கான பணிகளில் அக்கறை காட்டுகின்றனர். நாட்டு விருத்திக்கான நல்ல முயற்சிகளில் நாட்டு மக்கள் ஈடுபடுவதற்கான பயிற்சியையும் அளிக்கின்றனர், இங்ஙனம் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாக வாழ்கின்றனர், இயேசுவை அறியாத ஆயிரமாயிரம் மக்களுக்கு அவரை அறிமுகம் செய்யும் அரும்பணியை ஆற்றுகின்றனர்.

ஈழம் எங்கள் தாய்நாடு. ஈழநாட்டின் குடிமக்களாகிய எமக்குரிய பெரும் பொறுப்புகள் பலவுள. கிறிஸ்துவின் மறையுடலின் உறுப்புகளாகிய நாம் கிறிஸ்துவைப்போலச் செயற்பட வேண்டும். ஈழவள நாட்டில் கிறிஸ்துவை அறியாதோர் இன்னும் பலர் உளர். எம் நாட்டினர் கிறிஸ்துவை அறியச்செய்ய வேண்டின் நாட்டு விருத்திக்கு நாம் உதவவேண்டும். 'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நனி சிறந்தன, எனும் உணர்வுடன் எம் நாட்டில் அக்கறை கொண்டு உழைத்தல் எமது கடமை. ''உழைப்பு, கடின உழைப்பு, என்றும் உழைப்பு'' இதுவே எமது மூச்சாகவேண்டும். பொருள்களைப் பதுக்கி வைக்கும் ஈனச் செயலைவிட்டு — தேவைக்கு அதிகமான பொருள்களைத் தேக்கிவைப்பதை ஒழித்து — பொது நலனுக்கான பணிகளில் மற்றை

யோருடன் சேர்ந்து உழைத்தல் எமது கடமையாகும். எமது தனிப்பட்ட திறமைகளையும், ஆர்வங்களையும் அறிந்து நாட்டின் நலனுக்காக அவற்றை நெறிப்படுத்தல் அவசியம்.

ஒவ்வொருவரும் பொறுப்பினை அறிந்து செயற்படுவோம். பொதுப் பொறுப்பில் என் பங்கு எதுவெனக் கண்டு, அதை நிறைவேற்றுவேன். இங்ஙனம் நான் செயலாற்றின் படைக்கும் தெய்வீகப் பணியில் பங்குகொள்வேன். அப்போது என் உடன் பிறப்பாளரான நாட்டு மக்களையும் இறைவன்பால் அழைத்துச் செல்வேன்.

கடவுள் திருமொழி:

''நீங்கள் வரிகள் செலுத்துகிறீர்கள்; ஏனெனில்
அரசினர் தங்கள் பணியில் ஈடுபடும் போது
கடவுளுக்கே தொண்டு செய்கின்றனர், ஆகையினால்
அவரவர்க்குச் செலுத்த வேண்டியதை அவரவர்க்குச்
செலுத்துங்கள். வரிப்பணம் வாங்குவோர்க்கு வரிப்பணமும்,
தீர்வை கேட்போருக்குத் தீர்வையும் செலுத்துங்கள்,
அஞ்சவேண்டியவர்களுக்கு அஞ்சுங்கள், மதிக்கவேண்டியவர்களை
மதியுங்கள்'' (உரோமர் 13:6 – 7).

செயல் திட்டம்:

1. ஈழநாட்டிற்கு வந்த மறைபரப்பாளர் மூவர்பற்றிய செய்திகள், படங்கள் சேர்த்தல்.
2. எமது தாய்நாட்டு நலனுக்காக நாம் ஆற்றக்கூடிய செயல்கள் — கலந்துரையாடல் அல்லது உரைப்போட்டி.

வாழ்க்கைக்கு:

அனைத்துலகிலும் பணியாற்றும் மறைபரப்பாளர்க்காக இன்று வேண்டுவேன்.

விடை தருக:

1. நல்ல குடிமகனாக எப்படி வாழலாம் என இயேசு படிப்பித்தார்?
2. மறைபரப்பாளர் ஆற்றிய நாட்டுச் சேவைகள்பற்றி எழுதுக.

ஆய்வுப் பொருள் 7

## பாடம் 56

# நாட்டுப்பணியில் கிறிஸ்தவனின் பொறுப்பு

''இறைவனிடமிருந்து நாம் ஒவ்வொருவரும் சிறப்பான கொடைகளைப் பெற்றுள்ளோம். எனவே நாம் சிறப்பான செயல்களை ஆற்றக்கூடியவர்கள். நீங்கள் கற்கும் வாய்ப்பு அடைந்திருந்தால் மற்றையோருக்குப் படிப்பியுங்கள். புத்திமதி சொல்லக்கூடிய தகைமை உங்களுக்கு இருந்தால் நேர்மையுடன் அதைச் செய்யுங்கள்.

நீங்கள் பணம் படைத்தவர்களாக இருப்பின் இல்லாதோர்க்கு வழங்குங்கள். அதிகாரம் உள்ளவர்களாயின் இரக்க சிந்தையுடன் ஆளுங்கள்.

பிறருக்குப் பணிசெய்யும் வாய்ப்புக் கிட்டின், மகிழ்ச்சியுடன் அதைச் செய்யுங்கள். சோம்பல் உள்ளவர்களாயிராது, சுறுசுறுப்புடன் செயலாற்றுங்கள்! இறைவனுகிய ஆண்டவருக்குப் பணிபுரியும் வழி இதுவே.''

ஆதிக் கிறிஸ்தவர்களான உரோமை வாழ் மக்களுக்கு, வாழும் நெறியை அறிவுறுத்த விரும்பிய புனித சின்னப்பர் இவ்வாறு எழுதினார். புனிதரின் அறிவுரை அன்றைய உரோமையருக்கு மட்டுமல்ல, இன்றைய நாகரிக சூழ்நிலைக்கும், எல்லோருக்கும் ஏற்றது. இலங்கை மக்களாகிய எமக்கும் நல்லது, எமது ஆற்றல்களுக்கும் திறமைகளுக்கும் ஏற்ப எமது தாய்நாட்டுக்குப் பணிபுரிய வேண்டுமென அவர் கூறுகிருர், ஒவ்வொரு கிறிஸ்தவனுக்குமுரிய அலுவல் இது, நான் பிறந்த பொன்நாடு இலங்கை. எம் அனைவருக்குமென இவ்வள நாட்டை இறைவன் தந்துள்ளார். நாம் வாழும் நாடு நமது நாடு அது எமது உரிமை. எமது நாடு எனும்போது நாட்டின்பால் நாம் கொள்ளவேண்டிய பொறுப்புக்கள் பற்றியும் சிந்தித்தல் அவசியம். நாட்டின் வளர்ச்சிக்காக நேர்மையுடன் உழைத்தல் எமது கடமை எல்லோரும் ஓரேவிதமான உழைப்பில் ஈடுபட முடியாதென்பது உண்மையே. ஆனுல் உழைப்போர் எவரும் குறைந்தவரல்லர். செய்யும் தொழிலால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் மனப்பான்மை ஒழித்து ஒவ்வொருவரும் செயற்படுவோம். எவரின் பணியும், எவ்வகை உழைப்பும் நாட்டுக்குத் தேவை. அவரவர் திறமைக்கேற்ப நாட்டு விருத்திக்கான பணியில் ஈடுபடுவோம்.

பல்வேறு திறமைகளுடைய தனிப்பட்டோர் எல்லோரது சேவையையும் நாடு வேண்டி நிற்கிறது. இந்தத் தனித்தன்மை உள்ள பணித்திறனே எனது அழைத்தல், என் பணி — என் அழைத்தல் — எது என அறிந்து அத்துறையில் பயிற்சி பெறவேண்டியது எனது கடமையாகும், எனக்கும் நாட்டிற்கும் இறைவனுக்கும் நல்லதான இப்பணியில் இன்றிலிருந்தே ஈடுபடுவேன், கிறிஸ்தவனுன நான் நாட்டுச் சேவையில் அக்கறைகொள்ளுவேன்.

நாட்டுப்பணி செய்வதற்கு ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடு தடையல்ல. நாம் ஏழைகளாயினும் நாட்டுப் பணிக்கு உதவலாம். சில தருணங்களில் எமது உழைப்பை வேதனமின்றி இலவசமாக வழங்க எவராலும் முடியும், இவ்விதம் பணிபுரிதலைச் சிரமதானம் என அழைக்கிறோம். சிரமதானங்களில் ஈடுபடுவதனுல் நாம் ஏழைகளுக்கு உதவுவோம்; இருக்க இல்லம் இல்லாதோருக்கு இல்லம் அமைத்துக் கொடுக்கலாம். சாலைகளைத் திருத்தியோ, புது வீதிகளை அமைத்தோ பொது நன்மைக்கு உதவலாம். பள்ளிப் பிள்ளைகளாகிய நாம் சிரமதான முறையில் களைபிடுங்குதல், நாற்று நடுதல் போன்ற கமத்தொழிற் பணிகளில் ஈடுபட்டு உழைத்தல்நன்று. எமது திறமைக்கேற்ற பணிகளில் நல்மனதுடன் பங்குகொள்ளின், எம் நாடு வளரும். நாட்டு வளர்ச்சியும் கிறிஸ்தவனுன எனது அழைத்தல் இதை உணர்ந்து வாழ்வேன்.

கடவுள் திருமொழி:

''உங்களோடு இருந்தபொழுது நாங்கள் சோம்பித்திரியவில்லை,
யாரிடமும் நாங்கள் இலவசமாக உணவுகொள்ளவில்லை,
மாருக உங்களுள் யாருக்கும் சுமையாய் இராதபடி
பிழைப்புக்காக இராப்பகலாய்ப் பாடுபட்டு உழைத்தோம்.
நாங்கள் செய்வதுபோலவே நீங்களும் செய்யவேண்டும் என்று
உங்களுக்கு முன்மாதிரிகையாய் இருக்கவேண்டும் என்று
அப்படிச் செய்தோம்'' (2 தெசலோனிக்கர் 3:7—9).

செயல் திட்டம்:

1. எமது நாட்டின்பால் நாம் கொள்ளவேண்டிய கிறிஸ்தவ கடமைகள் எவை?

2. தாய் நாட்டுக்காக உழைத்து அதை விருத்திசெய்தல் இறைவனின் திருவுளத்திற்கேற்ற செயலாகும் — இதற்கேற்ற திட்டம் ஒன்று அமைத்துச் செயற்படுக.

வாழ்க்கைக்கு;

வந்தனைகள் புரிந்தோம் தேவா!
வந்தனைகள் புரிந்தோம்!
வரம்வேறு ஏதும் கேட்டிலோம் இறைவா
வந்தனை ஏற்றருளே!
எமது உழைப்பும் — ஓய்வும் உணர்வும்
உமக்கு அதிமிக மகிமை தரவே!
மனம் உடல் யாவும் அர்ப்பணம் செய்தோம்
உந்தன் சேவையிலே இறைவா!
வந்தனை ஏற்றருளே!

விடை தருக:

1. சமுதாய உறுப்பினராகிய உமது மேலான பொறுப்பு என்ன?
2. சிரமதானம் என்றால் என்ன?

## பாடம் 57

# புத்தர் பெருமான்

விசாக போயா நாள் பற்றி நீங்கள் கேள்வியுற்றிருப்பீகள். சென்ற விசாக தினத்திலே கண்டவையெல்லாம் உங்கள் நினைவில் இருக்கின்றனவா? அன்று எங்கும் அலங்காரம்! எவ்விடத்திலும் ஒளி வெள்ளம்! ஒவ்வொரு பௌத்தரின் வீட்டிலும் ஒரு வெளிச்சக் கூடாவது இருந்ததை அவதானித்திருப்பீர்கள். விசாக நாளிலே எங்கும் அமைதி நிலவும்; வளர்ந்தோர்களும், பாலர்களும் இந்நாளைச் சமாதானமும், புனிதமும் நிறைந்ததாய் ஆக்கப் பெரிதும் முயல்வர்.

புத்தர் பெருமானின் ஞாபகத்தினை இவ்வாறு பௌத்தர்கள் கௌரவிக்கின்றனர்கள், பெருமைப்படுத்துகின்றனர், இவற்றிற்காகவே இந்நாளை இவர்கள் ஒதுக்கி வைத்திருக்கின்றனர். ஏனெனில் பௌத்த சமயத்தின் தாபகரான புத்தர் பெருமானின் வாழ்க்கையிலே குறிப்பிடத்தக்க மூன்று முக்கிய சம்பவங்கள் இத்தினத்திலே தான் நிகழ்ந்தன.

சுமார் இரண்டாயிரத்தைநூறு ஆண்டுகளின் முன்பு இந்தியாவின் வடகிழக்கிலே, இமாலயப் பெருமலையின் தென்சாரலிலே ஓர் அரசு விளங்கியது, இதனைச் சாக்கிய குலத்தவர் ஆண்டனர். சாக்கிய குலத் தலைவன் பெயர் சுத்தோதனன். இவனது தலைநகர் கபில வஸ்து. இவனுக்குப் பட்டத்தரசியாய் விளங்கியவள் மகா மாயா தேவி. அவள் பிள்ளைப்பேற்று நிலையில் இருந்தாள்; அக்கால வழக்கப்படி, மகாமாயாதேவி தன் பெற்றோரின் நகரமாகிய தேவதாகத்திற்குப் பேரூர்வலத்தோடு அனுப்பப்பெற்றாள். செல்லும் வழியிலே விசாக பௌர்ணமி தினத்தன்று, லும்பினி (தற்கால லுமின்தேய்) என்ற அழகிய சால மரச்சோலை ஒன்றிலே, தன் முதற் குழந்தையைப் பெற்றெடுத்தாள். பெற்றோர் இக்குழந்தைக்குச் சித்தார்த்தர் என்று பெயரிட்டனர். இக்குழந்தையின் குடும்பப் பெயர் கௌதமர் என்பது. எனவே சித்தாத்தர், சித்தார்த்த கௌதமர் எனப் பெயர் பெற்றார்.

அரச வாழ்க்கையின் ஆடம்பரங்களுக்கும், வசதிகளுக்குமிடையே இளவரசரான சித்தார்த்தர் வளர்ந்தார். அவர் வளர வளர அரசர்க்குரிய கலைகள் யாவும் கற்பிக்கப்பெற்றன. யாவிலும் அவர் மிகச் சிறந்தார். பதினாறு வயதானதும், இந்திய வழக்கத்திற்கிசைய, அவர் இளவரசி யசோதரையை மணந்தார். எனினும் காலம் செல்லச் செல்லத் தன் தகப்பனின் மாளிகையின் ஆடம்பர வாழ்க்கையில்

அவருக்குச் சலிப்பேற்பட்டது. எந்த நேரமும் சிந்தனையில் மூழ்குவது வழக்கமாயிற்று. ஆனால், சித்தார்த்தர் ஒருநாள் அரசராதல் வேண்டுமென்ற அவாவினால் சுத்தோதனன் தன் மகனை இளவரசருக்குரிய வாழ்க்கையிலே ஈடுபடுத்தப் பெரிதும் முயன்றான். ஆனால் சித்தார்த்தரோ வாழ்க்கையின் இயல்புகளைப்பற்றி அதிகம் சிந்திப்பதிலேயே ஈடுபட்டார்.

இதுவரையும் ஆடம்பர வாழ்க்கையில் வளர்ந்த சித்தார்த்தர். மக்களின் துன்பங்களைக் கண்டார் அல்லர். ஆனால், குறுகிய காலத்தில், ஒன்றன்பின் ஒன்றாகப் பல துன்ப நிகழ்ச்சிகளைக் காண நேர்ந்தது. முதலில், மெலிந்த பலவீனன் ஒருவனையும், அடுத்து நீண்டநாள் நோய்வாய்ப்பட்டோன் ஒருவனையும், இறுதியில் பிணம் ஒன்றையும் அவர் கண்டார். இவற்றின் பயனாக இவ்வுலகம் எவ்வளவு துன்பங்களால் பீடிக்கப்பட்டிருக்கின்றது, என்ற உண்மை அவருக்குத் தெளிவாயிற்று முடிவில்லாத இக்கவலைகளிலிருந்து மனிதன் விடுபடல் கூடுமோ என்று அவர் திகைத்தார். இதற்குப் பின் வீடுவாசல் துறந்து, அலைந்துதிரியும் புனிதத் துறவி ஒருவரைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது, அத்துறவி அமைதியும் சாந்தமும் உருவாகக் காட்சியளித்தார். அவரைப்போலவே தாமும் இல்லற வாழ்க்கையைத் துறந்து, வெளியேறுவதற்கு, சித்தார்த்தருக்கு அவா உண்டாயிற்று. இவ்வாறு திரிந்தால், தாமும், தம்போன்ற மக்களும் கவலைகளிலிருந்தும் தொல்லைகளிலிருந்தும் விடுதலைபெற வழி கிடைக்கும் என்று அவர் எண்ணினார்.

இவ்வேளையில் அவரின் மனைவி தன் முதற் குழந்தையைப் பெற்றாள். இளவரசரான சித்தாத்தர், மாளிகையிலே தான் தொடர்ந்து தங்கினால், ''தம் மனைவியிலும் மகனிலும் பாசம் மேலும் மேலும் உறுதியாய் வளர்ந்துவிடும்; அப்பாசம் மனித துன்ப துயரங்களினின்றும் நீங்குதற்கு வழிகாணும் தன் நோக்கத்திற்குத் தடையாகிவிடும்'' என்பதை உணர்ந்தார். ஆகவே, அரசபதவியைத் துறப்பது என்ற நினைவுறுதியோடு அதனையும், தம் மனைவியையும், குழந்தையையும் விட்டு நீங்கி, வீடற்ற புனித மனிதராய் வாழ்க்கையின் உண்மையை உணரச் சித்தார்த்தர் புறப்பட்டார், பதவிகளையும், பாசத்தளைகளையும் துறந்த இம்மாபெருஞ் செயல், ''மகா முற்றத் துறத்தல்'' என வழங்கும். அப்போது இவருக்கு வயது இருபத்தொன்பது.

இளவரசர் வீடற்று ஆறு ஆண்டுகள் இருந்தார்; அதாவது இவர் இடத்திற்கு இடம் அலைந்து சென்றார். ஞானிகளின் அறிவுரைகளைக் கேட்டார். தாமாகவே, தம்மிலே பல பரிசோதனைகளை நிகழ்த்தினார், பல விடயங்களை அவதானித்தார். எனினும், தாம் தேடிய உண்மையை அவர் கண்டாரல்லர்.

ஆறு ஆண்டுகள் இந்தத் தீவிர தேடுதலின் பின்னர், அவர் ஆழ்ந்த சிந்தனையோடு, பெருமரம் ஒன்றின் நிழலில் அமர்ந்திருந்த ஒருதினம் அவர் தேடிய வாழ்வியல்பின் உண்மை புலனாயிற்று. அவர் உணர்ந்து கொண்டவை (1) நாம் அறிந்தவரை, வாழ்க்கையில் ஒவ்வொருவரும் நோவையும் துன்பத்தையும் அடையவேண்டியே இருக்கிறது. (2) இதற்குத் திட்டவட்டமான காரணம் உள்ளது. (3) அக் காரணங்களை அகற்றினால் கவலை நீங்கும். (4) துன்பத்திலிருந்து அவர் விடுதலைபெறும் வழி உண்டு. விசாக போயா நாளில் புத்தர்பெருமான் கண்ட இம்மெய்யுணர்வு, இவ்வாறு நாலு பிரிவுகளைக் கொண்டிருந்தது. எனவே இது 'மகத்தான நாலு உண்மைகள்' என வழங்கலாயிற்று. மெய்யுணர்வு பெற்ற இக்காலத்திலிருந்து இவர் மெய்ஞ்ஞானி (புத்தர்) என விளங்கப் பெற்றார். மெய்ஞ்ஞானம் பெற்றவேளையில் அவர் அமர்ந்திருந்த இடத்திலுள்ள மரம் வெள்ளரசு எனத் தெரிகின்றது; அவர் மெய்யுணர்வு பெற்ற இடம் ''புத்தகயா'' என இன்று வழங்குகின்றது.

இசபத்தானம் (தற்கால காசியின் அண்மையில்) என்ற அழகான சோலை உண்டு. புத்தர்பகவான் முதன்முதல் தமது ஞான உண்மையினை எடுத்துரைத்த இடம் இதுதான். தம்மோடு முன் உண்மையைத் தேடித்திரிந்த ஐவருக்கு உரையாற்றினார். இவ் ஐவருமே இவர்தம் முதற் சீடர்கள். இந்த முதற்பிரசங்கம் ''தர்மசக்கரத்தின் சுழற்சி ஆரம்பம்'' என்பர். இப்பிரசங்கத்தில் ''ஒருவன் அதிக ஆடம்பரத்தையும் சொகுசையும் வாழ்க்கையில் தேடினால் தீங்கு நேரிடும். அதே அளவு தீங்கு, தன் வாழ்க்கையை, தானாகவே அதிக கஷ்டப்படுத்தினாலும் நேரிடும். ஆகையால் மிகைப்பட்ட போக்குகளுக்கும் இடையிலான 'நடுநிலை நெறிதேடுதல் திறம்' என அறிவுரை வழங்கினார்.

ஞானம் அடைந்தபொழுது புத்தர் பிரானுக்கு வயது முப்பத்தைந்து. மேலும் நாற்பத்தைந்தாண்டுகள் அவர் வாழ்ந்தார். இக் காலம் முழுவதையும் தமது சாகாக்களின் நல்வாழ்விற்கென்றே அவர் அர்ப்பணித்தார். வாழ்வின் பல நிலைகளிலும் இருந்த மக்கள் பலரையும், தனது தேசாந்தர காலத்தில் அவர் சந்தித்தார்; தீமைகளையும், இழிவுகளையும் கைவிடுமாறும், நல்லதும் புனிதமானதுமான வாழ்வை நடாத்துமாறும் அவர்களுக்கு உபதேசித்தார்; வறியவர், செல்வர், உயர்ந்தோர், தாழ்ந்தோர், நல்லவர், தீயவராகிய யாவருக்கும் உண்மைகளை எடுத்துரைத்தார்; எப்பொழுதும் ஞானமும், கருணையும் உடையவராய் விளங்கினார். மிக விரைவிற் பலரும், தம்மை அவர்களின் சீடர்கள் என்று சொல்லிக்கொள்ளத் தொடங்கினர்; ஐவரிலே தொடங்கிய அந்தச் சீடர் கூட்டமானது இன்று ஐம்பத்தைந்து கோடியாக வளர்ந்துள்ளது.

புத்தர்பகவான் தாம் கண்டுணர்ந்த உண்மையினை, உலகிலுள்ள ஒவ்வொருவரும், ஆணோ பெண்ணோ, முயன்றால் தாமாகவே பெற்று விடலாம்; பெறல்வேண்டும் என்று உபதேசித்தார். மனிதராயிருத்தலின் மேம்பாட்டைச் சுட்டிக்காட்டினார். மனிதர் யாவரும் சமமென்பதைப் போதித்தார். சாதிக்கொள்கைகளுக்கு எதிரான பிரசாரம் செய்தார். நோயாளரைப் பேணினார், வறியோர்க்கும் உதவியற்றோர்க்கும் உதவுவதின் முக்கியத்துவத்தை, அவர் தன் வாழ்க்கையால், எடுத்துக்காட்டாய் விளக்கி வழிப்படுத்தினார். பல சந்தர்ப்பங்களில், தனது அதிக கருணை காரணமாக, அவர் தாமாகவே வறியோரையும், நோயாளிகளையும், கவலைப்படுவோரையும் நாடிச்சென்று உதவினார். சாதியிலிருந்து தள்ளப்பட்டவனும் துயரடைந்தவனுமான சிறுவன் சுனீதனுக்கு அவர் குருத்துவப்பட்டதை வழங்கினார். அழுக்கும், தீராத நோயுமுள்ளமையால் தன் தோழர்களாலே கைவிடப்பட்ட பித்தகத்தனதிச என்போனின் புண்களைத் தன் கையாலேயே கழுவிக் கட்டி ஆதரித்தார்.

அகிம்சை, அன்பு, கருணை, பிறர்க்குத் தொண்டுசெய்தல், அவர்களின் நல்வாழ்வினைக் கருதுதல், நோயாளரைப் பேணல் என்பன புத்தர் பிரானின் வாழ்வின் முக்கிய அம்சங்களாகும். அவரின் உதார குணத்தைப் பின்பற்றி, அவர் வழியிற் சென்றோர் இந்தியாவெங்கணும், பிற்காலத்தில் பிறநாடுகளிலும், வைத்தியசாலைகள் நிறுவினர், அவரின் உபதேச மொழிகள் கவலையும், நோவும் கொண்டபலர்க்குச் சாந்தத்தையும் சமாதானத்தையும் ஈந்தன. இவர்களில் ஒருவர், தன் ஒரே பிள்ளையின் மரணத்தினால் பித்தடைந்த கிசா கோத்தமி யாவர்,

விசாக தினம் ஒன்றிலேதான் புத்தர் பெருமான் குசிநார (தற்கால குசி நரகம்) என்ற இடத்திலுள்ள சால மரச்சோலையிலே வாழ்வை நீத்தார். அப்பொழுது அவருக்கு வயது எண்பது. சிங்கள சாகியத்தின் தாபகரான விஜய இளவரசன் இதேதினத்திலேதான் இலங்கையை அடைந்தான் என்று சொல்லப்படுகிறது. ஆகவே விசாகதினம் சிங்கள சாகியத்தின் தோற்றத்துக்கும் முதன்மையான வருடாந்த கொண்டாட்ட நாளாகும்.

உலகிலுள்ள பௌத்தர்கள் யாவரும் கருணைநிறை புத்தம்கானின் பிறந்த, ஞானம்பெற்ற, பரிநிர்வாணமடைந்த நாள் என்பதாலேயே விசாகநாளில் பெருவிழா எடுத்துக் கொண்டாகின்றனர்.

புத்தர் பெருமானின் வாழ்க்கை வரலாறும் உபதேசங்களும் பெருந்தொகையான மக்களுக்கு ஆசிகளை அளித்தன, அளித்துக் கொண்டேயிருக்கின்றன.

---

## பாடம் 58

# முஹம்மத் நபி

(ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்)

### அறபிகள்

தென்மேற்கு ஆசியாவில் உள்ள அறபியா என்னும் பிரதேசத்தில் வதியும் மக்கள் அறபிகள் எனப்படுகின்றனர்.

பதினான்கு நூற்றாண்டுகளுக்குமுன் வாழ்ந்த அறபிகள் மிகக்கொடிய மனிதர்களாக விளங்கினர். இவர்கள் இழிவான பாடல்களைப் பாடுவதிலும் மது அருந்துவதிலும் தம் காலத்தைக் கழித்தனர், அந் நாட்களில் அறபிகள் தம் விருப்பப்படி பல பெண்களை மணந்தனர். ஆண்களின் பிறப்பின்போது மகிழ்வு கண்ட அறபிகள், பெண் மகவு கிடைக்கும்போது துக்கமடைந்தனர். சிலர் தமக்குப் பிறந்த பெண் குழந்தைகளைக் கொலைசெய்தும் உயிருடன் வதைத்தும் வந்தனர். அறபிகள் அநேக தெய்வங்களை வழிபட்டதுடன், விக்கிரகங்களையும் வணங்கினர். மனிதர்களையும் தெய்வங்களுக்குப் பலியிட்டனர். இத் தகைய முறைகளால் தெய்வங்களை மகிழ்விக்கலாம் என்று நம்பினர்; விலங்குகள், தாவரங்கள், கற்பாறைகள், கற்கள் போன்ற பலவற்றைத் தம் தெய்வங்களாகக் கருதினர்.

அறபியாவிலுள்ள மக்கா நகரில் ஓர் ஆலயம் இருந்தது. அது கஃபா என்று அழைக்கப்பட்டது. ஒரே தெய்வ வழிபாட்டுக்காக அமைக்கப்பட்ட இவ்வாலயத்தில் அறபிகள் தம் விக்கிரகங்களை வைத்து வணங்கினர். அங்கே முந்நூற்று அறுபது விக்கிரகங்கள் வைக்கப்பட்டிருந்தன.

### பிறப்பும் பால்யமும்

அறபிகள் பல குலங்களாகவும் கிளைகளாகவும் பிரிந்து வாழ்ந்தனர். இக்குலங்களில் ஒன்று ''குறைஷ்'' என்று அழைக்கப்பட்டது. இக்குலத்தவரே கஃபா எனும் ஆலயத்தைப் பரிபாலித்து வந்தனர். இக்காரணத்தால் குறைஷ் குலம் ஏனைய குலங்களிடம் மிக்க மதிப்பைப் பெற்றது.

குறைஷ் குலத்தில் அப்துல்லாஹ் எனும் பெயருடைய ஒருவர் இருந்தார்; அவர் ஆமினா எனும் பெண்ணை மணந்தார். ஆமினா கர்ப்பவதியாயிருந்தபோது, வெளியூர் சென்றிருந்த அப்துல்லாஹ் வழியில் மரணமடைந்தார். மரணித்து மூன்று மாதங்களின் பின் ஆமினா ஆண் மகவொன்றைப் பெற்றெடுத்தார், இக்குழந்தைக்கு முஹம்மத் என்று பெயர் சூட்டப்பட்டது. முஹம்மத் எனும் அறபுச் சொல்லுக்குப் புகழப்பட்டவர் என்பது பொருள்.

இக்குழந்தை எழுதவோ வாசிக்கவோ வேண்டிய கல்வியறிவைப் பெருது வளர்ந்து வரலாயிற்று. முஹம்மத்தின் ஆரும் வயதில் தாயார் ஆமினுவும் இழந்துவிட்டார். அநாதையான இப்பிள்ளை பாட்டனரின் பாதுகாப்பில் விடப்பட்டது. பாட்டனரும் பிள்ளையின் எட்டாம் வயதில் இறந்துவிட்டார். இதனல் இப்பிள்ளையைப் பராமரிக்கும் பொறுப்பை இவருடைய பெரியதந்தை அபூதாலிப் ஏற்ருர்.

முஹம்மத் தமது பிள்ளைப் பருவத்தை ஏனைய ஏழைச் சிறுவர்களைப் போன்றே கழித்தார். சாதாரண பழக்கவழக்கங்களைக் கொண்டிருந்தார், ஆரம்பத்தில் மந்தை மேய்ப்பவராக விளங்கிய இவர். பின்னர் வர்த்தகம்புரியும் நோக்காகச் சிரியாவுக்கும் வேறு நாடுகளுக்கும் சென்ருர். எத்தொழிலையும் இழிவான தொழிலாகக் கருதவில்லை.

உண்மையும் நேர்மையும் கொண்டவராய் வாழ்ந்த முஹம்மத் எல்லோரின் நம்பிக்கைக்கும் உரியவரானர். மக்கள் தம் பணத்தையும் ஏனைய பொருள்களையும் பாதுகாப்புக்காக இவரிடம் ஒப்படைத்தனர். இவரும் அவற்றைக் கவனமாகப் பாதுகாத்து உரியவரிடம் திருப்பிக் கொடுத்தார். இதனல் இவரை 'அல் அமீன்' என்று மக்கள் அழைத்தனர்.

முஹம்மத்தின் அருங்குணங்களையும் நாணயத்தையும் கேள்வியுற்ற கதீஜா எனும் செல்வப்பெண் தமது வர்த்தகப் பொறுப்பை ஏற்றுச் சிரியாவுக்குச் சென்று வருமாறு இவரை வேண்டினர் இவர் அப்பொறுப்பை ஏற்றுச் செவ்வனே நிறைவேற்றினர். இதனல் மகிழ்வடைந்த கதீஜா சீமாட்டி இவரைத் திருமணம்செய்ய விரும்பினர். எனவே இரு குடும்பங்களின் விருப்பத்தோடு இவர்களிருவருக்கும் விவாகம் நடைபெற்றது. அப்போது முஹம்மதுக்கு வயது இருபத்தைந்து. கதீஜா சீமாட்டிக்கு வயது நாற்பது.

## நீர்க்கதரிசியாதல்

வாலிபரான முஹம்மத், மக்காவுக்குப் பக்கத்தில் இருந்த ஒரு மலைக்குகையில் தனிமையாக இருந்து சிந்தனைசெய்து வந்தார். இறைவனைப்பற்றியும், அவருடைய படைப்புக்களைப் பற்றியும் அவற்றின் இரகசியங்களைப் பற்றியும் சிந்தித்து வந்தார். ஒரு நாள் அல்லாஹ்வின் தூதரான ஜிப்ரீல் அங்கே தோன்றி, ''முஹம்மதே ஓதுவீராக'' என்ருர். ''எவ்வாறு எதனை ஓதுவேன்?'' என்று முஹம்மத் கேட்டார். "யாவற்றையும் படைத்த உம் இறைவனின் பெயரால் ஓதுவீராக'' என்ருர் ஜிப்ரீல். அப்படியே முஹம்மத் நபியும் ஓதினர்.

இந்நிகழ்ச்சியால் அதிர்ச்சியுற்ற முஹம்மது நபி தம் வீட்டுக்குத் திரும்பினர். நடந்தவற்றைத் தம் மனைவியிடம் கூறினர். இதைக் கேட்ட கதீஜா சீமாட்டி தம் கணவரைத் தம் பெரிய தந்தையின்

மகனிடம் அழைத்துச் சென்றார். விவிலிய நூலையும் ஏனைய புனித நூல்களையும் அறிந்திருந்த அவர் முஹம்மதை நோக்கி, ''உம்மிடம் வந்தவர் ஜிப்ரீல் அவர்களே. நீர் இறைவனின் தூதராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்'' என்றார். தம் கணவரின் நற்குணங்களை நன்கு அறிந்திருந்த கதீஜா சீமாட்டி அவர் கூறியவற்றை நம்பினார். முஹம்மத் நபியின் பெரியதந்தையின் மகனான அலியும் இதை நம்பி இஸ்லாத்தை ஏற்றார். இவ்வாறே முஹம்மத் நபியின் சமய போதனை ஆரம்பமானது.

இதன்பின் ஜிப்ரீல் அவர்கள் அடிக்கடி முஹம்மத் நபியிடம் வந்து அல்லாஹ்வை வணங்கவும், நோன்பு நோற்கவும், ஏனைய நற்கருமங்களைச் செய்யவும் கற்றுக்கொடுத்தார்.

முஹம்மத் நபி பெற்ற தூதுகள் அனைத்தும் அவரது சீடர்களால் மனனம் செய்யப்பட்டன. எழுதியும் வைக்கப்பட்டன. இவை யாவும் கோவை செய்யப்பட்டு ஆல்குர் ஆன் என அழைக்கப்படுகின்றன. இதுவே முஸ்லிம்களின் வேதநூல்.

முஹம்மத் நபியின் புகழ் நாடு முழுவதும் பரவலாயிற்று; அவரது போதனைகளைக் கேட்பதற்காக நாட்டின் பலபாகங்களிலிருந்தும் மக்கள் வரலாயினர்; பலர், அவரைத் தமது வழிகாட்டியாகவும் நபியாகவும் ஏற்றுக்கொண்டனர்.

மக்கா வாழ்க்கை

முஹம்மத் நபி அவர்கள், அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும், தாம் அல்லாஹ்வின் இறுதித் தூதர் என்றும், விக்கிரக ஆராதனை தவறானது என்றும் போதித்தார்கள். ''எல்லார்க்கும் அன்பு காட்டுங்கள்; ஏழைகளுக்கு உதவுங்கள்; பிணியாளரைப் பேணுங்கள்; பெண்களின் உரிமைகளைப் பேணுங்கள்'' என்றார்கள். ''பொய் சொல்லாதீர்கள்; களவு செய்யாதீர்கள்; சூதாடாதீர்கள்; மதுவருந்தாதீர்கள்'' என்றார்கள்.

ஆனால் கொடிய அறபிகள் தாம் கைக்கொண்டு வந்த தீச்செயல்களை விட விரும்பவில்லை. முஹம்மத் நபியின் நற் குணங்களையும் நல்ல வேலைகளையும் மறந்து அவருக்குத் தீங்கிழைக்க முனைந்தார்கள். அவருக்குக் குறிசொல்வோன், மாந்திரீகன், பித்தன் எனப் பல்வேறு பட்டங்களைச் சூட்டினர். கற்கள், தடிகள் கொண்டு அவரைத் துரத்தியதுடன் புழுதியையும் குப்பைகளையும் அவரின் தலையிற் போட்டனர். அவரைக் கொலைசெய்யவும் விரும்பினர். அவரை இறை வணக்கத்தில் ஈடுபட விடாமல் பல இடையூறுகளையும் விளைவித்தனர்;

முஹம்மத் நபி அவர்களைப் பின்பற்றியவர்களையும் அறபிகள் துன்புறுத்தினர். சிலரைக் கால்களையும் கைகளையும் கட்டிக் கொதிக்கும் மணலில் விட்டனர். உணவும் நீரும் கொடுக்காமல் வாட்டினர். சிலரைக் கொன்றும் விட்டனர். இத்தனை துன்பங்களையும் அனுபவித்தபோதும் தம் நம்பிக்கையையோ, தாம் கைக்கொண்ட சமயத்தையோ கைவிடவில்லை. இவர்கள் அடையும் துன்பங்களைக்கண்டு நபியவர்களின் இளகிய உள்ளம் பாகாய் உருகியது. ஆகவே சிலரை அயல் நாடான அபிசீனியாவுக்குச் செல்ல அனுமதித்தார்கள். ஆனால் நபியவர்கள் எதற்கும் அஞ்சாமல் தம் போதனையைச் செய்தார்கள். அரேபியத் தலைவர்கள் இலஞ்சம் கொடுத்தேனும் நபியவர்களின் போதனையை நிறுத்த முனைந்தனர். பணமும், தலைமைப் பதவியும் அழகிய பெண்ணும் கொடுத்து இப்போதனையை விடுமாறு வேண்டினர். ஆனால் நபியவர்கள் அவற்றை எல்லாம் ஏற்கவில்லை.

இதனால் கோபமுற்ற அறபிகள் நபிபெருமானாரை மேலும் பல வழிகளில் துன்புறுத்தினர் கருமங்களைப் புரியவிடாது அவர்களைத் தடுத்தனர். அவர்களைக் கொலைபுரியவும் திட்டமிட்டனர். இத்திட்டத்தை நபியவர்கள் ஜிப்ரீல் மூலம் அறிந்துகொண்டார்கள். மக்காவை விட்டு மதீன நகருக்குச் செல்லுமாறு அல்லாஹ்வின் உத்தரவும் வந்தது. எனவே நபியவர்கள் ஏறத்தாழ முந்நூறுமைல் தொலைவில் உள்ள மதினா எனும் நகருக்குச் செல்ல முடிவு செய்தார்.

நபியவர்கள் தமது தோழர் அபூபக்கருடன், ஒரு நள்ளிரவு மதீனாவை நோக்கிப் புறப்பட்டார்கள். நெடுநேரம் பிரயாணஞ் செய்து களைப்புற்றுச் சூரிய உதயத்துக்கு முன்னர் ஒரு குகைக்குள் தஞ்சமடைந்தார்கள்.

மறுநாட்காலை மக்கா வாசிகள், நபியவர்கள் மக்காவை விட்டு நீங்கியதை அறிந்துகொண்டனர். முஹமதைக் கொண்டுவந்து ஒப்படைப்பவருக்கு நூறு ஒட்டகங்களைப் பரிசளிப்போம் என்று மக்காத் தலைவர்கள் அறிவித்தனர். எனவே நபியவர்களைத் தேடியலைந்த சிலர், நபியவர்கள் ஒளித்திருந்த குகை வாயிலருகே வந்தார்கள். நபியவர்களுடனிருந்த தோழர் அபூபக்கர் அவர்கள், தேடிவந்தவர்களின் ஒலியைக் கேட்டு அச்சமடைந்தார்கள். ''அல்லாஹ்வின் தூதரே, எதிரிகள் பலர் நம்மைப் பிடிக்க வந்துவிட்டார்கள். நாம் இருவர்தாமே இருக்கிறோம்'' என்றார்கள். இதைக்கேட்ட நபியவர்கள் ''அபூபக்கரே அஞ்சாதீர்! நாம் மூவர் இருக்கிறோம். ஏனெனில் அல்லாஹ்வும் நம்முடன் இருக்கிறான்'' என்று நம்பிக்கையோடு கூறினார்கள். தேடிவந்தவர்கள் குகை வாயிலை எட்டிப்பார்த்தபின் வேறு இடங்களில் நபியைத் தேடிச் சென்றனர். பின்னர் மூன்று நாட்களுக்குப் பிறகு இருவரும் மதீனாவுக்குப் புறப்பட்டார்கள்.

நபியவர்கள் மக்காவைத் துறந்து மதீனாவை அடைந்த நிகழ்ச்சி ஹிஜ்ரா என்று கூறப்படுகிறது. இந்நாளிலிருந்தே இஸ்லாமிய வருடம் கணிக்கப்படுகின்றது.

## மதீனா வாழ்க்கை

மதீனாவில் தீவிரமாக இஸ்லாம் பரவத் தொடங்கியது. மக்காக் குறைஷியர் முஸ்லிம்களை (இஸ்லாத்தைப் பின்பற்றுவோரை) மதீனாவிலும் அமைதியுடன் வாழவிடவில்லை. எல்லா முஸ்லிம்களையும் கொன்று இஸ்லாத்தை ஒழிக்க விரும்பினர். இதற்காகப் பெரும் படையைத் திரட்டிக்கொண்டு மதீனாவை நோக்கிச் சென்றனர். நபி அவர்கள் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் எதிரிகளிடமிருந்து காப்பாற்றும்பொருட்டு, படைக்கலமேந்திப் போரிடமுடிவுசெய்தார்கள். இப்படிப் பலமுறை போர்கள் நடைபெற்றன. ஈற்றில் முஸ்லிம்களே வென்றனர். மக்கா நகரும் முஸ்லிம்களால் கைப்பற்றப்பட்டது. நபியவர்கள் பெரும் படையுடன் மக்கா நகரில் நுழைந்த போது முழு நகரும் அவர்களிடம் சரணடைந்தது.

வெற்றியின் உச்சக்கட்டத்தில் இருந்தபோதும் நபியவர்கள் கருணையும், தாராள சிந்தையும் கொண்டவர்களாகவே விளங்கினார்கள். குடிகளை நன்றாக நடத்தியதுடன் தம் வீரர்கள் எதிரிகளைக் கொலைசெய்யவோ அவர்களின் உடைமைகளைக் கொள்ளையிடவோ அனுமதிக்கவில்லை. குறைஷியர்க்கும் அவர்களின் தலைவர்களுக்கும் கருணை காட்டினார்கள். தாம் கொல்லப்படுவோம் என்ற அச்சத்துடன் குறைஷியர்கள் நபியவர்களை அணுகியபோது "எனக்குப் பல வகையிலும் இன்னல் விளைவித்த நீங்கள் என்னிடமிருந்து எதனை எதிர்பார்க்கிறீர்கள்?" என்று அவர்களிடம் கேட்டார்கள். அதைக் கேட்ட அம்மக்கள் "நீர் மேன்மக்கள் வழிவந்த மேன் மகனாயிற்றே" என்றார்கள். "உங்கள் யாவருக்கும் மன்னிப்பளித்து விட்டேன்: நீங்கள் சுதந்திரமக்களாகச் செல்லலாம்" என்று கூறி எல்லோரையும் அனுப்பினார்கள் நபியவர்கள்.

நபியவர்களின் தாராள சிந்தையைக் கேள்வியுற்ற அறபிகள் திரள்திரளாக வந்து இஸ்லாத்தைத் தழுவலாயினர், நபியவர்கள் மதீனாவை அடைந்து பத்துவருடங்களுக்குள் அரேபியாவின் பெரும்பான்மையான மக்கள் இஸ்லாத்தை ஏற்றனர்.

## நபியவர்களின் மறைவு

நபியவர்கள் மதீனாவுக்கு வந்து 11 ஆண்டில் தமது சேவை பூர்த்தியானதும் தமது 63-ம் வயதில் நிம்மதியாக உயிர் நீத்தார்கள் இது கிறிஸ்துவுக்குப்பின் 632-ம் ஆண்டு ஜூன்மாதம் எட்டாந் திகதி மதீனாவில் நிகழ்ந்தது. அங்கேயே அடக்கஞ் செய்யப்பட்டார்கள்.

நபியவர்களின் வாழ்க்கைமுறை

நபியவர்கள் எளிமையான வாழ்க்கையைக் கைக்கொண்டிருந்தார்கள். கனமான உடைகளையே அணிந்தும், சாதாரண உணவு வகைகளையே உண்டும் வந்தார்கள். தமது உடைகளையும் பாதணிகளையும் தாமே செப்பனிடுவதை இழிவாகக் கருதவில்லை. வீட்டைச் சுத்தம் செய்தலையும் கால் நடையிலிருந்து பால் கறத்தலையும் தாமே செய்தார்கள். அநாதைகளையும் சிறுவர்களையும் நேசித்தார்கள் பேரீந்து, வாற்கோதுமை, ஒட்டகப்பால் போன்றவற்றை அதிகம் உண்டு வந்தார்கள். முதியோருக்கு மரியாதை செலுத்தினார்கள். ''ஏழைகளை நேசித்து அன்புகாட்டுங்கள். அவர்களை உங்கள் பக்கத்தில் அழையுங்கள். அல்லாஹ் உங்களைப் பக்கத்தில் அழைத்துக் கொள்வான்'' என்று கூறினார்கள்.

நபியவர்கள் எல்ல மனிதர்களுக்கும் எல்லாப் பிராணிகளுக்கும் கருணை காட்டினார்கள். ''பிராணிகளுக்குத் துன்பம் செய்யாதீர்கள'' என்றார்கள். அவர்கள் எவரையும் நிந்திக்கவோ, திட்டவோ இல்லை தமக்கு எல்லையற்ற தீமைசெய்த பரம விரோதியையும் சபிக்கவில்லை.

''மஹமதே, நிச்சயமாகச் சகல உலகங்களும் அருட்கொடையாகவே உம்மை அனுப்பினோம்'' (அல்குர் ஆன்.)

இறுதி நபி

உலகத்தில் வாழ்ந்த நபிமார் அனைவரும் இறுதி நபியொருவர் வருவார் என அறிவித்துள்ளார்கள் என்பது முஸ்லிம்களின் நம்பிக்கை இக்கூற்றின்படி அருளப்பெற்ற இறுதி நபி முஹமத் நபி (ஸல்)அவர்களாகக் கணிக்கப்படுகிறார்கள். அவர்கள் பூரணமான வாழ்க்கைத் திட்டமொன்றைப் போதித்தார்கள். அதுமாத்திரமன்றிப் போதனையின்படி முன்மாதிரியான வாழ்க்கையை நடத்தினார்கள். அதன் மூலம் மனிதவர்க்கத்துக்கு நேரான வழியைக் காட்டினார்கள்.

## பாடம் 59

# இந்து சமயம்

இந்து சமயம் மிகப் பழமையானதொரு சமயமாகும்: இன்று உலகத்திலே நிலவிவரும் சமயங்களுக்குள் மிகப் பழமைவாய்ந்தது இதுவே என்பது ஆராய்ச்சியாளர் முடிவு. ''இந்து'' என்ற பெயர் இந்துசமய நூல்கள் ஒன்றிலும் வழங்கப்படவில்லை. மிகப் பழைய காலத்திலே சிந்துநதிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த மக்களைப் பாரசீகர் ''இந்துக்கள்'' என்றழைத்தனர். நாளடைவில் இந்திய மக்களின் சமயம் இந்துசமயமென வழங்குவதாயிற்று. உண்மையில் இந்து சமயத்தின் சரியான பெயர் 'சனாதன தர்மம்' ஆகும். இது எக்காலத்திலும் எவ்விடத்திலும் ஒப்ப நடக்கும் தர்மம் என்று பொருள்படும்.

இந்து சமயத்திலே பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. எப்பிரிவினரும் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதையும், இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களை தமது சமயத்துக்கு ஆதார நூல்கள் என்பதையும் ஏற்றுக்கொள்கிறார்கள். வேதங்கள் என்பவை இருடிகளுக்கும், ஞானிகளுக்கும் கடவுளால் காலத்துக்குக் காலம் தெரிவிக்கப்பட்ட சமய நூல்களாகும்.

இந்துசமயப் பிரிவுகளுள்ளே தமிழ்மக்களிடையே நின்று நிலவிவரும் முக்கியமான பிரிவுகள் சைவமும், வைணவமும் ஆகும். சிவபெருமானைத் தமது முழுமுதற் கடவுளாகக்கொண்டு வழிபடுவோர் சைவர் என்றும், விஷ்ணுவைத் தமது முழுமுதற் கடவுளாகக் கொள்பவர் வைணவர் எனவும் பெயர் பெறுவர். இவ்விரு பிரிவினரும் தமக்கென வேறு வேறான கிரியைகளையும், சடங்குகளையும் அமைத்து வேறுவேறான விழாக்களையும் கொண்டாடுகின்றனர்.

சிவவழிபாடு புராதன நகரங்களாகிய மொகஞ்சோதாரோ, ஹரப்பா என்பவற்றில் நிலவியது என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்: இன்றும் இமாலயந்தொட்டு இலங்கைவரை சிவவழிபாடு நிலவுகிறது.

இலங்கையிற் பண்டுதொட்டு சைவசமயம் நிலவிவருகிறது. சரித்திரகாலத்திற்கு முன் ஆட்சிபுரிந்த இராவணன் ஒரு சைவனாவன்: இன்று இலங்கைவாழ் இந்துக்களில் ஏறக்குறைய யாவரும் சைவ சமயத்தவர்களாகவே விளங்குகிறார்கள். சைவசமயத்தவர்களுக்கு வேதங்களுடன் சிவாகமங்களும் பிரமாண நூல்களாக அமைந்துள்ளன. இவை வடமொழியிலே உள்ளன. இவை சமய தத்துவங்களை

யும், கோவில் அமைப்புமுறை வழிபாட்டு முறைகளையும் எடுத்துக் கூறுகின்றன.

இறைவன் ஒருவனே என்பது சைவர்களுடைய முடிவு. அப் பரம்பொருளைச் சிவபெருமான் என வழங்குகின்ற அவர்கள் "சிவன்" என்றால் நன்மையைச் செய்பவன் என்ற பொருள்பட உணர்ந்து போற்றுகின்றார்கள், ஒரேயொரு கடவுள் பல்வேறு தொழில்புரியும் நிலை நோக்கிப் பல்வேறு பெயர்களால் வழங்கப்படுகின்றார். சைவத் திருக்கோயில்களும் அங்கேயுள்ள விக்கிரகத் திருவுருவங்கள் முதலான வையும் தத்துவக் கருத்துக்களை விளக்கும் சின்னங்களாக அமை கின்றன.

பிரதான சைவக்கோயில்களிலே தினமும் ஆறுவேளைகளில் பூசனை நடைபெறும். சைவமக்கள் தினமும் திருக்கோயில் வழிபாடுசெய்தல் வேண்டும். செல்ல இயலாதவர்கள் விசேட தினங்களிலாவது கோவி லுக்குச் சென்று வழிபடவேண்டும். வெள்ளிக்கிழமை விசேட தினங் களில் ஒன்றாகும்.

கடவுளிடத்துத் தீவிர அன்பு கொண்டு வழிபடும் பத்திமார்க் கத்தைச் சைவமக்கள் கைக்கொள்ளுகிறார்கள். இப்படி வழிபடும் பொழுது தத்தமக்கு ஏற்ற முறையில் இறைவனுடன் தொடர்பு கொள்ளுகிறார்கள். இறைவனை ஆண்டான் என்ற முறையிலும், தந்தை என்ற முறையிலும், தோழன் என்ற முறையிலும், சற்குரு என்ற முறையிலும் அடியார்களுடைய தொடர்பு அமைந்துள்ளது. ஆனால் எவ்வாறு இறைவனை வழிபடினும் இறுதியில் யாவரும் சென்ற டையும் பரம்பொருள் ஒன்றேதான்.

சைவமக்களுக்குப் பல நோன்புகள் விதிக்கப்பட்டுள்ளன. நோன்பு நாட்களிலே மனத்தை ஒருவழிப்படுத்திக் கடவுளைத் தியானித்துப் பகலும் இரவும் உணவு உட்கொள்ளாதிருந்து அடுத்த நாட் காலை விதிப்படி நோன்பை முடித்துக்கொள்ளுகின்றார்கள்.

சைவமக்கள் உட்பட இந்துக்களின் நாளாந்த வாழ்க்கையையும் சமூக வாழ்க்கையையும் ஓரளவு கட்டுப்படுத்துவன ஸ்மிருதி என்னும் தர்மசாத்திரங்களாகும். இவை சமயவாழ்வு வாழ்ந்த ஞானிகளாலே வகுக்கப்பட்டமையினால் இந்துக்கள் இவற்றைத் தவறாது கடைப் பிடிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறார்கள். ஆயினும் இவை சமய தத்துவங்களைப்போல் என்றும் எவ்விடத்தும் உடன்பாடா னவை அல்ல. காலப்போக்கிற்கும், சுற்றாடலுக்கும் அமைய இவற்றை மாற்றமுடியும்,

தமிழ்ச் சைவமக்களில் காலத்துக்குக் காலம் ஞானிகள் தோன்றித் தமது வாழ்க்கைமூலம் சமயப்பற்றை மக்களிடையே வளர்த்திருக்கிறார்கள். சமய குரவர்களாகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரச நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் என்ற நான்கு சமய அடியார்களும், சந்தான குரவர்களும் காட்டிய பாதையைச் சைவர்கள் எல்லோரும் கடைப்பிடித்து ஒழுக முயலுகின்றனர்.

அன்பை அடிப்படையாகக்கொண்ட சமயம் சைவம். அன்பே சிவம் என்பது இவர்களுடைய அடிப்படைக் கொள்கை, அன்பர் பணிசெய்தும், எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணியும் சமுதாயத்தின் அவலத்தை நீக்கியும், ஏழைகளின் பசிப்பிணியைப் போக்கியும், நோயை மாற்றியும் பணிபுரிந்த வரலாற்றைச் சைவசமய அடியார்கள் வாழ்க்கையில் காணலாம். இறைவனை நம்பினோர்க்கு நாளும் கோளும் துன்பஞ் செய்யமாட்டாவென்றும், கடவுள் நம்பிக்கையே அச்சமின்மைக்கும், வைராக்கிய வாழ்வுக்கும் வழிகாட்டுபவை என்றும் சைவசமயம் எடுத்துக்காட்டுகிறது. இறைவன் திருமுன்பு யாவருஞ் சமம் என்று எடுத்து விளக்குவதையும் சைவத்தில் பரக்கக் காணலாம்.

''தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும்
இறைவா போற்றி''

EVELYN RUT... INSTITUTE
REFER... LIBRARY
JAF...

புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.

EVELYN RUTNAM INSTITUTE * JAFFNA *
REFERENCE LIBRARY
165